

கல்கி
KALKI 4.4.93 ரூ. 3.00
சிப்ஸ்.... சிப்ஸ்..... சிப்ஸ்
அலுக்காத சுவை;
அள்ளிக் கொட்டும் லாபம்!

ஒன்றும் மாறவில்லை



பெயரைத் தவிர

ஏப்ரல் முட்டாள்கள்

யார் யார், யார் யாருக்கு முட்டாள் பட்டம் கட்டுகிறார்கள்?

கருத்து: குமரன் படம்: உமாபதி



அத்வானி வந்ததும் "ராம் ராம்" கோஷம்!

● த. நா. சரித்திரத்திலேயே குறித்த நேரத்தில் ஆரம்பித்த முதல் அரசியல் பொதுக் கூட்டம். அநேகமாக 21 ஆம் தேதி நடைபெற்ற பி. ஜே. பி. மீட்டிங் காகத்தான் இருக்கும்! மிகச் சரியாக ஆறு மணிக்கு வந்தே மாதரத்துடன்(!) ஆரம்பித்து விட்டார்கள்.

● சீரணி அரங்கைச் சுற்றிலும் சுமார் 10 - 15 ஆயிரம் மக்கள். சத்தியமாக இத்தனை கூட்டத்தை எதிர்பார்க்காத ஆச்சர்யம் ஒவ்வொருத்தர் முகத்திலும் பளிச்!

● ஒரு தோராயக் கணக் கெடுப்பில் உள்ளூர்க்காரர்கள், மொத்த கும்பலில் 10% கூட இல்லை! எல்லாம் மயிலாடுதுறை, விழுப்புரம், ராமநாதபுரம், etc. ஒருத்தரை ஒருத்தர் சந்திக்கும் போது 'ஜெய் ஸ்ரீராம்!' என்று கட்டிக் கொள்கிறார்கள்! 'அத்வானிஜி,' 'வாஜ்பாய்ஜி' என்று வடநாட்டுப் பாணியில் குறிப்பிட்டுப் பேசு கிறார்கள்.

● மெரீனாவுக்கு வழக்கமாக வரும் கும்பல், பிற்பகல் மூணு மணியிலிருந்தே ஆப்ஸெண்ட். AIR பில்டிங்கிலிருந்து சீரணி மைதானம் வரை நீ...ள வெறிச்! மக்கள் ரொம்பவும் பயந்திருக்கிறார்கள் போலிருக்கிறது!

● மீட்டிங் தவிர, அனைவர் கவனத்தையும் கவர்ந்தது புதுவித தள்ளுவண்டி 'டிஷ்'. கொஞ்சம் சுண்டல், கொஞ்சம் காய்கறி, ஒரு சம்ஸா, ஓர் அப்பளம், இரண்டு சின்ன ஸைஸ் பூரி, மற்றும் பச்சை வெங்காயம், மேலே தக்காளி ஸாஸ். எல்லாம் கலந்து 5 ரூபாய்க்கு ஒரு பிளேட். கடச்கட பஹ ருசி. அந்த வண்டிகளிலும் காவிக் கொடி! (ஒருவரைக் கொஞ்சம் சீண்டியதில், ''என்ன, ஒரு முன்ஜாக்கிரதை தாங்க!'')

● ஏழு மணிக்கு அத்வானி வந்ததும் ஒரே ராம் ராம் கோஷம்! வாணியம்பாடியிலிருந்து 'ஜோதி' கொண்டு வந்த 22 இளைஞர்கள்



அத்வானி கையில் கொடுத்து, சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தனர்! ஒருவர் காலைத் தொட்டு மூன்று முறை கண்ணில் ஒத்திக் கொண்டார்!

● ஒவ்வொருத்தர் பேசுவதற்கு முன்பும் உள்ளூர்ப் பிரமுகர் ஒருவர் 'கவிதை நடையில்' எழுதி வைத்துக் கொண்டு அறிமுகம் செய்து பேச அழைத்தார். நாலைந்து முறை 'தாக்குதலை'ச் சமாளித்த பின்னர், மேலும் பொறுக்க முடியாமல் கட்சித் தொண்டர் ஒருவர் இப்படிக் கமெண்ட் அடித்தார் : ''ஏதோ, கொஞ்சம் கூட்டம் சேர ஆரம்பிச்சிருக்கு. அது பிடிக்கலை போலிருக்கு!''


● மொத்தம் சுமார் ஆயிரம் போலீஸார். காலையில் ஊர்வலம் இல்லையென்று கட்சியே அறிவித்திருந்தாலும், திடீர் 'ரூமர்' எழுந்ததன் காரணமாய் அதிகம் அல்லல்பட்டிருக்கிறார்கள். ''ஒம்ப தரைக்கு டூட்டி சார்! மத்தியானம் மூக்கா அவர் வந்ச் போக, காலைலேர்ந்து இங்கதான் சார் வெயில்ல சாகறோம்! பாருங்க, இன்னும் அத்வானி வரல. (மணி 6.30) அவரு எப்ப வந்து, எப்ப பேசி, நான் எப்ப வீட்டுக்குப் போறது? நாய்ப் பொழப்பு சார்! ஏற்கெனவே மூணு நாளா வெடிகுண்டு புரளில அங்க இங்க அலைஞ்சி - சரியாத் தூங்கியே ஒரு வாரம் ஆயிடிச்சி சார்!'' - இது ஒரு சென்னை போலீஸ்காரரின் சோக கீதம்.

● குறிப்பிடும்படியான விஷயம் - கூட்டத்தில் பாரத மாதா படம் விற்றதும் - மக்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கியதும். இதுவரை 'மார்க்கெட்டுக்கு' வராத நூதன வஸ்து என்கிற காரணத்தாலேயே அதற்கான மவுஸ் அதிகமாகவே இருந்தது.

– நிருபர்

படம் : டி. ராமமூர்த்தி

எய்ட்ஸ் பிரசாரமும் எதிர்மறை விளைவும்



● எச்.ஐ.வி. வைரஸால் தாக்கப்பட்ட ரத்த செல் ஒரு தொழிற்கூடம் போல் மேலும் மேலும் வைரஸ்களை உற்பத்தி செய்கிறது.

அதிரடி அரசியல் அல்லது ஊழல் செய்தி கிடைக்காத நாட்களில் பரபரப்பு நாளிதழ்களுக்குக் கைகொடுப்பது 'எய்ட்ஸ்' பற்றிய தகவல்கள். டெலிவிஷன், பத்திரிகைச் செய்திகள் மட்டுமின்றி சமூகநல நோக்கிலான விளம்பரங்கள் கூட எய்ட்ஸ் குறித்து எச்சரிக்கின்றன. இதனாலேயே பொது மக்களுக்கு எய்ட்ஸ் பற்றி நிறைய சந்தேகங்களும் எழுகின்றன.

● முடிதிருத்த நிலையத்தில் ஏற்படும் காயத்தினால் எய்ட்ஸ் வருமா?

● உமிழ்நீர் மூலமாக எய்ட்ஸ் பரவுமா? முத்தமிடுவதைத் தவிர்க்க வேண்டுமா?

● பொதுக் கழிப்பிடங்களைப் பயன்படுத்தினால் எய்ட்ஸ் வரக் கூடுமா?

● பொது நீச்சல் குளத்தினை உபயோகித்தால் எய்ட்ஸ் வர வாய்ப்பு இருக்கிறதா?

● கொசுக்கடி மூலமாக மலேரியா பரவும் போது அதே கொசுக்கடியினால் எய்ட்ஸ் பரவாது என்பது என்ன நிச்சயம்...?

இவற்றுள் கடைசி இரண்டு கேள்விகளுக்குப் பதில் நிம்மதியளிக்கும் விதமாகவே இருக்கிறது.

நீச்சல் குள நீரில் 'ப்ளீச்' கலக்கப்படுகிறது. இது நச்சுமுறிவுப் பொருளாகச் செயல்படுகிறது. எனவே அதிலிருக்கக் கூடிய எச்.ஐ.வி. கிருமிகள் அழிக்கப்பட்டு விடும். மேலும், எச்.ஐ.வி. வைரஸ் நேரடி சூரிய வெளிச்சத்திலும் காற்று வெளியிலும் 15-20 நிமிடங்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது.

கொசு நம் உடலிலிருந்து ரத்தத்தை உறிஞ்சுகிறதேயொழிய உட்செலுத்துவதில்லை. அதனால் கொசுக்கடி மூலம் எச்.ஐ.வி. பரவ முடியாது. மேலும், கொசுவின் வயிற்றுக்குள் செல்லும் மலேரியா கிருமிகள் இரட்டிப்பு ஆகின்றன. இவ்வாறு எச்.ஐ.வி. கிருமிகள் கொசுவின் உடலில் பெருகுவதில்லை.

முடிதிருத்த நிலையத்தில், எய்ட்ஸ் கிருமி பாதிப்பு உள்ள ஒருவரின் பேரில் உபயோகிக்கப்பட்ட கத்தி அவருக்குக் காயம் ஏற்படுத்த, அதே கத்தி பிறர் உடலில் பட்டு காயத்தை ஏற்படுத்தினால் என்னாகும்...?

இந்த மாதிரி சந்தர்ப்பம் கோடியில் ஒருவருக்கே நேரக்கூடும். முடிதிருத்த நிலையங்களில் சுகாதாரம் கடைப்பிடிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்துவதும் அவசியம்.

உமிழ்நீரில் எச்.ஐ.வி. கிருமிகள் இருக்கக்கூடும் என்றாலும், அவற்றின் அளவும்

வீரியமும் மிகக் குறைவு. 'ப்ரீ ப்ளோட்டிங்' என்ற நிலையில் இக் கிருமிகள் இருக்கும்.

நம் உடலின் எதிர்ப்பு சக்தியின் காவலன் டி-4 என்ற செல் வகை. இந்த செல்லை எச்.ஐ.வி. கிருமி துளைத்து உட்புகுந்தால், காலப் போக்கில் (பத்து ஆண்டுகள் கூட ஆகலாம்) கிருமிகள் பெருகி, டி 4 செல்லின் மையத்தைக் (nucleus) கொன்று விடும். அதே நேரத்தில் செல்லுக்குள் கிருமிகள் பெருகியதால் அது வெடித்து, ஏராளமான எச்.ஐ.வி. கிருமிகள் பிறக்கும். 'ப்ரீ ப்ளோட்டிங்' நிலையில் உள்ள எச்.ஐ.வி. கிருமிகளை விட இந்த டி4 செல்லிலிருந்து வெடித்து வெளிப்படும் கிருமிகள்தான் பயங்கரமானவை.

உமிழ்நீரில் டி4 செல்களே கிடையாது என்பதால் அதன் மூலம் எய்ட்ஸ் பரவும் என்று கருத இடமில்லை. இரத்தம் கலந்த உமிழ்நீர் திறந்த புண்ணில் பட்டால் மட்டுமே எச்.ஐ.வி. கிருமிகள் எளிதில் பரவும் வாய்ப்பு இருக்கிறது.

பொதுக் கழிப்பிடங்களைப் பயன்படுத்துவோர் எச்.ஐ.வி. குறித்து அஞ்ச வேண்டாம். இந்தியப் பாணி கழிப்பறைகள் மூலம் அவை பரவாது. மேற்கத்திய பாணி கழிப்பறைகளின் டாய்லெட் சீட்டுகளில் எச்.ஐ.வி. கிருமி கலந்த ரத்தக்கறை இருந்து, அந்த டாய்லெட்டைப் பயன்படுத்தும் அடுத்த நபரின் உடலிலும் காயம் இருந்து, அந்தக் காயத்தின் வழியே டாய்லெட் சீட்டில் உள்ள கிருமிகள் உட்புகுவது என்பது மிக மிக அரிதே. அத்தகைய அசுத்தமான கழிப்பறையைப் பொதுவாக ஒருத்தரும் பயன்படுத்த மாட்டார்கள் என்பதால் இந்த பயம் தேவையற்றது என்றே சொல்லலாம்.

இந்த விளக்கங்களை அளிப்பது எய்ட்ஸ் இன்ஃபோசெல் என்ற அமைப்பு.

இவ்வமைப்பினைச் சேர்ந்த சி. ஒய். கோபிநாத், நம் நாட்டில் எய்ட்ஸ் எச்சரிக்கைப் பிரசாரத்தை சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம் என்று வலியுறுத்துகிறார். அதே நேரத்தில் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பது பற்றியும் தீவிரமாக யோசிக்க வேண்டியுள்ளது என்கிறார்.

உலக சுகாதார அமைப்பின் அதிகாரி ஒருவர் சொல்வதைக் கவனியுங்கள் : ''இந்தியாவில் நிலவும் சூழ்நிலை வித்தியாசமான ஒன்று. இங்கு மதவாரியான, மொழிவாரியான பிரிவினைகள் இருக்கின்றன... ...மேலும் நோய் எதிர்ப்பு சக்தி என்றால் என்ன என்றே தெரியாதவர்களிடம் எயிட்ஸ் என்பது Acquired Immuno Deficiency Syndrome என விளக்கிச் சொல்ல முடியுமா...?'' என்று கேட்கிறார் அந்த அதிகாரி.

எனவே நம் நாட்டில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம் நமது கலாசார பின்னணியை மனத்தில் கொண்டு உருவாக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம். எவ்வளவுதான் மேற்கத்திய மோகம் இருந்தாலும் நம் வாழ்க்கை முறையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவம் இன்னமும் மாறவில்லை. திருமண பந்தத்திற்கு உட்படாத உடல் உறவு தவறு என்ற தார்மிகக் கருத்து இன்னமும் நமது வாழ்க்கையை நிர்ணயிக்கிறது.

தகாத உடலுறவுகள் மூலமாகவே எய்ட்ஸ் அதிகமாகப் பரவுகிறது என்பது நிதர்சனமாக இருக்க, Safe sex - பாதுகாப்பான உடலுறவு குறித்த பிரசாரங்கள் ஆரோக்கியமானவையா என்று நாம் ஆழ்ந்து சிந்தித்து, ஆராய வேண்டியுள்ளது.

கட்டுப்பாடான ஒரு சமூகத்தில் இத்தகைய விளம்பரங்களால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படக்கூடும். ஆணுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாதுகாப்பு பெற்று விட்டால் முறைகேடாக நடந்து கொள்வதற்கு உரிமம் அளிக்கின்ற தொனி இந்த விளம்பரங்களில் இருக்கிறது. மாறாக நமது தொன்மையான தார்மீக நெறிகளை வலியுறுத்தி முறைகேடான உடலுறவுகளைப் பலமாக எதிர்க்கும் பிரசார இலக்கை வகுப்பதுதான் புத்திசாலித்தனம். ஆழமான அன்பின் அடிப்படையிலான உடலுறவு மட்டுமே ஆரோக்கியமானது என்பதும் சரியான பருவத்தில் இளைஞர்களின் மனத்தில் பதிய வைக்கப் பட வேண்டும்.

விலை மாதர்களாகிப் போய் அதிலிருந்து விடுபட முடியாமல் துன்பப்படுவோரிடையே பாதுகாப்பான உடலுறவு குறித்து எச்சரிக்கும் பணியைத் தனிப்பட்ட முறையில் செய்யலாம்.

ஆனால் நடப்பது என்ன...?

ஆணுறைகளுக்கான விளம்பரம் என்று கூறிக் கொண்டு காம இச்சையைத் தூண்டும் விளம்பரங்களே வெளியாகின்றன. இவை குடும்பக் கட்டுப்பாட்டுக்கு உதவலாம்; மனக் கட்டுப்பாட்டைத் தகர்க்கின்றன. எய்ட்ஸ் பரவாமல் தடுக்கலாம்; ஒழுங்கீனம் பரவுவதை ஊக்குவிக்கின்றன.

தகவல் தொகுப்பு : நமது நிருபர்



''இனிமே கோர்ட்டுக்கு வராமலிருக்க முயற்சி பண்ணுப்பா...''

''எனக்கு ஆசைதான் சாமீ... ஆனா போலீஸ் விட மாட்டேங்குதே...!''

- மதுரை ஜெயஸ்ரீராஜ்

திரு.வி.க. நகர் பெனி:பிட் :பண்டு லிமிடெட்

ஸ்தாபிதம் : 1989

தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் அருகில்),
சென்னை - 600 082. போன் : 610390
பாரீஸ் கிளை : 49, வெங்கடாசல முதலி தெரு, முதல் மாடி, (கந்தசாமி கோயில் அருகில்),
சென்னை - 600 003. போன் : 565760

டெபாசிட் திட்டங்கள்

பென்ஷனர் டெபாசிட்

குறைந்த பட்ச டெபாசிட்	காலம்	வட்டி விகிதம்
ரூ.10,000	1 வருடம் 2 வருடங்கள் 3 வருடங்கள்	21%

★ இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றோர், 50 வயது அடைந்தோர், விதவைகள், உடல் ஊன முற்றோர் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளை களும் பயன் பெறலாம்

★ பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்

★ வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே அளிக்கப்படும்.

வைப்பு நிதி

காலம்	வட்டி விகிதம்	
	ரூ.10,000 க்கு கீழ்	ரூ.10,000 மும் அதற்கு மேலும்
1 வருடம்	17%	18%
2 வருடங்கள்	18%	19%
3 வருடங்கள்	19%	20%

★ குறைந்த பட்ச டெபாசிட் ரூ.1,000

★ பிரதி மாதம் வட்டி வழங்கப்படும்

★ குறைந்த பட்சம் ரூ.10,000 டெபாசிட் செய்தால் வட்டிக்குரிய காசோலைகள் முன்னதாகவே அளிக்கப்படும்.

மறுமுதலீட்டுத் திட்டம்

டெபாசிட் தொகை	காலம்	கால இறுதியில் பெறும் தொகை
ரூ.1,000	12 மாதங்கள்	1,185
	24 மாதங்கள்	1,430
	36 மாதங்கள்	1,760
	44 மாதங்கள்	2,000

ஐஸ்வர்யா டெபாசிட்

டெபாசிட் தொகை	காலம்	கால இறுதியில் பெறும் தொகை
ரூ.1,000	10 வருடங்கள்	6,919
	15 வருடங்கள்	18,885
	20 வருடங்கள்	52,827
	23 வருடங்கள்	95,760

★ மாதாந்திர சேமிப்புத் திட்டத்தில் பிரதி மாதம் ரூ.25 செலுத்தி 12 மாதங்கள் கழித்து ரூ.330 பெறுங்கள்.

★ சேமிப்புக் கணக்கில் உள்ள நிலுவை தொகைக்கு நாள் தோறும் 12% P.A. வட்டி வழங்கப்படும்.

★ நகையின் பேரில் ஒரு சவரனுக்கு ரூ.2,500 வரை கடன் வழங்கப்படும்.

★ வீட்டின் பேரிலும் கடன் வழங்கப்படும்.


★ பங்குதாரர்களுக்கு மட்டும் ★ ரூ.1 செலுத்தி ஒரு பங்கு பெற்றுக் கொள்ளுங்கள்.

★ இது சீட்டு நிறுவனம் அல்ல

Ideal/93

வேலை நேரம் :
தலைமை அலுவலகம் : காலை 9 முதல் 5 வரை. ஞாயிறுகளில் 9 முதல் 12.30 வரை. செவ்வாய் விடுமுறை.
பாரீஸ் கிளை : காலை 10 முதல் 5 வரை. ஞாயிறு விடுமுறை.

✤ பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள் ✤



முதல் ரவுண்ட்ல ஜெயிச்சிட்டா ஆச்சா?... அடுத்தத, உன் பவரைக் காட்டு!...
அர்ஜுன்சிங்
பொதுத்தேர்தல்
காங்கிரஸ் காரியக் கமிட்டி
பிரதமர்
என்ன, நாற்காலி நம்மளைத் தாங்குதா, நாம நாற்காலியத் தாங்கணுமான்னு புரியாம சங்கடமா இருக்கில்ல...
பதவி
நரசிம்மராவ்
அரசியல்வாதி
உளவுத் துறை
பயங்கரவாதம்



கல்கி



1993
ஏப்ரல் 4
மலர் : 51
இதழ் : 36
ஆங்கீரச
பங்குனி 22

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்றுகும்பிடடி
பாப்பா. -பாரதியார்.

அர்ஜுன்சிங்கை அலட்சியம் செய்யாதீர்கள்!

பெரும்புயலாகச் சீறி எழுந்த காங்கிரஸின் உட்கட்சிப் பூசல் ஒருவாறு அடங்கித் தென்றலாக மாறித் தவழ்ந்ததற்கு, அர்ஜுன்சிங்குக்கு முதல் நன்றி. எடுத்துக் கொண்ட நிலையிலிருந்து பின்வாங்கி, தாம் கூறியவை வற்றை வாபஸ் பெறுவது என்பது சாமானிய விஷயம் அல்ல. வரட்டு கௌரவம் பாராமல், நாட்டின் எதிர்காலம் கருதி அர்ஜுன்சிங் அடங்கிப் போனார். "தாம் ஓரங்கட்டப்படுவதை விரும்பாமல் விட்டுக் கொடுத்தார்" என்று அவரை எதிர்ப்பவர்கள் பேசக் கூடாது. இப்படிப் பரிகசிப்பதை விட, அவரது பெருந்தன்மையைப் போற்றி அரவணைப்பதே விவேகம். அவர் மீது எடுக்கப்பட உத்தேசித்திருந்த ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதும் நல்லதே.

உட்கட்சி ஜனநாயகம் தேவைதான். அர்ஜுன்சிங் தமது கருத்துக்களை வெளியிடுவதிலும் பிசகில்லை. ஆனால் அதை முறைப்படி செய்திருந்தால் பிரச்னை ஏற்பட்டிராது. காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் போன்றவற்றில் தமது கருத்துக்களைக் கூறி விவாதத்தை ஊக்குவித்திருக்கலாம். அப்போது அவர் கை பலப்பட்டிருக்கக்கூடும். ஆனால் உட்கட்சி ஜனநாயகம் என்பதைத் தலைமைக்கு எதிராகத் தோள் தட்டும் சவால் நாடகமாக மாற்றி விட்டதுதான் தவறு. கோஷ்டி சேர்ப்பது பலப்பரீட்சையில் இறங்குவது போன்றவை கட்சிக்கு மட்டுமின்றி, காங்கிரஸ் ஆளும் கட்சியாகவும் இருப்பதால் நாட்டுக்கே ஆபத்து.

அர்ஜுன்சிங்கின் பிரதான கோரிக்கை "ஒரு நபர், ஒரு பதவி" என்பதாகும். அதாவது, 'பிரதமரே கட்சித் தலைவராகவும் இருக்கக் கூடாது' என்பது அவர் வாதம். "பிரதமருக்கு அப் பதவிக்குரிய பல வேலைகள் இருக்க, கட்சிக்கு நேரம் ஒதுக்க முடியாது. இதனால் கட்சி பலவீனமடையும். இன்று பி.ஜே.பி. பலமான சக்தியாக வளர்ந்து வருகிறது. அதை எதிர்த்துப் போராட காங்கிரஸ் வீறு கொண்டு எழ வேண்டும்."

இந்த வாதங்களில் நியாயம் இருக்கிறது. மறுக்கவே முடியாது. ஆனால் மறு பக்கத்தையும் பார்க்க வேண்டும். இன்று இந்தியா ஒரு திருப்புமுனையில் உள்ளது. பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றுப் பாதையில் செல்கிறது. இந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சிக் கொள்கையும் ஆட்சிக் கொள்கையும் ஒன்றாக இருந்து ஒன்றையொன்று அனுசரித்துப் போக வேண்டும். கட்சிக் கொள்கை வித்தியாசப்பட்டால் பிறகு, 'கட்சி பெரிதா? ஆட்சி பெரிதா?' என்ற சிக்கல் உருவாகும். கட்சிக் கொள்கைக்கு ஏற்பவே ஆட்சி நடக்க வேண்டும் என்று ஆட்சித் தலைவர் நிர்ப்பந்திக்கப்படலாம். இது பொருளாதாரக் கொள்கைக்கு மட்டுமின்றி, வேறு பல கொள்கைகளுக்கும் விஸ்தரிக்கப்பட வாய்ப்புண்டு.

ருஷ்யா முழு கம்யூனிஸ நாடாக இருந்த போது கட்சித் தலைமைக்குத்தான் பூரண அதிகாரம். கட்சித் தலைமை கூறுவதை அல்லது ஆமோதிப்பதைத்தான் ஆட்சித் தலைவர் நிறைவேற்றி வைக்க முடியும். அப்படிப்பட்ட நிலை இங்கு உருவாக வித்திடப்படலாம்.

ஆட்சித் தலைவர் பெரும் செல்வாக்கு உள்ளவராக (நேருஜி போல) இருந்து, கட்சித் தலைவரும் கைகூப்பி அல்லது கைகோத்துச் செல்பவராக இருந்தால் பிரச்னையில்லை. அப்படி இல்லாத போது சிக்கல்கள் தோன்றவே செய்யும்.

இந்த மறுதரப்பு வாதத்தை வலியுறுத்துவதால் அர்ஜுன்சிங்கின் எச்சரிக்கைகளை அலட்சியம் செய்ய வேண்டும் என்பதில்லை. பிரதமரே கட்சித் தலைவராகவும் ஆட்சித் தலைவராகவும் இருக்கட்டும். அதே சமயம், பி.ஜே.பியைத் தேர்தல் களத்தில் சந்திக்கவும் இதர பல முக்கிய கட்சிப் பணிகளைக் கவனிக்கவும் சீரான கொள்கைகளை உருவாக்கி, அந்த எல்லைகளுக்குள் திட்டங்களை வகுத்துச் செயல்பட, செல்வாக்கு மிகுந்த கட்சித் தலைவர்களுக்குப் பிரதமர் பூரண சுதந்திரம் அளிக்கலாம்.

இன்றைய குருக்ஷேத்திரத்தில் காந்தீயத்துக்கும் அத்வானியத்துக்கும் போர். மதச் சார்பின்மைக்கும் ஹிந்து ராஷ்டிரத்துக்கும் யுத்தம். "அமைதியா, தொடர் குண்டு வெடிப்பா? எது வேண்டும்? மசூதி இடித்து ராமர் கோயில் கட்டுவதா? மசூதியைக் காத்து ராமர் கோயில் கட்டுவதா?" என்பது பிரச்னை. "உலகெங்கும் உள்ள கோடானுகோடி முஸ்லிம்கள் நம் விரோதிகளா? அல்லது, நண்பர்களா?" என்பது கேள்வி. அதர்மம் வென்றால் நரசிம்மராவ் தான் பொறுப்பு ஏற்க நேரும். குருக்ஷேத்திரத்துக்குக் காங்கிரஸ் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளட்டும்.



குறளுக்குப் பதில் பரணி பழக்கலாம்!

◆ மூன்றாவது வரை படித்துவிட்டு, முப்பத்தி யொரு நூல்களைப் படைத்திருக்கும் உத்தம் பந்து தாபியை நினைத்து ஆச்சர்யப்படுகிறேன்.

புதுவண்டிப்பாளையம், த. ரவீந்திரன்.

◆ இந்த வாரம் போயஸ் தோட்டத்திற்குப் போய் வந்த ஆபீஸ் பையன் எங்களைச் சிரிக்க வைத்து வயிற்றைப் புண்ணாக்கிவிட்டார். அதனால் அங்கேயே போய் எங்களுக்கு மருந்து வாங்கி வரச் சொல்லுங்கள் அவரை...!

திருச்சி - 20, ஆர். உமா.

◆ 'எஜமானி'ன் அபரிமிதமான குறைகளையும், நிறைகளையும் எடுத்துக் காட்டிய உமது நடுநிலையான பட விமர்சனம் அருமையாக இருந்தது.

திருச்சி - 8, இ.மா. தமிழ்முருகன்.

◆ தலையங்கம் எழுதுவதற்கு எனத் தனி மந்திரப் பேனா வைத்துள்ளீர்களா? சிந்திக்க வைத்த தலையங்கம். அ.தி.மு.க.வின் உண்மையான விரிவின் அர்த்தத்தை நினைத்துச் சிரிக்க வைத்தது.

மதுரை - 2, ம. செந்தில் நாதன்.

◆ அமைச்சர் தாமதமாக வந்ததற்குச் சுவர் கடிகாரத்தைப் பரிசாக அளித்த கிராமவாசி பிழைக்கத் தெரியாதவர் என்றுதான் கூற முடியும்! பரிசுகள் கிடைப்பது தெரிந்தால் இன்னும் தாமதமாக வர ஆரம்பித்துவிடுவார்களே நமது அரசியல்வாதிகள்!

தூத்துக்குடி - 1, என். சம்பத்.

◆ அமைச்சருக்குச் சூடு கொடுத்த சிக்மகளூர் கிராமவாசியின் துணிச்சலைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. இந்தியாவின் ஒவ்வொரு கிராமவாசியும் என்று இந்தத் துணிச்சலைப் பெறுகிறார்களோ அன்று இந்தியாவுக்குப் பொற்காலம்!

அரசரடி, நெல்லை.வி. சிவா.

◆ சுந்தரம் ஃபாஸனர்ஸ் நிறுவனத்தின் இமாலய சாதனையை நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது. சுரேஷ் கிருஷ்ணாவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.

◆ அர்ஜுன் சிங், சரத்பவார் இருவரைப் பற்றிய பல்வேறு விஷயங்கள் புதியன அல்ல என்றாலும், ஒரு விஷயம் மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் இருவரும் சிறந்த அரசியல்வாதிகளாகத் தெரிகிறார்களே தவிர நாட்டின் நலனை உத்தேசித்து அதை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வார்களா என்ற கேள்விக்குப் பதில்....?!!

சென்னை - 33, உத்ரராயன்.

◆ அதிருப்தியாளர் கோஷ்டி என்பது காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் ஒரு அன்றாட வழக்கமாகி விட்டது. எனவே காங்கிரஸ் கட்சிக்குள் 'அதிருப்தியாளர்களைச் சரி கட்டும்' கமிட்டி ஒன்றை நிரந்தரமாக அமைப்பது, அக் கட்சி மற்றும் நாட்டு மக்கள் - இருவருக்கும் பயனுள்ளதாக அமையும்! கட்சியின் தலைவர் என்ற முறையில் பிரதமர் அரசாங்க நிர்வாகத்தைவிட்டு விட்டு அதிருப்தியாளர்கள் பிரச்னையைத் தீர்க்கவே தம் நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது! இந்த நிலை மாறும். காங்கிரஸ் கட்சி இதனை ஏற்படுத்தினால், மற்ற அரசியல் கட்சியினரும் அதை முன்னுதாரணமாக வைத்து, தாங்களும் அப்படியே கமிட்டி அமைத்து விடுவார்கள். மத்திய மாநில அரசு நிர்வாகங்கள் தடையில்லாமல் நடக்கும்!

இத்தவார் - 4, எஸ். ஆலன்.

◆ பிரதமர் பதவி மீதே குறி வைக்கிறார்கள்' அட்டைப்படக் கட்டுரை படித்தேன். சரத் பவார், அர்ஜுன் சிங், நரசிம்மராவ் என முத்தரப்பு நடவடிக்கைகளையும் பாகுபாடின்றி ஆராய்ந்து, ஒரு நல்ல அலசல் கட்டுரையை அளித்திருந்தீர்கள்.

மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

◆ மதுமிதாவின் 'ஜ்யோத்ஸனா', கருவில் இருக்கும் சிசுவைக் காப்பாற்ற முனைந்த தாய்மையின் இரக்க குணத்தையும் சத்தியசந்தனின் 'சகமனிதன் என்பவன்' காயம் அடைந்த மனிதனைக் காப்பாற்ற முன் வந்த ஆண்மையின் பிடிவாதவேகத்தையும் கூறியது. உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் எனச் சொல்லாமல் சொல்லிய கதைகள் இவை.

சிதம்பரம், ஆர். தமிழ்மணி.

◆ சத்தியசந்தனின், 'சக மனிதன் என்பவன்', சிறுகதை, இந்த நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட நல்ல மனிதர்கள் இருக்கிறார்களா என என்னை ஆச்சரியப்பட வைத்தது!

மதுரை - 10, ஆர். மீனாட்சி.

◆ ஒவ்வொரு நாளும் சட்டசபைக் கூட்டம் தொடங்கும் முன்பு சபாநாயகர், திருக்குறளிலிருந்து ஒரு குறளைப் படிப்பது, ஒரு வழக்கமாக இருக்கிறது. இப்போது காங்கிரஸ் எதிர்க் கட்சியாக உருமாறி, சட்டசபை, புதுத் தோற்றம் பூண்டிருக்கிறது. இதற்குத் திருக்குறள் சரிப்பட்டு வரவில்லை. அதற்குப் பதிலாகக் கலிங்கத்துப்பரணியிலிருந்து தினமும் ஒவ்வொரு பாடலைப் படித்தால், நிகழ்ச்சிகளில் இன்னும் களையும் சூடும் ஏற வாய்ப்புண்டு!

திருச்சி - 9, கண்ணம்மா இராமசாமி.



மணி
மல்லிகை

வாரம்தோறும்
திங்களன்று வெளிவருகிறது

உங்கள் ஜாதக பலனை கேட்டறியுங்கள்

ஜோதிட போன்

வார பலன்கள்

☎ 001 609 936 34 + ☐☐

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் சூரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் சேர்த்து டயல் செய்யவும்



டாரட் பலன்கள்

ஒரு பண்டைய ஆருட முறை.
உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கிறது.

அழையுங்கள் :

001609 936 3450

பொருத்தம்

நீங்களும் உங்கள் துணையும் எவ்வாறு ஒத்துப்போக முடிகிறது?

அழையுங்கள் :

001609 936 3474

Anthem



சிப்ஸ்.... சிப்ஸ்..... சிப்ஸ்

அலுக்காத சுவை; அள்ளிக் கொட்டும் லாபம்!

அது '91 பிற்பகுதி.

சென்னை தி. நகரில் ஒரு வீடு. நான்கு நண்பர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். தங்களின் வருங்கால திட்டங்கள் பற்றின கருத்தரங்கு.

'நல்லது. ஏதாவது சாப்பிட்டபடி பேசலாமே.' பையனைக் கடைக்கு அனுப்புகிறார்கள். சற்று நேரத்தில் சிப்ஸ் வருகிறது. கூம்பு வடிவ தினத்தந்தியில் எண்ணெயின் மாடர்ன் ஆர்ட். பிரித்து, தட்டில் கொட்டினால் மிளகாயப் பொடியின் நெடி 'குப்'. தொட்டால் பிசுக்கு. வாயில் இட்டால் காரம். சாப்பிட்ட அரைமணிக்கு அடித்தொண்டையில் கமறல். சே... இத்தனை மோசமான உருளைக் கிழங்கு சிப்ஸை அவர்கள் அன்றுவரை பார்த்ததே இல்லை. ஆனால் சிப்ஸ், பிரசித்தி பெற்ற பலகாரக் கடை ஒன்றில் வாங்கினது தான். அங்கேயே இப்படியென்றால், தெருவோரக் கடைகளில்...?

யோசனை வலுக்கிறது. எதிர்காலத் திட்டம் ஏன் சிப்ஸ் தயாரிப்பாக இருக்கக் கூடாது?

நிச்சயம் எண்ணெய் வழியும் சிப்ஸ் அல்ல; தரமான, உயர்ந்த தரமான, பல்வேறு வகையிலான, தீராத ருசியிலான சிப்ஸ் நாமே தயாரித்தால் என்ன?

'92 ஆரம்பத்தில் 'சிப்ஸ் பாயின்ட்' பிறக்கிறது.

ஆரம்பித்த ஒரே வருடத்தில் இரு கிளைகளையும், ஏராளமான வாடிக்கையாளர்களையும் கொண்டு, படு சுறுசுறுப்பாய் இன்று செயல்பட்டு வருகிறது சிப்ஸ் பாயின்ட்.

சிப்ஸ் தயாரிப்பதில் இத்தனை பரபரப்புக்கு இடமிருக்கிறதா? பெரிசாக சாதிக்க முடிகிறதா? 'சிப்ஸ் பாயின்ட்' நிறுவனர்களில் ஒருவரான வேங்கடராமனை (30)ச் சந்தித்துக் கேட்டோம்.

* வேங்கடராமன்



''கேரளாவில் நேந்திரங்காய் சிப்ஸ் ரொம்ப பாப்புலர். அதை வேறு எந்த வகையில் சமைத்தாலும் இந்த அளவுக்கு ருசிக்காது. எனவே அங்கு மூலைக்கு மூலை சிப்ஸ் கடை. எல்லா இடத்திலும் ஓரளவுக்கு க்வாலிட்டி மெயின்டெயின் பண்ணுவார்கள். ஆனால்

இங்கு அப்படி இருப்பதில்லை. தரமாக முழுச் சுகாதாரத்துடன் இங்கேயும் தயாரித்தால் என்ன என்ற எண்ணம் தோன்றிற்று. இன்றைக்கு 'சிப்ஸ் பாயின்ட்' இத்தனை வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதற்கு அதுதான் காரணம்.''

கிழங்கைச் சீவி எண்ணெயில் பொறித்தால் சிப்ஸ்! இதிலென்ன தரம், நிரந்தரம்?

சிரிக்கிறார் வேங்கடராமன்.

''விஷயமிருக்குது சுவாமி! சிப்ஸ் என்பது எல்லாத் தரப்பு மக்களும் விரும்பிக் கொரிப்பது. இது சாப்பாடு அல்ல. ருசிக்காக மட்டுமே. அந்த ருசி சும்மா வந்து




''அப்போது அந்த எண்ணெய்?''

''காதைக் கொடுங்கள். அதிகம் பயன்படுத்தப்படாத தரம் வாய்ந்த இத்தகைய எண்ணெய்யை, ஒருமுறை பயன்படுத்தியபின் ஹோட்டல்களுக்கு விற்று விடுகிறோம்!''

உள்ளூர் புதுச் சரக்கை விடவும் இந்த 'செகண்ட் ஹேண்ட்' எண்ணெய் தரமாக இருப்பதாகக் கேள்வி!

தீயின் அளவு, வேகும் நேரம் இவற்றாலும் 'டேஸ்ட்' நிர்ணயிக்கப்படுகிறது.



● நித்தியானந்தம்

விடாது. முதலில் கிழங்கு வகை பிறந்த மண். அதன் தன்மை. வாழைக்காய், நேந்திரங்காயெல்லாம் சப்ளையாகக் கேரளாவிலிருந்து வந்து இறங்கி விடுகிறது. கேரள மண்ணில் சுவைக்குப் பஞ்சமில்லை.

''அதே மாதிரிதான் எண்ணெய். இதுவும் கேரளா! 100 சதவீத ரீஃபைண்ட் ஆயில் அல்லது தேங்காய் எண்ணெய். வேறு எண்ணெய் எதுவும் கிட்டே சேர்ப்பதில்லை.''

சுத்தமான கிழங்கு அல்லது காய், மிகச் சுத்தமான எண்ணெய் - இதனால் மட்டும் சுவை வந்து விடுகிறதா?

''இன்னும் இருக்கிறது சுவாமி! ரிலே ரேஸ் மாதிரி திரும்பத் திரும்ப அதே எண்ணெய்யைப் பயன்படுத்துவதில்லை. ஒரு 'லாட்' சிப்ஸ் உற்பத்திக்குப் பிறகு மீண்டும் பயன்படுத்துவதில்லை.''

''ஒரு 'லாட்'டுக்கு எத்தனை சிப்ஸ்?''

''அது தொழில் ரகசியம்.''

பழைய ஸ்டாக்கை அடுக்கி வைத்து விற்பனை செய்யும் விவகாரம் கிடையாது. அப்பப்போ புது சரக்கு.

ஆங்காங்கே இப்போது சிப்ஸ் உற்பத்தி என்பது ஒரு முக்கியத் தொழிலாகவே வளர்ந்து வருவது கண்கூடாகத் தெரிகிறது. இதற்கு என்ன காரணம்? அதுவும் இத்தனை நாளாக இல்லாமல்?

''ஏன் இத்தனை நாளாக இல்லாமல்? அம்பிகா எத்தனையோ வருஷமாக நேந்திரங்காய் சிப்ஸ"க்கு ஃபேமஸ் இல்லையா?'' என்கிறார் அம்பிகா அப்பளம் - சிப்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த முரளிதரன்.



''நொறுக்குத் தீனி சாப்பிடுவது, தமிழன் வாழ்வில்

தவிர்க்க முடியா அம்சமாகி விட்டது. பொழுது போகாத நேரத்தில் ஏதாவது கொறிப்பதற்குக் கடைகள் நாடிப் போவது இயற்கை. அப்படி அவர்கள் வருகையில் நாம் தரும் பண்டம் சுவையாக, தரமாக இருக்கிற பட்சத்தில் திரும்பத் திரும்ப வர ஆரம்பிப்பார்கள். எத்தனை வருஷம் ஆனா லென்ன? தமிழ்நாட்டில் சிப்ஸுக்கு மவுசு குறைவதே இல்லை'' என்கிறார் இவர்.

அம்பிகா சிப்ஸ் அவர்களுக்குச் சொந்த மான சமையலறையிலேயே செய்யப்படு கிறது. அளவாகத் தயாரிப்பதால் தரத்தைக் காப்பாற்ற முடிகிறது; ஆனால் மார்க்கெட் தேவைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. எனவேதான் மற்ற புது ரகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது முரளிதரனின் கணிப்பு.

நல்லது. இந்தத் தொழில் எத்தனை 'முதல்' எதிர்பார்க்கிறது?

''இது ஒரு சிறுதொழில்தான். ஆனால் 'வரும்படி' எக்கச்சக்கம். ஆரம்பத்தில் நாங் கள் 70 ஆயிரம்தான் இன்வெஸ்ட் பண்ணி னோம். சரியான இடம் அமைய வேண்டும். தரம், ருசி இரண்டும் இருந்து விட்டால் போதும். விலை பற்றி யாரும் கவலைப் படுவதில்லை'' என்கிறார் சிப்ஸ் பாயிண்ட் வேங்கடராமன்.

அதை ஆமோதிக்கிறார் வாடிக்கை யாளர் சங்கரநாராயணன் : ''விலை கிடக் குது சார்! என்னா டேஸ்ட் தெரியுமா? பேட்டை விட்டு பேட்டை வரோம்னா என்ன காரணம்? திருப்பதி லட்டு(!) மாதிரி இங்கேயும் மாறாத டேஸ்ட் சார்!'' என் கிறார். இவர் ஒரு மெடிக்கல் ரெப்ரஸன் டேட்டிவ்.

ஹாட் சிப்ஸ் என்றொரு நிறுவனம். சென்னையில் இவர்களின் இரண்டு, மூன்று கிளைகளிலும் எப்போதும் கூட்டம்! நாற் காலி - டேபிள் போட்டு, கடகட சிப்ஸ் வியாபாரம்!

இதெல்லாம் தவிர, ஃபைபன் சிப்ஸ் என்றொரு புத்தம் புது நிறுவனம். (அடுத்த மாதம் மார்க்கெட்டுக்கு வரப் போகிறது.) கைபடாமல் முழுக்க முழுக்க இயந்திரமய மான தயாரிப்பு!

ஃபைபன் சிப்ஸ் அதிபர் ஸ்ரீனிவாசன் சொல்கிறார். ''நாங்கள் போட்டிருக்கும் பிளானே மாஸ் கவரேஜ்தான்! பேக்கிங் கூட மிஷின் மூலமாகத்தான். கடுமையான தரக் கட்டுப்பாடு உண்டு. எங்கள் பெயர் பரபரப் பாகப் பேசப்படும் பாருங்கள்.''

பெப்ஸி ஃபுட்ஸ் போன்ற மெகா நிறு வனங்கள் ஏற்கெனவே சிப்ஸ் களத்தில் இருக்கையில் இது துணிச்சலான முயற்சி தான்.

நடுத்தர, உயர்மட்ட அளவில் இது. இப்படியாக இயங்க, தி.நகர் நாகேஷ் தியேட்டர் வாசலில் தள்ளு வண்டியில் மர வள்ளிக் கிழங்கு சிப்ஸ் வியாபாரம் செய் யும் நித்தியானந்தம் என்ன சொல்கிறார்?

எட்டு வருஷமாக அவருக்கு இதுதான் தொழில். கேரளாவிலிருந்து, கொத்தவால் சாவடிக்குச் சீவின, வேகவைக்கப்பட்ட மர வள்ளிக் கிழங்கு மூட்டையாக வந்து விடு கிறது. அங்கிருந்துதான் இவர் போன்ற நடைபாதை வியாபாரிகளுக்கு சப்ளை. தவிர சாதாரண கடலெண்ணெய். நூறு கிராம் மூன்று ரூபாய் என்ற சாமான்னிய அளவிலான வியாபாரம். பெரிய தயாரிப்பு நிறுவனங்களினால் இவருக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை. இவரது வருமானம் முழுக்க நாகேஷ் தியேட்டர் கும்பலை நம்பியே இருக்கிறது.

''நல்ல படம் போட்டாங்கன்னா கும்பல் நெறைய வரும். வியாபாரமும் சூடா இருக்கும் சார். எதனா டப்பா படம்னா, நம்ம பாடு பேஜாரு. அப்ப எதனா சாராயக் கடை பக்கமா போயிட வேண்டியதுதான்!''

அவரவர் வசதிக்கேற்ப வியாபாரம். அபிவிருத்தி. ஆனால் என்றும் குறையாதது சிப்ஸின் மவுஸு!

- பா. ராகவன்

அட்டையில் : சூடான சிப்ஸ்
பாயிண்ட் சிப்ஸ் சுவைப்பவர்கள்
நித்யா அண்ட் நித்யா!
அட்டை வண்ணப்படம், படங்கள் :
யோகா

கச்சா முச்சா கவிதைகள்



(ஆபீஸ் பையனின் கையில் ஒரு புதுக் கவிதைத் தொகுப்புக் கிடைத்தாலும் கிடைத்தது, அதை அவன் ஒரு புரட்டுப் புரட்டினாலும் புரட்டினான், அவனுக்குள்ளிருந்த கவிஞன் ஆவேசமாக வெளிப்பட்டு அல்லோலகல்லோலம் பண்ணிவிட்டான்.)

தேவை மாத்திரை

ரஷ்ய
பார்லிமெண்ட்டின்
ரகளை ப்ளஸ்
அமளியில்
தலைவலிக்கு
ஆளான
யெல்சின்!
உமக்குத்
தேவை ஒரு
அனாசின்.

உன்னால் முடியும் தம்பி

மம்மூன் அண்ணன்
மம்மூன் தம்பி
போலீஸ் கண்ணில்
படாமல் எம்பி
எப்படித்தான்
தீட்டினார்களோ
கம்பி?

மர்ம மௌனம்

எதிரிகள் ரெண்டு பேர்
கோதாவில் குதித்துக்
கட்டிப் புரண்டு
கைகால் முறிகையில்
கோபாலபுரம் ஏன்
கைதட்டக் காணோம்?

நட்சத்திர மயம்

அப்பா
நரசிம்ம ராவ்
அரசியல்
ஸ்டார்.
பிள்ளை
பிரபாகர் ராவ்
கோல்டன்
ஸ்டார்.

கோடையில் குளிர்

காம்ப்ளி
வரவினால்
குளிரெடுத்து
நடுங்கிவிட்ட
கூச்சுகளுக்கும்
ஹோட்டல்களுக்கும்
கொடுக்க
வேண்டும்
கம்ப்ளி.

கோவிந்தா! கோவிந்தா!

வணங்காமுடி தலையை
வளைத்துப் போட்டு,
இ. கா. வுடன்
டுக்கா விடப் பண்ணிய
கோவிந்தாச்சார்யா!
நீர் பெரிய
ஆச்சர்யா.

போட்டோவில் தெரியவில்லை

வாழப்பாடி
தோளில்
மூப்பனார்
கை வைத்திருப்பது
ஆதரவுக்கா?
அழுத்துவதற்கா?

- அவிட்டம்

விமர்சனம்

மணிசேகரனின் மோனோ ஆக்டிங்!

"வணக்கம் அன்பர்களே! இந்த வார நிகழ்ச்சிகள் பற்றி வந்துள்ள கருத்துக்களைப் பார்க்கலாமா? படிங்கம்மா!"

"முதலில், முத்தமிழ் மன்றம் பற்றி. கோவில்பட்டி கோபால்சாமி என்பவர் எழுதியிருக்கிறார். கடந்த திங்கள் இரவு ஒளிபரப்பான முத்தமிழ் மன்றத்தில் கோவி. மணிசேகரன் அவர்களின் மோனோ-ஆக்டிங் மிக அருமை. அவரது தத்ரூப நடிப்புக்கு - குறுக்கே கேள்வி கேட்டவர் ரொம்ப இடைஞ்சலாக இருந்தார். மேலும் இந்த நிகழ்ச்சிக்கு நாற்காலி, மேசை போடாமல் வெறுமனே ஸ்டேஜில் நிற்க வைத்துப் பண்ணியிருந்தால் ரொம்ப நல்லா இருந்திருக்கும்னு எழுதியிருக்கார்."

"அன்பருக்கு ஒரு கேள்வி. உட்கார்ந்தபடி செய்ததற்கே உங்கள் மெய்சிலிர்த்திருக்கிறது. நிற்க வேறு வைத்தால் உங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்துவிடாதா? மேல படிங்கம்மா."

"செகண்ட் சானல் நாடகம் பற்றி. ரொம்ப தமாஷாகக் கதையை வளர்த்துச் சென்று ஏன் சார் இப்படி அபத்தமாக முடித்திருக்கிறீங்கள்? அப்படீன்னு காட்டபாடி கணேசன் கேட்டிருக்கார்."

"அன்பர், 'அம்மா, சக்கரைக்கட்டி' நாடகத்தைப் பற்றிச் சொல்கிறார். நம் நிகழ்ச்சி நேரம் மிகக் குறைவு என்பதால் 'ரொம்ப தமாஷாக' என்ற ஒரு கமெண்ட்டை மட்டும் எடுத்துக் கொண்டு அதற்கு நன்றி சொல்வோம். அடுத்த கமெண்ட் பற்றி அடுத்த வாரம் பார்க்கலாம். அடுத்தது படிங்க."

"வழக்கத்துக்கு விரோதமாக, இந்த வார சிந்திக்க ஒரு நொடி நிகழ்ச்சி, சற்று கூடுதல் சுவாரஸ்யத்துடனே அமைந்திருந்தது. ஜோக் என்று நினைத்து குயில் மாஸ்டர் அவ்வப்போது திருவாய் மலர்ந்தருளியதையும், ஸ்கோரின் அநாவசிய அலட்டல்களையும் மன்னித்து விட்டால், உருப்படியான நிகழ்ச்சின்னு மயிலாப்பூர்லேர்ந்து ஏழெட்டுப் பேர் ஒண்ணா எழுதியிருக்காங்க."

"அடுத்தது...?"

"வியாழன், உலாவரும் ஒளிக்கதிர் பற்றி. உங்கள் நிகழ்ச்சிகளிலே அதிக சுவாரஸ்யமானது உலாவரும் ஒளிக்கதிர்தான். குறிப்பாக ரேவதி சங்கரனின் கருத்துச் செறிவு மிக்க வருணனை. ஆனாலும், இந்த வார நிகழ்ச்சியில் திருவல்லிக்கேணி உற்சவம் பற்றிக் காட்டியதில், பெருமாளை அம்போ என்று விட்டு விட்டு, சுற்றியிருந்தவர்களை மட்டுமே அடிக்கடி காட்டியது ஏன்னு ஜாம்பஜார் ஜக்கு கேட்கிறார்."

"நம் நிகழ்ச்சி, ஜாம்பஜார் வாசிகளையும் கவர்ந்திருப்பதில் மகிழ்ச்சி. ஜாம்பஜாரில் தக்காளி ரொம்ப சீப்பாகக் கிடைக்கும். மேல படிங்கம்மா."

"கிரிக்கெட் மாட்ச் ஒளிபரப்பு பற்றி. ஏன் சார்! ஒளிப்பதிவுத் தேர்வில் 'கோட்' அடித்தவர்களைத்தான் உங்கள் கேமராமேன்களாகத் தேர்ந்தெடுப்பீர்களா? சமீபத்திய, ஜிம்பாப்வே உடனான மாட்சுகளில் கேமரா மூவ்மெண்ட் சரிக்கவில்லை. பந்து போகிற திசையில் கேமரா போவதுதான் இயற்கை. நீங்கள் என்ன, கேமரா இருக்கும் திசையில் மட்டுமே பந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?"

"நியாயமான, கண்டிப்பாகப் பதில் சொல்லப்பட வேண்டிய கேள்வி. ஆனால் பாருங்கள், ஒளிபரப்பு நம்முடையதல்ல; வெட்டரை டெல்லி நிலையத்திற்கு ரீ-டைரக்ட் பண்ணி விடுங்கள்."


"அடுத்த கடிதம், என் இனிய இயந்திரா பற்றி. ஜெட் வேகத்தில் ஆரம்பித்து, கட்டை வேகத்தில் நகர்ந்து, பிடிவி பஸ்ஸில் ஏர்-பிரேக் ரிலீஸ் பண்ணினாற் போல் புஸ்ஸ் என்று முடித்து விட்டதில் மிகவும் வருத்தம் அப்படீன்னு நிறைய பேர் எழுதியிருக்காங்க."

"நல்லது. கடிதத்தைத் தயாரிப்பாளருக்கு அனுப்பிடுவோம். நிகழ்ச்சியை முடிச்சிக்கலாமா?"

"அதுக்கு முன்னாடி... அடுத்த வாரத் திரைப்படம் என்னன்னு..."

"ஓ... ஆமாமா. அன்பர்கள் ரொம்ப ஆவலா காத்துக்கிட்டிருப்பாங்க. இல்லே? வரும் வாரம் ஞாயிறு அன்று மாலை - தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பாகும் என்ற இனிப்பான செய்தியுடன் நிகழ்ச்சியை முடிச்சிக்கலாம். வணக்கம்!"

- கிச்சா




பனிப்பாறை

1

நித்யா அறைக்குள் நுழையும் போது தொலைபேசி ஒலித்துக் கொண்டிருந்தது.

இன்று அலுவலகத்திற்கு வருவதற்கு நேரமாகி விட்டது. நேற்று பின்னிரவு வரையிலும் புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் பொம்மைத் தொழிற் சாலையில் வேலை இருந்தது. ''சென்டரிங்'' பலகைகளை அடித்து விட்டு ''காங்க்ரீட்டை''ப் போட்டு முடிக்கும் போது இரவு மணி இரண்டு - இல்லை - விடியற்காலை மணி இரண்டு.

இஞ்சினீயர் ஜெகன்னாதன் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறிய பின்பும் அவள் வீட்டுக்குச் செல்லாமல், கூடவே நின்று கொண்டு மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். அது ஒரு புதிய பாணியில் உரு



வாகிக் கொண்டிருக்கும் கட்டடம். 'ஆர்க்கிடெக்ட்' சயீதும் அவளுமாக மூன்று நாட்கள் உட்கார்ந்து கொண்டு அந்தத் தொழிற்சாலைக்கான வரைபடத்தை உருவாக்கியிருந்தார்கள். கட்டடக் கலையைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே நிகரற்றதாக, வித்தியாசமான, பிரம்மாண்டமான வகையில் '' 'ரைனோ' எண்டர்பிரைஸஸ்'' என்ற பொம்மைத் தொழிற்சாலை ஒரு காண்டாமிருகத்தின் வடிவில் உருவாகிக் கொண்டிருந்தது.

ஒலிக்கும் தொலைபேசியைக் கவனிக்காமல் ஜன்னலின் திரைச்சீலைகளை விலக்கினாள் நித்யா. எதிரே பெஸண்ட் நகரின் கடற்கரையும், அலைகடலும் காலை இளம் வெயிலில் பளபளத்தன.

ஒருகணம் மனத்துக்குள் மௌனமாகப் பஞ்சபூதங்களைத் தியானம் செய்தாள். இருக்கையில் வந்தமர்ந்த பின்னரும் தொலைபேசி நில்லாமல் அடித்துக் கொண்டே இருந்தது. தபாலில் வந்திருந்த இரு கடிதங்களையும், புத்தகத்தையும் பார்த்தவாறே அதைக் கையில் எடுத்தாள்.

''குட்மார்னிங், போலார் கன்ஸ்டிரக்ஷன்ஸ் நித்யா பேசுகிறேன்.''

மறு முனையில் டாக்டர் மாத்ருபூதம் -

''குட் மார்னிங் மிஸ் நித்யா. சாதாரணமா எட்டு மணிக்கெல்லாம் வந்துடுவீங்க. இன்னைக்கு அரை மணி நேரம் தாமதமா?'' என்று கேட்டார்.

''நேத்து ராத்திரி இரண்டு மணி வரையிலும் காங்க்ரீட் வேலை இருந்தது டாக்டர். அதனால காலையில கொஞ்சம் 'போனஸ்' தூக்கம்.''

''ஐ ஸீ.''

அவர் குரல் சற்றுப் பட்டும் படாததும் போல் ஒலித்ததாகத்

ஆபஸ்தம்பன்

தோன்றியது நித்யாவுக்கு.

''நானே உங்களுக்கு ஃபோன் பண்ணறதாக இருந்தேன் டாக்டர். நீங்க நாள் குறிச்சுச் சொன்னீங்கன்னா பூஜை போட்டு, இன்று தோண்டி வேலையை ஆரம்பிச்சிடலாம். மணலுக்கும், ஜல்லிக்கும் சொல்லணும். ரெண்டு நாளாகவே உங்களை காண்டாக்ட் பண்ண முயற்சி பண்ணிண்டிருந்தேன், கிடைக்கலை.''

''அதுல வந்து... பில்



நித்யா'' டாக்டர் சற்றுத் தயங்குவதாகத் தோன்றியது.

''என்ன சிக்கல் டாக்டர்? 'பிளான்' எதாவது மாற்றியாகணுமா? நாம இன்னும் ஃபௌண்டேஷனே போடலியே! அதுவால பிரச்னை ஒண்ணும் இல்லை டாக்டர்.''

''அது இல்லை மிஸ் நித்யா. அதாவது... யூஸோ.. நான் வந்து இந்த வேலையைக் கொஞ்ச நாளைக்கு ஒத்தி வைக்கலாம்னு பாக்கிறேன். பெர்ஹாப்ஸ்... ஒரு ஆறு மாசம் போயிட்டு ஆரம்பிச்சா என்னன்னு யோசனை பண்ணறேன்...''

''இது என்ன திடீர்த் தீர்மானம் டாக்டர்? போன வாரம் கூட நீங்க ரொம்ப ஆர்வத்தோட இதைப் பற்றி என்கிட்டே டிஸ்கஸ் பண்ணினீங்க? பைனான்ஷியலா ஏதாவது பிராப்ளமா டாக்டர்? பிரச்னை அதுவானா கவலைப்படாதீங்க டாக்டர். அதெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்.''

மறு முனையில் மௌனம். நித்யாவே மீண்டும் பேசினாள். ''ஆறேழு மாசம்னா மழைக் காலம் தொடங்கி விடும் டாக்டர். அஸ்திவாரம் மட்டும் போட்டு வெச்சிட்டா என்ன?''

''நோ மிஸ் நித்யா. இப்போதைக்கு நான் இதைத் தொடங்குறதா இல்லை.'' மறு முனையில் போன் கீழே வைக்கப்பட்டது.

நாற்பது லட்சம் ரூபாய்க்கான காண்ட்ராக்ட். மனம் கருகிப் போனது. தொலைபேசியைக் கீழே வைத்து விட்டு, கடிதங்களை மீண்டும் கையிலெடுத்தாள். சற்று நேரத்தில் ஆடிட்டர் ஆண்டனி வந்தார். ஏறக்குறைய இரண்டு மணி நேரம் கம்பெனியின் கணக்கு வழக்குகளை அலசினார்கள்.

அலுப்பாக இருந்தது. இரண்டு நாட்கள் தொடர்ந்து எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் உறங்க வேண்டும் போல் தோன்றியது. உடலில் எத்தனையோ வருடங்களின் அசதியும் ஆயாசமும் சேர்ந்து விட்டிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

மெலிசான சென்டின் வாசனை சஹீது அறைமத்தின் வருகையை உணர்த்தியது. மனம் சற்று உற்சாகமடைந்தது.

''ஹலோ! சஹீத்! சூடாகக் கொஞ்சம் மசாலா டீ?''

''வேண்டாம் மேடம். இன்று ரம்ஜான் நோன்பு ஆரம்பம்...'' என்றவாறே அமர்ந்தான் சஹீது.

மிகத் திறமையான பையன். அபாரமான புத்திசாலித்தனம். இவன் கூடிய விரைவில் பிரபலமாகி விடுவான் என்று மனம் கூறியது. ஒரு 'ஆர்க்கிடெக்டுக்கு'த் தேவையான புத்திசாலித்தனம், திறமை, கற்பனை வளம் - எல்லாம் இவனிடமிருந்தன. இதற்கெல்லாம் மேலாக, தொழிலை அவன் தெய்வமாக மதிக்கும் பண்பு அவளைக் கவர்ந்தது.

''சொல்லுங்க சஹீத் அப்புறம் என்ன விஷயம்? 'கோரமண்டல் பைப்ஸ்' கம்பெனியின் புளூ ப்ரிண்டை முடிச்சிட்டீங்களா? இதுதான் நகரத்துக்கு வெளியே நமது முதல் 'மேஜர்' வேலை, இல்லையா? ஓ! சஹீத்!! நான் இந்த வேலையை ரொம்ப ஆவலோட எதிர்பார்த்திண்டிருக்கேன். நமக்கு ஏகமாகப் புகழ் சேர்க்கப் போற வேலை இதுன்னு மனசுக்கு ஏதோ சொல்றாப்பல இருக்கு சஹீத்.''

அவன் பதிலேதும் கூறவில்லை.

''உங்களுக்குத் தெரியுமா சஹீத்? நான் சாதாரணமா என்னோட லட்சியங்களையும் எதிர்பார்ப்புகளையும் பற்றி யார்கிட்டேயும் பேசுவது கிடையாது. அப்படிப் பேசக் கூடிய நண்பர்களும் மிகக் குறைவு. உங்ககிட்டே இருக்கிற தன்னம்பிக்கை, ஆர்வம், திறமை, உற்சாகம் - இதுல எல்லாம் என்னோட சில லட்சியங்களோட பிரதிபலிப்புகள் தெரியறதுனால, உங்ககிட்டே வெளிப்படையாகப் பேசணும் போலத் தோன்றுகிறது சஹீத். என்ன சஹீத்? நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்கேன்,

கரத்தே இல்லாம, 'டல்லா' இருக்கீங்க?''

''மேடம். கிரிஸ்டஃபர் கிட்டேருந்து ஃபோன் வந்தது. அந்த வேலைக்கான காண்டிராக்டைத் தள்ளுபடி பண்ணிட்டாங்க.''

''என்ன?''

''ஆமாம் மேடம். என்னை அவங்க பேசவோ, கேள்வி கேட்கவோ அனுமதிக் கலைங்க. ரொம்ப 'அப்ரப்டா'ப் பேசி லைனைக் கட் பண்ணிட்டாங்க.''

''என்ன காரணம் இருக்கும் சவீத்? டெண்டர் போட்டதுல நம்ம எஸ்டிமேட்டு தான் குறைச்சலாகவும் கன்வின்ஸிங் ஆகவும் இருக்கு - அப்படீன்னு மிஸ்டர் கிரிஸ்டஃபரே நேரில வந்து சொன்ன பிறகு தானே நாம இந்த பிளானை வரையவே ஆரம்பிச்சோம். என்ன, ஏதுன்னு அவங்க சொல்லலையா?''

''இல்லைங்க மேடம்.''

''மிஸ்டர் கிரிஸ்டஃபரோட வீட்டு டெலஃபோன் நம்பரென்ன சவீத்? நான் பேசிப் பார்க்கிறேன்.''

''தேவையில்லை மேடம். நம்ம மதிப்பை நாம கெடுத்துக்க வேணாம்னு தோணுது.''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க சவீத்?''

''மேடம், கிரிஸ்டஃபரோட செக்ரட்டரி குளோரியா எங்க பில்டிங்லதாங்க குடியிருக்காங்க. அவங்க சொன்னாங்க - மிஸ்டர் கிரிஸ்டஃபர் இந்த வேலையை ''விஸ்வம் இன்டெர்நேஷனல்'' கம்பெனிக்குக் கொடுத்திட்டாராம். இப்போ நாலைஞ்சு இடங்களிலே அந்தக் கம்பெனியோட வேலை நடந்திண்டிருக்கு மேடம்.''

அதற்கு மேல் அவன் பேசினதொன்றும் அவள் மனதில் விழவில்லை. அடிவயிற்றிலிருந்து ஆத்திரமும், வெறுப்பும் நெருப்பாகக் கொழுந்து விட்டெரிந்தன. உணர்ச்சிகளை மிகவும் சிரமத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டு சவீதைப் பார்த்தாள்.

''ஓகே சவீத் - வீணாக வருத்தப்படாதீங்க. இந்தக் காண்டிராக்ட் இல்லையானா என்ன? வேற எத்தனையோ வரப் போகுது.''

அவன் போன பிறகு நாற்காலியில் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

''என்னைப் பகைச்சுண்டு நீ இந்த ஊரில வேலை பண்ணிப் பிழைக்க முடியும்னு நினைக்காதே நித்யா! என்கிட்டே பணம் இருக்கு, அதிகாரம் இருக்கு, செல்வாக்கு இருக்கு, அரசியல் ஆதரவும் இருக்கு. நான் நெனைச்சேன்னாக்க நீ இருக்கிற இடமே தெரியாமல் பண்ணிப்பிடுவேன் - தெரிஞ்சுக்கோ! உன் மனசை மாத்திண்டு எனக்கு ஃபோன் பண்ணு.''


பதினைந்து நாட்களுக்கு முன் எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டு விகவம் திமிராகச் சவால் விட்டதை நினைத்துக் கொண்டாள்.

அப்போதும் மனத்துக்குள் ' அசாதாரணக் கோபம் எழுந்தது நினைவு வந்தது. இன்று? அவன் சவால் விட்டபடியே இரண்டு காண்டிராக்டுகளைப் பறித்துக் கொண்டிருக்கிறான். டாக்டர் மாத்ருபூதம் வாய் விட்டுக் கூறாவிட்டாலும், அங்கும் விகவம்தான் புகுந்து விளையாடியிருக்கக்கூடும் என்று புரிந்தது.

பொறியியல் கல்லூரியில் நித்யா முதலாண்டு கால் வைத்த போது விகவம் நான்காவது ஆண்டு மாணவனாக இருந்தான். அறிவும் அறிவும் இணைந்து உறவாடி அன்பில் சங்கமித்தது. ஆம்... 'அன்பு' என்று தான் அன்று அவள் தீவிரமாக நினைத்தாள், நம்பினாள். தனது படிப்பு முடிந்தவுடன் ஒரு பெரிய கம்பெனியில் விகவம் வேலைக்கு அமர்ந்தான்.

பிறகு.. இந்த விகவத்திற்குத்தான் எத்தனை ரூபங்கள்!!


இவள் நான்காவது ஆண்டு பயிலும் போது முறையாகப் பெண் பார்க்க வந்த விகவம்! அவன் தாய் வரதட்சணையாக ஒரு



● ஒரு கத்திரிக்காயின் விலை ரூ. 72/-

● சமையலைப் புறக்கணிக்காதீர்!

போட்டி முடிவு:
'மீண்டும் சொல்விளையாட்டு'



'இருபதுக்கு இருபது மார்க் யார்தான் வாங்கப் போகிறார்கள்! தேட வேண்டியது தான் என்று சற்று அசுவாரஸ்யத்துடனே தான் விடைகள் குவியலில் மூழ்கினோம். ஆனால் -

ஆச்சர்யத்திலும் ஆச்சரியம்! நூற்றுக்கு நூறு வாங்கி விட்டார் நெய்வேலி ஆர். சேகர்.

ஆர். சேகர்,
119 B, பிளாக் 6,
நெய்வேலி - 607 803.

என்ற இவர் விலாசத்தைப் பார்க்க, "நளினி சாஸ்திரி" என்ற புனைபெயரில் கதைகள் எழுதும் ஆர். சேகர்தான் இதிலும் அபாரமான சாமர்த்தியத்தைக் காட்டி முழு வெற்றி பெற்றிருக்கிறார் என்று தெரிய வருகிறது. கல்கி பொன் விழா நாவல் போட்டியில் விஞ்ஞான நாவலுக்குப் பரிசு பெற்ற அதே நளினி சாஸ்திரிதான்! இந்தக் கடினமான சொல் புதிர் போட்டியிலும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறையைக் கையாண்டு ரூ. 250 பரிசைத் தட்டிச் செல்கிறார். வாழ்த்துக்கள்.

லட்சம் ரூபாய் கேட்ட போது கோழையாக, தனது தாயின் புடைவைத் தலைப்பில் ஒளிந்து கொண்ட விசுவம்!! அவள் அவனுடன் தொலைபேசி மூலம் பேச விரும்பிய போது அவளை மெள்ளப் புறக்கணித்த விசுவம்!!! கோழையாக நின்ற அந்த உருவம் அவள் இதயத்திலிருந்து ஒரே சறுக்கலில் சறுக்கி விழுந்தது. விந்தைதான்! அவளுக்கு அதிகம் வேதனை ஏற்படவில்லை.

அதற்குப் பிறகு நித்யாவின் தந்தை இறந்து போய், அவள் படிப்பை முடித்துக் கொண்டு சிறிய "போலார் கன்ஸ்டிரக்ஷன்ஸை'த் தொடங்கி - தங்கையை எம்.எஸ்ஸி படிக்க வைத்து, தம்பியை பி.எஸ்ஸி படிக்க வைத்து இதே கம்பெனியில் வேலை போட்டுக் கொடுத்து...

ஓ! எத்தனை நீளமான, போராட்டங்கள் நிறைந்த சுயசரிதை!

இப்போது ஏழு வருடங்களுக்குப் பிறகு இந்த விசுவம் மீண்டும் அவள் முன்!

ஜெர்மனியிலிருந்து வந்து ஏழு மாதங்களாகின்றன என்றான். தாய் மறைந்து போய் விட்டதாகவும், இனிமேல் வரதட்சணை, சீர் - எதுவுமின்றித் திருமணம் செய்து கொள்ளலாம் என்றும், இருவரும் சேர்ந்து தொழில் செய்யலாம் என்றும் கூறினான். அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டு நின்றாள். அவளுடன் படித்த சௌதாமினி, தன் கணவருடன் விடுமுறைக்காக அமெரிக்காவிலிருந்து சென்னை வந்த போது அவளிடம் கூறியது நினைவு வந்தது.

"நித்யா... பிரான்ஸுக்கு விடுமுறையாகப் போனப்போ அந்த விசுவத்தைப் பார்த்தேன். இரண்டு பக்கமும் இரண்டு அரைகுறை ஆடைகளோடு கூடிய பெண்கள். ஒரு கல்யாணம் வேற ஆகி, டிவோர்ஸ் ஆயிடுத்து போலிருக்கு."

நித்யா அவனிடம் கேட்டே விட்டாள்.

அவன் தடுமாறினான்.

"நோ நித்யா.. நோ.. யாரோ வேண்டாதவங்க உன் மனசைக் கலைக்கப் பார்க்கறாங்க... நான் சொல்றதை..."

"ஷட் அப்! அன்னைக்கு, அம்மா வார்த்தையைத் தட்ட பயந்துண்டு என்னை நிராகரிச்சீங்க. எனக்கும் உங்களுக்கும் இனிமேல் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. நீங்க போகலாம்..."

"யோசிக்கத்தான் பேசறியா நித்யா?"

"இதுல யோசிக்கிறதுக்கு ஒண்ணுமேயில்லை. இது என்னைக்கோ முடிந்து போன விஷயம். ஒங்க வழி வேற - என் வழி வேற..." அவள் சூடாகச் சொன்னாள்.

"பழைய நாட்களையெல்லாம் மறந்துட்டியா நித்யா?"

அவள் சீறினாள். "பழைய நாட்களா? இப்படிக் கேட்கவே வெட்கமாயில்லை மிஸ்டர் விசுவம்? அம்மாவை எதிர்த்துப் பேச பயந்தவன் அம்மாகிட்டே பர்மிஷன் வாங்கிண்டப்புறம் காதலிச்சிருக்கணும்! இந்த அறையை நான் ரொம்பப் புனிதமாகக் கருதறேன் மிஸ்டர் விசுவம். இது என்னோட கோவில். இதுக்குள்ள, கோழைகளுக்கும், சந்தர்ப்பவாதிகளுக்கும் இடம் கிடையாது. நௌ... ப்ளீஸ் கெட் அவுட்!"

அப்போதுதான் அவன் அடிபட்ட வேங்கை போல் சீறி, சவால் விட்டபடி சென்றான்.

(தொடரும்)


R.M.V
அளிக்கும்
இசைஞானி
இளையராஜாவின்
இசைச்சித்திரம்
ஆல்பட் A/C
சக்தி அபிராமி A/C
MM தியேட்டர் A/C
மற்றும் தமிழகமெங்கும்
ஏப்ரல்
10 உ
முதல்
சத்யா மூவீஸ்
எங்க தம்பி
S.D.சபா B.Sc., D.F.Tech.,
தயாரிப்பு
V.தமிழழகன்
V.செல்வம்
V.தங்கராஜ்
Elegant

சுவர்

சுப்ரமண்யன் ரவிச்சந்திரன்

"ஏன் நாம பெண்ணாப் பிறந்தோ முன்னு கூடத் தோணும் ராகவ் எனக்கு... தடுப்புச் சுவர் மேல நீங்களும் கௌதமும் பேசறத ஒரு நாள்ல ரெண்டு தடவை கட்டா யமாப் பாப்பேன் - பஸ்ல போறச்சே. பொறாமையா இருக்கும். இவ்வளவு ஜன நெருக்கடில, காதைக் கிழிக்கற மோட்டார் சத்தத்து நடுவுல ஒரு சின்ன முகச் சுளிப்பு கூட காட்டாம, கூட்டம் இருக்கறதாவே உணராம நீங்க ரெண்டு பேரும் பேசறதைப் பாக்கறதே தனி சுவாரஸ்யம்" - வியப்பில் கண் கொட்டிக் கேட்டாள் இந்து.

ராகவ் தோளைக் குலுக்கினான். இந்துவின் அருகாமையில், அவளுடைய வாசனை படும் அளவு நெருங்கியிருந்தது அவனுக்குப் புதுவிதமான அனுபவம்.

இந்து பராக்குப் பார்த்துக் கொண்டிருந் தாள். பூங்காவின் வெளியைத் தாண்டி ரோட்டில் மனிதத் தலைகள் வேகமாகக் கடந்து கொண்டிருந்தன. இந்து அவ்வாறு பார்ப்பது கூட அவனுக்குப் பிடித்திருந்தது.

இன்னும் கௌதம் வரக் காணோம்...

ஆறு மாதம் முன்பு வரை கூட அவன் இந்து என்னும் பெண்ணின் சிநேகம் கிட்டும் என்று எண்ணியதில்லை. அவனும் கௌதமும்தான் மாலைப் பொழுதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.

இப்போது என்றில்லை.. இது சிறு வயதில் தொடங்கியது. அவர்கள் வயதுப் பையன்கள் மைதானத்தில் கிரிக்கெட்டோ, கால்பந்தோ, ஹாக்கியோ, கபடியோ விளையாடுகையில் இவர்கள் இருவரும் மைதான சிமெண்ட் பெஞ்சில் எதிரும் புதிருமாய் அமர்ந்திருப்பார்கள். மத்தியில் டிரான்சிஸ்டர். சிலோனும், விவிதபாரதியும் பாடல் போட ஒவ்வொரு பாட்டின் தாளம், பின்னணி இசை, பாடல் வரிகள் அவ்வப்போது அறுக்கப்பட்டு அலசப் படும்.

லேலுக்கு ஒரு விளையாட்டு மாறிக் கொண்டிருந்த அந்த மைதானத்தில் மாறாத ஒன்று அந்தப் பாட்டுக் கேட்பதுதான்.. பெரும்பாலும் அவர்களது மனம் ஒரே அலைவரிசையில் இயங்க அது உதவியது.

பன்னிரண்டு பதிமூன்று வயதில் ஆரம்பித்த இந்த அமர்தல், இப்போது இருபத்தெட்டாகி வேலையிலும் அமர்ந்தாயிற்று - இன்னும் முற்றுப் பெறவில்லை. உள்ளூரிலேயே இருவருக்கும் வேலையென்பது சிறப்பம்சம்.

முதலில் சாதாரணமாய் இந்து பஸ் ஜன்னல் வழியாய் நடைபாதை வாசியைப் பார்ப்பது போல்தான் பார்த்தாள். ஆனால் மீண்டும் மீண்டும் பார்க்க நேரிட்ட போது சாதாரணத் தன்மை போய் கூர்ந்து கவனித்தல் ஆரம்பமானது. அவர்கள் உட்கார்ந்திருந்த கட்டைச் சுவர் பஸ் ஸ்டாப். வேலை விட்டுப் போகும் எத்தனையோ பெண்கள் இவர்களுக்கு முதுகைக் காட்டியபடி நின்றிருந்த போதும் இவர்கள் யாரையும் வெறிக்காததோ, தமக்குள் தழுட்டுச் சிரிப்பைப் பரிமாறிக் கொள்ளாததோதான் அவர்களின் பால் இவளுக்கு விசேஷ கவனத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இரண்டு ஸ்டாப்பிங்கிற்கு முன்னால் அவளது அலுவலகம் இருந்தது. அப்படி என்னதான் லயிப்பு அவர்களுக்குள்?

இந்து ஆபீஸிலிருந்து நடந்தாள். அவர்களுக்கு அருகில் நின்று கொண்டாள். அடிக்கடி மணி பார்ப்பது போல் கையை உயர்த்தி, பஸ் வரும் திசையில் கண்ணைச் செலுத்தினாலும் காதுகள் மட்டும் பின்னாலேயே இருந்தன.

"நேத்திக்குப் பாசவலைல ஒரு பாட்டு போட்டான் நேயர் விருப்பத்துல. சி.எஸ். ஜெயராமன் பாட்டு.. அன்பினாலே உண்டான இன்ப நிலை... அப்படியே கர்ணன்ல மகாராஜன் உலகை ஆள்கிறான்தான்!"

"ரெண்டுமே ராகம் ஒண்ணுதான். கரகரப்ரியா. உத்தமபுத்திரன்ல 'அன்பே அமுதே அருங்கனியே' அது.. அப்புறம் ஜுவில் சிங் ஃபார்யூ.. எல்லாம் ஒரே ராகம்..."

கௌதம் கரகரப்ரியாவை முனகினான்...

"ஒனக்கு ஞாபகம் இருக்காடா.. சிவாஜி தியேட்டர்ல கர்ணன் போட்டப்போ

இந்தப் பாட்டு வரும் வரும்னு பாத்துட்டு வராம தியேட்டர்காரன்கிட்டே சண்டைக்குப் போனோமே...''

''ஏன் இல்லாம...? அந்த மேனேஜர் வயசானவர்... நேரா எங்கப்பாகிட்டே வந்து சொன்னாரு... ஒரே ரகளை...''

பக்கென்று சிரித்த இந்துவை அப்போதுதான் அவர்கள் கவனித்தனர். இந்து நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''ஐ'ஆம் ஸாரி. உங்க பேச்சு ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருந்துச்சு..''

இருவரும் திகைத்தனர். கட்டைச் சுவரிலிருந்து குதித்தனர்.

இடையூறாய் இருந்தது குறித்து இந்து விசனப்பட்டாள்.

''ஓக் ஹியர் மேடம். நாலஞ்சு நாளா நீங்க பஸ்க்கு வந்து நிக்கற மாதிரி தெரியலே. எங்ககிட்டே நீங்க என்னதான் எதிர்பார்க்கறீங்கன்னே தெரியலியே...!'' அவர்கள் சொல்லாவிட்டாலும் அவன் கௌதம் என்பது அவளுக்குத் தெரியும். அவன் கோபப்படாவிட்டாலும் ஒரு தவிப்பு கலந்த பதற்றம் அவனுடைய குரலில் தெரிந்தது.

''மிஸ்டர் கௌதம்.. ஐ'ஆம் இந்து. இங்கதான் ஆர்டிவோ ஆபீஸ்ல ஒர்க் பண்றேன். டெய்லி நெல்லிக்குப்பத்துலேர்ந்து வர்றேன். நீங்க ரெண்டு பேரும் பேசிக்கற விஷயமும் சடார் சடார்னு அது வெவ்வேற காலங்களுக்குத் தாவறதும் எனக்குப் புடிச்சுது. ஏதோ ஒரு ஒழுங்கு இருக்கு அதில... என்னையும் உங்க குழுவுல சேத்துக்கிட்டா நான் இன்னும் சந்தோஷப்படுவேன். எனக்கும் இளம் வயசுலேந்து எவ்வளவோ அனுபவங்கள். கொட்டிடணும்னு ஆசை ஜாஸ்தி. எவ்ளோ பெரிய ஆளா நாம ஆனாக்கூட குழந்தைக்குரிய மனோபாவம் நம்மை யறியாம இருக்கு...''

''எதை வச்சு சொல்றீங்க?'' - ராகவ் நெருங்கி வந்தான். அவனிடமிருந்து அன்னியத் தன்மை விலகியிருந்தது.

''பாருங்களேன்.. சின்னக் குழந்தைங்க சொப்பு சாமானைக் கூடையிலிருந்து வரிசையா இறக்கிட்டு, திருப்பியும் ஆட்டம் முடிஞ்சதும் அவ்வளவையும் கூடைக்குள்ள கொட்டிக்கற மாதிரி தினம் ஏதோ ஒரு இறந்த காலத்தை வெளிக்கொண்டு வந்துட்டு வீட்டுக்குப் போற நேரம் வந்ததும் ஒண்ணும் இல்லாத மாதிரிதான போறோம்...''

''க்ரேட்...! இந்து நாளைலேர்ந்து, மன்னிக்கணும். இப்பலேந்து நீங்களும் இந்த மாடுகள் லிஸ்ட்லே சேர்ந்தாச்சு...''


''மாடா?''

''ஆமாம்... மனுஷனுக்கு ஏதாவது ஒரு விதத்துல மிருக குணத்தோட சாயல் வந்துடும்... அசை போடறது அப்படி...''

ஒரு நிமிடம் என்று கை காண்பித்து கௌதம் ஓடினான். சாலையின் எதிர்த்திசையிலிருந்து பொட்டலத்துடன் வந்தான். மசாலா மணம் மூக்கைத் துளைத்தது.

''இந்து.. பதினஞ்சு வருஷமா இந்தத் தள்ளு வண்டிலே மசால் வடை சாப்பிடறோம். அன்னிலேர்ந்து இன்னி வரைக்கும் டேஸ்ட்ல மாற்றமே இல்ல.''

''அது மட்டுமா... வண்டிக்காரனும் அப்படியேதான் இருக்கான்.. போட்டிக்கு ஆள் வந்தும், அவன் கடைக்குன்னு ரெகுலரா சில பேர் இருக்காங்க.. அவனும் பிரமாதமா ஒண்ணும் வசதியாயிடலே..''



சூடு கை பொறுக்க முடியாமல் காகிதத்தைத் தாண்டி விரலைத் தீய்த்தது. அவர்கள் இதற்குக் கூட முகம் சுளிக்காமல் விண்டு எப்படித்தான் சாப்பிடுகிறார்களோ!

இருவரையும் வீட்டுக்கு அழைத்துப் போனாள். அப்பா அம்மாவை அறிமுகப் படுத்தினாள். இந்து இருவருடைய வீட்டிற்கும் போனாள்.

நெருங்க நெருங்க விவாதம் அதிகமானது. இது உரிமை தரும் விளைவு.. பெரும்பாலும் கௌதம் தனிக் கட்சியாகவும், ராகவ் இந்து ஓர் அணியாகவும் இருக்க நேரிட்டது.

விவாதங்கள் கயிறு இழுக்கும் போட்டியாயின. வெற்றி அறுதி இட்டுக் கூற முடியாததாய் ஆனது. இரு சாராரும் வெற்றி தோல்வியின்றி அப்படியே விட்டுப் போகவும் நேர்ந்தது.

கௌதமைச் சட்டென்று பதற்றமடையச் செய்ய முடியும். அவனைச் சீண்ட இந்துவும் ராகவ்வும் கூட்டணி அமைத்தார்கள். ஏறும் அவனது கோபத்தை இறக்க விடாமல் ஒருவர் மாற்றி ஒருவர் ஜாடை செய்து மேலும் முறுக்கேற்றுவது ஒரு குஷியைக் கொடுத்தது.

இந்த விளையாட்டே அவர்களுக்குள் காதல் பயிரை நட்டது. ஒருவரின் பார்வையை ஒருவர் கவ்வி, சில சமயம் நடுவில் கௌதம் இருப்பதை மறக்கும் நிலைக்கே போக நேரிட்டு மீண்டும் சகஜ நிலைக்கு வரச் சிரமப்பட வேண்டியதாயிற்று.

“என்னப்பா கௌதம்.. இந்தப் பய அந்தப் பொண்ணு மேல ரொம்ப ஈடுபாட்டோட இருப்பான் போல இருக்கே. பொண்ணும் ரொம்ப லட்சணமா இருக்கா. அமரிக்கையான பேச்சு. அவன் என்ன சொல்றான்? நீதானே அவனோட மொதல் பொண்டாட்டி. அசடு மாதிரி எங்கிட்ட சொல்லக் கூச்சப்படப் போறான். நான் அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ண மாட்டோமான்னு தான் இருக்கேன்...'' ராகவ்வின் அப்பா கேட்ட போது கௌதமுக்கு மிகவும் இனிப்பான தருணமாய் அது இருந்தது.

அவனைப் பொறுத்தவரை சிக்கலான நூல்கண்டாய் அவர்களுடைய காதல் போன நிமிடம் வரை இருந்தது. எந்த முனையில் ஆரம்பிப்பது என்ற குழப்பம் இப்போது போய் விட்டது.

நெல்லிக்குப்பம் போனான். இந்துவின் பெற்றோர் முதலில் சாதாரணமான விஷயங்களைப் பேசினர். பதறாமல் கௌதம் ஒவ்வொரு அடியாக வைத்தான். விஷயத்திற்கு வந்தான்.

''இந்துவுக்கும் வயசாச்சே. ஏதாவது அலையன்ஸ் வந்துதா? பாக்கறீங்களா? காலா காலத்துல ஏதாச்சும்...''

''ஆமாம்பா... நாங்களும் யோசிக்கக் கிட்டுத்தான் இருக்கோம்.. ஏதாவது இருந்தா சொல்லேன். அவளைக் கேட்டா சள்ளு புள்ளுங்கறா...'' இந்துவின் அம்மா கவலையோடு கூறினாள்.

''அதெல்லாம் ஆறு மாசத்துக்கு முன்னாடி.. இப்ப கேளுங்க. கால் கட்டை விரல்லே அரை வட்டம் போடுவா. என் ஃப்ரெண்ட் ராகவ் வீட்டுல ஒங்களைக் கலந்துட்டு வரச் சொன்னாங்க...''

''யாரு நம்ம ராகவ்வா...? பருத்தியே பொடவையாக் காய்ச்ச மாதிரிதான்.. உன் வாய்க்குச் சர்க்கரைதான் போடணும். என் வயித்துல பாலை வார்த்தேப்பா...'' அம்மா நெகிழ்ந்து போனாள்.

''நான் வர்றேம்மா...'' கௌதம் விடை பெற்றான்.

“அதோ ஆடி அசைஞ்சு வரான் பாரு.. டேய்.. கௌதம்'' கைகளை வீசிக் கூவினான் ராகவ்.

கௌதம் இருவருக்கும் மத்தியில் அமர்ந்தான்.

''என்ன லேட் கௌதம்? நான் வீட்டுக்குப் போற நேரமாச்சு'' சிணுங்கினாள் இந்து.

''தத்திங் டூயிங் இனிமே லேட்டாப் போனா யாரும் ஒண்ணும் சொல்ல மாட்

டாங்க. அப்ருவல் வாங்கியாச்சு.''

விஷயம் சொல்லச் சொல்ல இருவரும் பிரகாசமானார்கள். ராகவ் கௌதமைக் கட்டிக் கொண்டான்.

காரியங்கள் மளமளவென்று நிறை வேறின. நல்லதொரு சுபயோக தினத்தில் ராகவ் - இந்து, சட்டபூர்வமாகவும், சாஸ்திர பூர்வமாகவும் தம்மை இணைத்துக் கொண் டனர்.

இரு வீட்டாரின் ஒரே பிரதிநிதியாக கௌதம் கல்யாண வீடெங்கும் நிறைந்து ஓடினான். மரம் கட்டினான். இலை போட் டான். வந்தவர்களை அழைத்து அமரச் செய் தான். கெட்டிமேளத்திற்கு விரல் அசைத் தான்.

ரயில் டிக்கெட் பதிவு செய்தான். போகும் பிரயாணத்திற்கு வரைபடம் போட் டுக் கொடுத்தான். ஆங்காங்கு பார்க்க வேண்டிய நபர்களின் முகவரிகளை எழுதித் தந்தான்.

''என்ன இந்து? என்ன பண்றான் இன்னும்.. ஒரு மாசத்துக்கு முன்னாடி புது மாப்பிள்ளை. இன்னும் என்ன தூக்கம்? வரச் சொல்லு. ஒரு மாசமா அவன் இல் லாம தவிக்கப் போயிட்டேன். பயணக் கதையெல்லாம் பேசணும். கூப்பிடு...''

''டோண்ட் மிஸ்டேக் மீ கௌதம். அவர் ரொம்ப டயர்டா இருக்கார். இப்ப டிஸ்டர்ப் பண்ண வேணாம்னு நெனைக் கறேன். மோர் ஓவர் இன்னிக்கு நாங்க ரெண்டு பேரும் பிக்சர் போகலாம்னு ப்ளான் போட்டிருக்கேன். ப்ளீஸ்...''

இந்துவின் முகம் ஏன் இப்படி இறுகி யிருக்கிறது என்று புரியாமல் நகர்ந்தான்.


''என்ன இந்து.. முந்தா நேத்திக்கு கௌதம் வந்தானாமே... சொல்லவே இல்லியே நீ?''

''கம்ப்ளெய்ன் பண்ணானா?''

''அவன் ஏன் கம்ப்ளெய்ன் பண்றான். என்னடா வீட்டுப் பக்கமே காணும்னேன். சரி பொறப்படு. பார்க் வரைக்கும் போவோம். மூணு பேரும் பேசி ரொம்ப நாளாச்சு.''

''வெளையாடறீங்களா. நமக்குக் கல் யாணம் ஆச்சு. நாம ரெண்டு பேர் ஹாய்யா எங்கியாவது உக்காந்து பேசினா சரி.. அதுக்கெதுக்கு கௌதம் - ஆறாவது விரல் மாதிரி தேவை இல்லாம... ஏற்கெனவே ஒங்களுக்கு ஈஸ்னோபீலியா இருக்கு. அங்க போய் உக்காந்து, பஸ் புகை அடிச்சா, ராத்திரி மூச்சுத் திணறும். போதாக்குறைக்கு மசால் வடை அது இதுன்னு. என்ன என் னைய்ல போடறானோ.. யாரு அப்புறம் அவஸ்தை படறது!''

''இந்து வாட் ஈஸ் திஸ்?''



ஒருவர் : நம்ம அமைச்சர் கிட்டேருந்து மின்சாரத் துறையைப் பிடுங்கிடப் போறாங்களாமே!

மற்றவர் : 'பவர் கட்'னு சொல்லு!

கருத்து : ஆர்.பி. சாரதி

படம் : டிஸ்னி

''கோபப்படாதீங்க. பேச்சிலரா இருக் கற வரைக்கும் ஒண்ணும் இல்ல. இப்ப குடும்பஸ்தராயிட்டீங்க. அங்கே போய் என்ன பிரமாதமா பேசப் போறீங்க. திரும் பத் திரும்ப சினிமாப் பாட்டு, ஷேக்ஸ் பியர், அந்த நாள் குடுமி வாத்தியார்னு, இதால எதாச்சும் பிரயோஜனம் உண்டா.. எப்ப நமக்குக் கல்யாணம் ஆச்சோ அப் பவே கலெண்டா அவர் ஒதுங்கிடணும். இன்னும் ஈஷிக்கிட்டு வர்றது எனக்குப் பிடிக்கல்லே. நீங்க வரலேன்னா அவர் ஒண் ணும் பசலை படர்ந்து இளைச்சுப் போகப் போறதில்லை. இந்த ஒரு மாசம் எப்படி தனியா இருந்தாரோ அப்படியே இனியும் இருந்துடுவாரு. நீங்க மட்டும்தானா ஃப் ரெண்டு? ஊர்ல வேற யாருமே இல்லியா... லெட் ஹிம் கோ சம்வேர்.. அவர் வீட்டுக்கு வர வேணாம்னு சொல்லலே.. பட் எதுலி யும் ஒரு லிமிட் இருந்தா எல்லாரும் ஹேப் பியா இருக்கலாம்.''

படபடவென்று பொரிந்து விட்டுப் போனவளைக் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பழைய பாடல் பாடிக் கொண்டிருந்த ரேடியோவைச் சட்டென்று அணைத்து, கணவனை லட்சியம் செய்யாமல் தன் கைக் காரியத்தைப் பார்த்தாள் இந்து.

மாயக் குதிரை

கிருஷ்ணா டாவின்ஸி

7

சூர்யாவை - அவன் உடலைச் சுற்றியிருந்த டாக்டர்கள் உறைந்து போய் நின்றிருந்தனர். அமானுல்லா விறைப்பாகக் கிடந்த அவனைப் பார்த்தார். உலகின் அதி அற்புதமான மனிதக் கண்டுபிடிப்பான விஞ்ஞானம் உயிரை மீட்கும் வித்தையை இன்னும் அறியவில்லை. அறிந்திருந்தால்...?

"டாக்டர்...! இனி என்ன செய்வது?"

அமானுல்லா தொண்டையைக் கனைத்து, "முதலில் ஒரு விஷயத்தைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். யாரும், இதைப் பற்றி மூச்சுவிடக் கூடாது. எல்லாரும் ஓசைப்படாம போயிடுங்க... நான் கமிஷனரிடம் பேசி விடுகிறேன்."

டாக்டர் அமானுல்லா போலீஸ் கமிஷனரிடம் சூர்யா இறந்து போன செய்தியைச் சொன்னார். சில விநாடிகள் மௌனம். பிறகு சுதாரித்துக் கொண்டு, "லெட் மி டாக் டு ஸம் பீப்பிள். அட்வகேட் ஜெனரலிடம் சில சந்தேகங்கள் கேட்க வேண்டும். முடிந்தால் முதலமைச்சரிடம் பேசுகிறேன். நல்ல காலம், இரவாகிப் போனதால் சில காரியங்களைச் செய்து விடுவது சுலபம். டாக்டர்! உங்கள் 'ஸஜஷன்' என்ன?" என்றார். சூர்யா இறந்து போன அதிர்ச்சியை விட அதன் விளைவுகளைச் சமாளிக்கும் பொறுப்பு அவரை அதிகம் ஆக்ரமித்திருக்க வேண்டும்.

"முதலில் சூர்யாவை அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று விட வேண்டும். வீட்டைச் சுற்றி யாரும் இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அப்புறம்..."

டாக்டர் அமானுல்லா தயங்கினார்.

"சொல்லுங்க டாக்டர்..."

"ராபிஸ்னால செத்துப் போனார்னு ரசிகர்களுக்குத் தெரிஞ்சா விளைவுகள் எப்படி வேணும்னாலும் இருக்கும். அதனால, பெட்டர், ஹார்ட் - அட்டாக்னு சொல்லிடலாம்."

"முப்பத்தைஞ்சு வயசிலா?"

"இருபது வயசுல கூட ஹார்ட் அட்டாக் வந்து செத்த கேஸஸ் இருக்கு..."

கமிஷனர் யோசித்தார். "சரி, டாக்டர்! கிவ் மி டூ அவர்ஸ். இப்ப மணி பன்னண்டாகப் போகுது. ரெண்டு மணிக்குள்ள சொல்லிடறேன்..."

கமிஷனர் எழுந்தார்.

ஒன்றரை மணி நேரத்துக்குள் போலீஸ் கமிஷனர் சில தீர்மானங்களுடன் வந்து சேர்ந்தார்.

"டாக்டர்! அவசரம்! ஒரு போஸ்ட்-மார்ட்டம் செய்து விடுங்கள்!" என்றார்.

"எதுக்கு ஸார்?"

"நாளைக்கு ஏதாவது பிரச்னை வரலாம். எங்களுக்கு உண்மையான 'மெடிகல் ரிகார்ட்' வேண்டும். பிறகு சூர்யாவை வீட்டிற்கு எடுத்துச் சென்று, அதிகாலையில் ஹார்ட்-அட்டாக் என்று சொல்லி விடலாம். சூர்யாவின் வீட்டைச் சுற்றிப் போலீஸைக் குவித்து விட்டோம்... டாக்டர், ஒரு சந்தேகம், சூர்யாவின் பாடியில் ஏதாவது வித்யாசமாகக் காட்டிக் கொடுத்து விடுமா?"

"ம்ஹூம். ஆனால் ரொம்ப நேரம் வைத்திருப்பது நல்லதில்லை. யாரையும் கிட்டே நெருங்க விடாமல் பார்த்துக் கொள்வது நல்லது."

"அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

"அவர் மனைவியிடம் சொல்லியாகி விட்டதா?"

"இன்னும் இல்லை. டாக்டர், நேரம் அதிகம் இல்லை. பி.எம்.க்கு ஏற்பாடு செய்யுங்கள். அரசாங்க டாக்டர்கள் இரண்டு பேர் இப்போது வருவார்கள். முடிந்ததும் வேனில் வைத்து வீட்டிற்கு எடுத்துச் சென்று விடலாம்...."

"கமிஷனர், எங்களுக்கு எதுவும் பிரச்னை வராதே?"

"வராது. உலகத்தைப் பொறுத்தவரை சூர்யா திடீரென்று ஹார்ட்-அட்டாக்கில் செத்துப் போனார். அவ்வளவுதான்."

"பத்திரிகைகள் சும்மா இருக்காது..."

"எல்லாம் கொஞ்ச நாளில் அடங்கி விடும்."

"மிஸஸ் சூர்யாவைச் சமாளிப்பது முக்கியம். அவர்களுக்கு நம் மீது கோபம் நிச்சயம் இருக்கும்..."

"எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். புரிய வைக்கிறோம்."

"லெட் அஸ் ஹோப் ஃபார் தி பெஸ்ட்."

சூர்யா பிரேதப் பரிசோ



கண்ணைக் கசக்கிக் கொள்ள வேண்டாம்!

ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்க வேண்டும் என்கிறார் ஜுமா மஸ்ஜித்தின் ஷாஹி இமாமான சையத் அப்துல்லா புகாரி. ஆர்.எஸ்.எஸ். தலைவர்களான பாலாசாகிப் தேவரஸ், நானாஜி தேஷ்முக் இவர்களை ஷாஹி இமாம் சந்திக்கிறார்.

அப்புறம் வாஜ்பாயை சந்தித்துத் தேர்தல் உடன்பாடிக்கை பற்றிப் பேசுகிறார். முஸ்லிம்களின் ஓட்டு தனக்கு அவசியம் வேண்டுமென்கிறார் வாஜ்பாய். இமாம் ஒத்துழைக்கிறார்.

(கண்ணைக் கசக்கிக் கொண்டு இரண்டாவது முறை படிக்க வேண்டாம். இது நடந்தது 1977 - ல் என்ன... நமக்கு மறதி என்ற வியாதியும் ஓட்டுப்போட வசதியும் இருப்பதால் அரசியல் வாதிகளால் என்ன வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேச முடிகிறது. செய்ய முடிகிறது!)

ஆதாரம் : ஹிந்து 24.02.93

✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤ ✤

தலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

அது இப்போது சூர்யா இல்லை. வெறும் உடல். பிரகாசமான கண்கள் இமை மூடியிருந்தன. எத்தனை ஆட்டம், எத்தனை உற்சாகம் செய்த உடல் இது? எவ்வளவு நிர்ச்சலனமாய் கிடக்கிறது இப்போது? இந்த சூர்யாவுக்குக் கோபம் வராது. சிரிக்க மாட்டான். ம்ருணா அருகில் வந்தால் அள்ளிக் கொள்ள மாட்டான். அவனுடைய அருமையான மனைவியைப் பார்த்து ஒரே ஒரு புன்னகை கூட அவனால் செய்ய முடியாது. அவனைக் கீறினால் வலிக்காது. டேபிளின் மேல் ஒளிர்ந்த பிரகாசமான வெப்ப ஒளி அவனை எதுவும் செய்ய வில்லை. கைகள், கால்கள், முகம், உணர்ச்சி, உயிர் எல்லாம் இழந்து விட்ட வெகு அற்பமான 'பாதாலஜி' சூர்யா இவன்!

அந்த இரண்டு டாக்டர்களும் முகத்தில் மாஸ்க் அணிந்திருந்ததால் அவர்களின் உணர்ச்சிகளற்ற முகத்தை அடையாளம் தெரியவில்லை. அவர்கள் செய்ய வேண்டிய கடமை - வெள்ளை நிற அரசாங்க பேப்பர்களில் ஒரு 'விந்தையான ரீதியான அறிக்கையை' நிரப்புவது. அவ்வளவுதான்.

சூர்யாவின் மூளையைத் திறந்தார்கள். கவனித்தார்கள். இன்ஃப்ளமேஷன்! ஹைறப்பரேமியா தெரிந்தது. நியூரோக்லியா பகுதிகளும் தெரிந்தன. குறிப்பெடுத்துக் கொண்டார்கள். அவனுடைய நரம்பு வலைகளில் ஹெமரேஜ் இருந்தது. மூக்குத் துவாரத்தினுள் ம்யூக்கஸ் திரவம் படிந்திருந்தது. அவனுடைய முதுகெலும் பில் கரண்டினார்கள். சருகளில் ரத்தக் கசிவைக் குறிப்பெடுத்தார்கள்.

மறுபடி தைத்தார்கள் மூடினார்கள்.

சூர்யாவின் சரித்திரம் முடிந்தது.

அதிகாலையில் அந்தச் செய்தி சென்னை நகரை உலுக்கியது. யார் சூர்யாவா? அந்த முரட்டு மனிதனா? யாருக்கும் அதை நம்பும், ஜீரணிக்கும் சக்தி இல்லை. குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், ஏன், முதியவர்கள், இவர்களின் ஒருவித ஆதர்ச பிம்பம் அவன். அவன் ஏழைகளைக் காப்பாற்றுவான். தொழிலாளர்களின் தோழன். சமூக விரோதிகளைப் பந்தாடும் இன்ஸ்பெக்டர். அரசியல்வாதியை நடுத் தெருவில் கொல்லும் ஆக்ரோஷமான புரட்சிக்காரன். தாய்க்காக உயிரைக் கொடுப்பான். காதலியைச் சிரிக்க வைப்பான். பிரச்னைகளை மிகச் சுலபமாகத் தீர்த்து வைப்பான். அவன் பாசம் நிறைந்த அண்ணன், நேசம் மிகுந்த மகன். காதல் நிறைந்த காதலன்! ஒரு பரிபூர்ண, மண்ணுலக ஆச்சர்ய தேவன்.

சூர்யா! - போய் விட்டாயா?

சூர்யாவின் பங்களாவைச் சுற்றி நான்கு ச.கி. மீட்டருக்குப் போலீஸ் சங்கிலி மூடியிருந்தது. வாசலில் அவசர சவுக்குக் கம்பிப் பாதை அமைத்து, எதிரே மாலைகளுக்குள் படுத்திருந்த சூர்யாவுக்கு வரிசையாக மரியாதை செலுத்தினார்கள். கிழவிகள் தங்கள் மகனை இழந்த சோகத்தில் மார்பில் அறைந்து அழுதார்கள். சிலர் மயக்கமடைந்தார்கள். கறுப்பு உடை அணிந்திருந்த இளைஞர்களின் முகத்தில் விரக்தியின் எல்லையும் நம்பகமில்லாத் தன்மையும் தெரிந்தது. இண்டெலிஜன்ஸ் போலீஸ்காரர்கள் சாதாரண உடைகளில் இளைஞர்களின் மத்தியில் புகுந்து காதைத் நீட்டிக் கொண்டார்கள்.

''டேய், என்னடா இது?''

''கொன்னுட்டாங்க! தலைவரைக் கொன்னுட்டாங்க!''

''இனி என்னடா வாழ்க்கை?''

''இந்த வயசுல மாரடைப்பா! தலைவா!''

ஒரு கறுப்பான இளைஞன் உடல் முழுவதும் பெட்ரோல் வாசமுடன் 'தலைவா' என்று கதறியபடி ஓடி வந்து, விளாடி இடை

வெளியில் தீப் பெட்டியைக் கிழித்து உடையில் முத்தமிட, ஜ்வாலை வெடித்தது.

எரிந்து கொண்டே ஓடியவனைப் பிடித்தார்கள். தண்ணீர் ஊற்றினார்கள்.

''விடுங்கடா! என் தலைவன் போன பிறகு எனக்கு எதுக்குடா உயிர்!''

''பைத்தியக்கார கும்பல் இது. சன் முகம்! பி கேர்ஃபுல்!''

திரையுலகின் புள்ளிகள் நிஜமான சோகத்தோடு அமைதியாக மலர் வளையங்களை வைத்தார்கள். சிலர் கதறி அழுதார்கள். நெல்லை மாவட்ட டிஸ்ட்ரிபூய்ட்டர் ஒருவர் வாயில் அறைந்து கொண்டு, ''சூர்யா! உன்னால தானேப்பா எனக்கு இந்த வாழ்வே கிடைச்சது'' என்று அலறினார்.

கமிஷனர் முத்துக்குமரன் மயக்கமாகிக் கிடந்த நிலகாவை அனுதாபத்துடன் பார்த்துக் கொண்டே டெலிஃபோனை அடைந்து நடிகன் மதன்ராஜை தொடர்பு கொண்டார். பேச வேண்டியதை யோசித்துக் கொண்டார்.

''நான் மதன்ராஜ் பேசறேன்.''

''ஹலோ! நான் போலீஸ் கமிஷனர்! நீங்க சூர்யாவுக்கு அஞ்சலி செய்ய அவர் வீட்டுக்கு வர வேண்டாம். நீங்க வந்தா நிலைமை மோசமாகும்...''

''ஸார்! ஒரு சக நடிகனுக்கு அஞ்சலி செலுத்தக் கூட வரக் கூடாதா?''

''உங்க ரெண்டு பேருக்கும் இருக்கும், ஸாரி, இருந்த, பகைமை ஒண்ணு போதும். ஐ மீன், தொழில் ரீதியாக...''

''ஸார்! இட்'ஸ் ஆல் ப்ரஃபஷனல்.''

''பரவாயில்லை. வேற யாரையாவது பிரதிநிதியா அனுப்புங்க போதும்.''

''சரி. ஒரு அறிக்கை விட்டுடறேன்.''

''செய்யுங்க.''

''ஸார்! நிஜமாவே ஹார்ட்-அட்டாக்கா?''

அந்தத் தொனியில் தெரிந்தது அப்பாவித்தனமா? கிண்டலா? மகிழ்ச்சியை மறைக்கும் சோகமா?

''யெஸ்'' என்றார்.

''ஹி வாஸ் எ கிரேட் ஆக்டர்!''

''வைச்சிடட்டுமா?''

''ஷ்யூர்.''

மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவசரமாக வந்து, ஒரு விறைப்பான சல்யூட் வைத்து, ''ஸார்! பத்திரிகைக்காரங்க துளைக்கிறாங்க. அஃபிஷியல் நியூஸ் வேணுமாம்.''

''சரி, வர்றேன். நீங்க போங்க!'' என்றார்.

கமிஷனருக்கு மனம் படபடவென்றது.

இந்தப் பத்திரிகைக்காரர்கள் எமகாதகர்கள். வேறு வழியில்லை. சமாளிக்கத்தான் வேண்டும்.

அவர்களைச் சந்தித்தார். பாதி நிருபர்கள் இளைஞர்கள். கேள்வி கேட்பவர்களின் முகம் முக்கியமில்லை. ஏதோ ஒரு ஆர்வ முகம். பதில் சொல்லியே ஆக வேண்டும்.

''ஹார்ட்-அட்டாக் எத்தனை மணிக்கு ஏற்பட்டது?''

''அதிகாலை ஐந்து மணி அளவில்.''

''வீட்டிலா? ஆஸ்பத்திரியிலா?''

''வீட்டில்தான். எதற்காக ஆஸ்பத்திரி?''

''நேற்று இரவில் சூர்யா எங்கே இருந்தார்?''

''வீட்டில்.''

''சிகிச்சை ஏன் கொடுக்கவில்லை?''

''மாஸிவ் அட்டாக். டாக்டர் வருவதற்குள் உயிர் பிரிந்து விட்டது.''

''யார் டாக்டர்?''

''நெக்ஸ்ட் கொஸ்சின்?''

''போஸ்ட் மார்ட்டம் செய்தீர்களா?''

''ஹார்ட்-அட்டாக்கிற்கா? முட்டாள்தனம்!''

''இரண்டு நாட்களுக்கு முன்னால் சூர்யாவின் ஷூட்டிங் ஏன் கேன்ஸலானது?''

''அது பர்ஸனல். எனக்குத் தெரியாது.''

''இது இயற்கை மரணம்தானே?''

''ப்ளீஸ். இந்தச் சோகச் சூழ்நிலையில் வதந்தியைப் பரப்பாதீர்கள்.''

''சூர்யாவின் டாக்டருடன் நாங்கள் பேச வேண்டும்.''

''அது முடியாது.''

''ஏன்?''

''அதை அவர் விரும்பவில்லை.''

''சூர்யாவை எரிக்கப் போகிறீர்களா அல்லது புதைக்கப் போகிறீர்களா?''

''அவர் குடும்பத்தில் முடிவு செய்வார்கள்.''

ஓர் இளம் நிருபரின் கணீரென்ற குரல், ''சூர்யாவின் மூக்கிலிருந்து ஒரு திரவம் வடிகிறதே? அது ஏன்? ஹார்ட்-அட்டாக்கில் அது ஏற்படுமா?'' என்றது.

(தொடரும்)

''அந்த அதிகாரி வித்யாசமானவரா இருக்கட்டும்... அதுக்காகக் 'காரியம் ஆகணும்னா எனக்குக் கவர் மாலை போடணும்'னா கண்டிஷன் போடுறது?''

– பி. ஜி. பி. இசக்கி



சென்ற வருஷம் ஊட்டி; இந்த வருஷம் கோவா; அடுத்த வருஷம் முஸ்ஸௌரி!

ரயில் கட்டணங்கள் ஏறியாச்சு; தமிழ் நாட்டில் பத்தொன்பது மாவட்டங்களில் குடிதண்ணீர்ப் பஞ்சம்; கோடை வெயில் எப்போதையும் விட கடுமையாய்க் கொளுத்துது...

இருந்தாலும்...

சுற்றுலாத் தலங்களில் ஹோட்டல்கள் நிரம்புகின்றன; அவசரத்துக்கு ரயில் டிக்கெட் கிடைக்காத அளவுக்குப் பயணிகள் நெரிசல்; 'எல்.டி.ஸி. கிடைக்கற வரைக்கும் எனக்கென்ன கவலை?' என்று ஜாலியாக விடுமுறை அனுபவிக்க புறப்பட்டுவிட்ட மத்தியதர வர்க்கத்துக் கூட்டம்...

நீங்கள் இந்தக் கூட்டத்தில் ஒருவராயின் 'ஹாப்பி ஹாலிடே' என்று வாழ்த்து





கிறோம்; வெறும் ஏக்கப் பெருமூச்சு தான் கட்டுப்படி யாகும் எனில் இந்தப் பக்கங்களில் உள்ள வண்ணப்பட விருந் தால் உங்கள் மனக் குறை சற்றே தணியக் கூடும்!

நிற்க,

விடுமுறைக்கு அம்மா, மாமியார், அத்தை அல்லது தாத்தா வீட்டுக்குப் போவதுதான் நம்மூர் வழக்கம். 'மாயவரத் தில் மாமாவைப் பார்க்கப் போனால், அப்படியே வைத்தீஸ் வரன் கோயில், சீர் காழி, சிதம்பரம் என்று பார்த்துட்டு வரலாம்...' - இந்த மனப்பான்மை இப்

* மைசூர் சாமுண்டி மலையில் நந்தி



* சாரநாத்



* திருப்பரங்குன்றம் கோயில் சிற்பம்



● ஸ்டெர்லிங்கில் குழந்தைகளுக்குப் பொழுதுபோக்கு அம்சங்கள் ஏராளம்...

போது மாறி விட்டது அல்லது வேகமாக மாறி வருகிறது...

அத்தாட்சி : ஆண்டுக்கு ஒரு வார கால விடுமுறையை ஆயுள் காலத்துக்கு விலைக்கு வாங்கி விட்ட சுமார் பதினாலா யிரம் பேர்! ஊட்டி, கொடைக்கானல், டார்ஜிலிங், கோவா, முஸ்ஸௌரி போன்ற இடங்களில் (ஏதேனும் ஒன்றில்) ஒவ் வொரு வருஷமும் ஒரு வார கால விடு முறையை இவர்கள் அனுபவிக்கலாம்.

எப்படி...? விளக்குகிறார் 'ஸ்டெர் லிங் ரிஸார்ட்ஸ்' நிறுவனத்தின் வட்டார மேலாளர் குமார் மார்க்கண்டன் :

''நாற்பது முதல் அறுபதாயிரம் ரூபாய் வரை கொடுத்து உங் களுக்கென ஒரு தங்கு மிடத்தை நீங்கள் விரும் பும் சுற்றுலா தலத்தில் வாங்கலாம். மூன்று, நான்கு அல்லது ஆறு பேர் தங்கக்கூடிய அளவு களில் இவை கிடைக் கும். இந்தத் தங்குமிடம் வருடத்தின் ஒரு குறிப் பிட்ட வாரம் முழுதும் உங்கள் பிரத்யேக உப யோகத்துக்கு அளிக்கப் படும். ஒவ்வொரு வரு டமும் அந்தத் தேதிகளில் நீங்கள் அங்கு தங்கி விடுமுறையை அனுபவிக்கலாம்.

''உங்களுக்கு உரிய நேரத்தில் விடு முறை எடுத்துக் கொள்ள இயலவில் லையா? 45 நாட்கள் முன்னதாகத் தெரிவித் தால் வேறு ஒரு சௌகரியமான வாரத்தை உங்களுக்கு ஒதுக்கித் தருவோம்...

''ஆண்டுதோறும் ஒரே ஊருக்குச் செல்ல இஷ்டமில்லையா? எங்கள் ஏழு ஸ்டெர்லிங் ரிசார்ட்களுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து முன்கூட்டியே தெரிவித்து விடுங்கள்... நீங்கள் அங்கு விடு முறையை அனுபவிக்க ஏற்பாடு செய்து தருகிறோம். (1995-96க்குள் இந்த வசதி இந்தியாவில் 25 சுற்றுலா இடங்களுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.)

''நீங்கள் விரும்பிய வாரத்தில் விரும் பிய ஊரில் தப்பித் தவறி இடம் கிடைக்காது போனால் உங்களுக்கு உரிய ஒரு வாரத்தைச் சேமித்து வைத்து, அடுத்த ஆண்டு இரு வாரங்களாக அனுபவிக்கலாம்.

''அல்லது அந்த ஒரு வாரத்தை வேறு யாரேனும் ஒருவருக்கு விற்று விடலாம். ஒரு புதுமண தம்பதிக்குத் தேன்நிலவுப் பரிசாகக் கொடுக்கலாம்...

''சுருக்கமாகச் சொன்னால் ஆயுட் காலத்துக்கும் (99 ஆண்டுகள்) உங்கள் வரு டாந்திர விடுமுறை உறுதியாகிறது. இந்த உரிமை ஒரு சொத்து - இதை வேறொரு வருக்கு விற்க, பரிசளிக்க, உயிலெழுதி வைக்க - சட்டப்படி முடியும்...''

விடுமுறைக்காகக் கணையாய் ஐம்பது - அறுபதாயிரம் செலவா...? யாரால் ஆகும் இந்த ஆடம்பரம்...?

குமார் மார்க்கண்டனிடம் பதில் தயா ராய் இருக்கிறது.

''இன்றைக்கு மத்தியதர வருப் பினருக்கு அதொன்றும் அவ்வளவு பெரிய தொகை இல்லை. மேலும், அந்தத்

● ஸ்டெர்லிங்கின் கொடைக்கானல் 'காட்டேஜ்'



''தொகையை பாங்கில் போட்டால் என்ன வட்டி கிடைக்கும் என்று கணக்குப் போடுகிறவர்களுக்குச் சொல்கிறேன் : வருடா வருடம் சுற்றுலாத் தலங்களில் ஹோட்டல் அறைகளின் வாடகை விகிதம் ஏறிக் கொண்டே போகிறது. இரண்டு வருட இடைவெளியில் இரட்டிப்பு கூட ஆகிறது. ஆனால் நீங்கள் ஒருமுறை செலுத்திய 40-50 ஆயிரம் ரூபாய்க்கு ஆயுள் முழுதும் வருடாந்திர விடுமுறை அனுபவிக்கலாமே!''

வங்கிகளுடன் இணைந்து இந்தப் பணத்தைத் தவணை முறையில் செலுத்தும் வசதியும் வெகு சீக்கிரம் அமுலுக்கு வரவிருக்கிறதாம்!

முதலீடு செய்த பணத்தின் மதிப்பை முதல் ஐந்து வருடங்களுக்குள் அனுபவித்து முடித்து விட்டு, எஞ்சிய வருடங்கள் ஏறத்தாழ இலவச இட வசதி பெறுகிறார்கள் வாடிக்கையாளர்கள் என்பது குமாரின் கணிப்பு.

சரி, இந்தச் செலவு தங்குமிடத்துக்கு மட்டும் தானே... உணவு...?

''ஒவ்வொரு ஸ்டெர்லிங் ரிசார்ட்டிலும் ரெஸ்டாரண்ட் உண்டு - உணவுப் பண்டங்களின் விலை அவ்வூரின் மற்ற ஹோட்டல்களுடன் ஒப்பிடக் கூடிய விகிதம்தான். தரத்துக்கு காரன்டி... அப்படியும் விரும்பாமல் சொந்தமாய்ச் சமைத்துச் சாப்பிட வேண்டுமா...? அதற்கும் உங்கள் தங்குமிடத்திலேயே எல்லா வசதிகளும் உண்டு. மளிகை மட்டும் அதே வளாகத்தில் உள்ள கடையில் வாங்கிக் கொள்ளலாம்...''


ஸ்டெர்லிங் ரிசார்ட்களின் ஸ்பெஷாலிடி அவர்கள் ஏற்பாடு செய்யும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள்தான் என்றும் கூறுகிறார் குமார். தனிமை விரும்பிகளுக்காக மலைப் பகுதியில் நடைபயணம், தூரத்து இடங்களில் பிக்னிக் என்று ஏற்பாடு செய்கிறார்கள். ஜாலியான பேர்வழிகளுக்கு ஸ்டெர்லிங் வளாகத்திலேயே பல்வேறு போட்டிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள்... குழந்தைகளுக்குத் தனியாக விளையாட வசதி, அவர்களை மேய்த்துக் கட்ட ஆள், படை.... எல்லாம் உண்டு.

ஸ்டெர்லிங்கின் டிவிஷனல் மானேஜர் புராடக்ட் - மோஹித் ஜெயின். இவர் இந்த வியாபாரத்தைப் புதிய கண்ணோட்டத்தில் பார்வையிடுகிறார் :

''எங்களுக்கும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கும் லாபம், மன நிறைவு ஒருபுறமிருக்கட்டும்; மாநகரங்களில் தேங்கி உள்ள பணம், எங்கள் திட்டங்கள் காரணமாகச் சிறு நகரங்களில் முதலீடாகி அங்கெல்லாம் தொழில் வளமும் பொருள் வளமும் பெருக உதவுகிறது. அனைத்துலக அளவில் இது விஸ்தரிக்கப்படும் போது, அயல்நாட்டுப் பயணிகளும் இங்கே அதிகமாய் வருவார்கள் என்பதால் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும் - சுற்றுலாத் தொழில் பெருகி வளரும்.''

—அலமேலு கணேசன்

வண்ணப்படங்கள் : யோகா



கருத்து : ஆர்.பி. சாமி படம் : டிஸ்னி

''வர வர ஞாபக மறதி அதிகமாயிட்டு வருதுங்க.''

''எப்படிச் சொல்றீங்க?''

''ஆபீசுக்குக் கிளம்பறப்போ ஒரு நாளைக்குக் குடையை எடுத்துப் போக மறந்துடறேன். இன்னொரு நாள் செருப்பை மாட்டிக்கிட மறந்துடறேன். அடுத்த நாள் டிபன்-பாக்ஸை விட்டுட்டுக் கிளம்பிடறேன்.''

''அடப் பாவமே.''

''ஆனா இன்னிக்குப் பாருங்க... ஒண்ணுமே மறக்காமல் குடை, செருப்பு, டிபன்-பாக்ஸ், பவுண்டன் பேனா, மணி பர்ஸ், கர்ச்சீப் எல்லாம் எடுத்துட்டு வந்திருக்கேன். 'ஆனா' இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமைங் கறதை மறந்துட்டேன்!''

- கே. ரவிவர்மன்



பாண்டியன் மகள்

12. அழைப்பில் ஓர் ஆபத்து!

பிற்காலத்தில் இரண்டு தலைமுறைக் காலத்திற்குக் குறையாமல் பாண்டியருடன் சேர்ந்து ஈழத்து ஆதிக்கத்தைத் தமிழகத்தில் ஏற்படுத்திய ஈழத்து இளவரசன் பராக்கிரம பாகுவின் வலது கரம் போன்றவனும், போரில் இணையற்ற வீரத்தைக் காட்டிய தால் வீரகேசரி என்ற பட்டப் பெயர் பெற்ற வனுமான ஈழத்துத் தண்டநாயகனின் தோற் றமும் அவன் நின்றிருந்த தோரணையும் அச்சமூட்டுபவையாக இருந்தன.

அவன் பார்வையில் வல்லூறின் கூர்மை யும், ஆழ்ந்த சிந்தனையும் தெரிந்தன. கரகரத்த அவன் குரல் ஆணையிடவே ஏற் பட்டதென்பதைப் புரிந்து கொண்ட சமுத் திரபந்தன், "ஈழத்து இளவரசியும் தண்ட நாயகரும் இந்த ஏழையைத் தேடி வந்தி ருப்பது பெருமை அளிக்கிறது" என்று முக மன் கூறினாலும், அவன் அறிவு மட்டும், 'வந்திருப்பவன் சாதாரண மனிதனல்ல, அசாதாரணமான புத்தி கூர்மை உடையவ னாதலால் சற்று எச்சரிக்கையுடன் பேச வேண்டும்' என்று கூறிக் கொண்டிருந்தது.

நேரிடையாகவே விஷயத்திற்கு வந்த வீரபாகு, ஆசனத்தில் அமர்ந்ததும் கேட் டான் : "நீங்கள் காஞ்சியிலிருந்து வந்தி ருப்பதாக அறிந்தேன்!"

"ஆம். தாங்களும் தமிழகத்திற்கு வரு வது இது இரண்டாவது முறையென்று எண்ணுகிறேன். சந்திக்கும் பாக்கியம் இப் போதுதான் ஏற்பட்டிருக்கிறது."

"சோழ நாட்டில் நிலைமை எப்படி யிருக்கிறது?"

வீரபாகுவின் கேள்விக்கு உடனடியா கப் பதிலளிக்காத சமுத்திரபந்தன், உண்மை யில் சிந்தித்தானா அல்லது சிந்திப்பதாகப் பாவனை செய்தானா என்பது தெரிய வில்லை.

சற்றுப் பொறுத்துக் கூறினான் : "சோழ நாட்டின் நிலை தற்சமயம் பாண்டியருக்கும் அவருக்கு உதவ வந்திருக்கும் தங்களுக்கும் சாதகமாகத்தான் இருக்கிறது."

சமுத்திர பந்தனது பதிலைக் கேட்ட வீரபாகு, அதன் உள் அர்த்தத்தை நினைத்து வியந்தான்.

மாறவர்மனுக்கு மணம் பேசவும், படை உதவி செய்யவும் தாங்கள் வந்திருப் பதை சமுத்திரபந்தன் பூரணமாக அறிந்திருக் கிறான் என்பதை அவன் பதில் விளக்கினா லும் அதன் தொனி இன்னும் அதில் ஏதோ விஷயமிருக்கிறதென்பதை உணர்ந்தவே மீண்டும் கேட்டான் :



விஷ்வக்சேனன்

''பாண்டியர் அரசு அமைப்பது சாத்தியமாகத் தோன்றுகிறதா?''

''பாண்டியர் அரசமைப்பது சாத்தியம் தான்'' என்று பதிலளித்த சமுத்திரபந்தன், பாண்டியர் என்ற பதத்தில் சற்று அழுத்தம் கொடுத்தான்.

வீரபாகுவின் சிந்தனை சற்று குழம்பியதை அவன் கண்கள் உணர்த்தின. திரும்பி ஒருமுறை இளவரசியை நோக்கிய அவர் பார்வையிலும் அது நன்றாகத் தெரிந்தது.

அடுத்து வந்த சமுத்திரபந்தனது வார்த்தைகள் அவர்கள் வந்த நோக்கத்தையே சிதறடிப்பதாக இருந்தது.

''பாண்டியர் அரசமைந்தாலும் மாறவர்மருக்கு அரியணை கிட்டுமா என்பது தான் சந்தேகமாயிருக்கிறது'' என்றான் சமுத்திரபந்தன்.

''ஏன் கிட்டாது?'' ஏககாலத்தில் இரு குரல்கள் ஒலித்தன.

இருக்கையை விட்டு எழுந்த சமுத்திரபந்தன் கைகளைப் பின்புறம் கட்டியபடியே மெல்ல உலவினான். அடுத்து அவன் கூறிய வார்த்தைகள் இருவரையும் திகைக்க வைத்தன.

''பாண்டிய வம்சம் பெண்வழி அரசுரிமை உடையது.''

''ஆம்.''

''பாண்டிய இளவல் மாறவர்மன் ஜடாவர்ம பாண்டியரின் சொந்த மகனல்ல.''

''உண்மைதான்.''

''இறந்து விட்ட பாண்டிய மன்னருக்கு ஒரு மகளிருப்பதை இப்போதுதான் அறிந்தோம்.''

''அப்படியா?'' வீரபாகுவின் குரலில் வியப்பு ஒலித்தது.

''இதைப் பாண்டிய மக்கள் அறிந்தால் மாறவர்மனை ஏற்பதென்பது கனவிலும் நடவாது.''

அது உண்மையென்பதை நன்றாக உணர்ந்த வீரபாகுவும், இளவரசியும் குழப்பமான சிந்தனையுடன் அமர்ந்திருந்தனர். மாறவர்மனுக்கு இளவரசியை மணம் செய்து கொடுத்து, தமிழகத்தில் வேரூன்றத் திட்டமிட்டிருந்த தண்டநாயகனுக்கு இந்தச் செய்தி பெரும் ஏமாற்றமாயிருந்தது.

''ஆனால் சேரலாதர் தற்போது மாறவர்மருக்கு உதவவே தீர்மானித்திருக்கிறார். படைத் தலைவர் கங்காதரர் எண்ணமும் அதுதான்'' என்ற சமுத்திரபந்தன் தொடர்ந்தான் :

''கோட்டாற்றில் போரை எதிர்பார்க்கிறார் படைத் தலைவர். அங்குள்ள சோழரின் சொற்பப் படையை வென்றால் மதுரையை நேர் வடக்கே சென்று எதிர் கொள்ளலாம். அந்தப் போர் பாண்டியரின்



தலைவிதியை நிர்ணயிக்கும் போராக இருக்கும்.''

வீரபாகுவிடமிருந்து அடுத்த கேள்வி கிளம்பியது : ''போரின் முடிவு மாறவர்மருக்குச் சாதகமாக இருந்தாலும் மதுரை அரியணை கிடைப்பது சந்தேகம் என்கிறீரே சமுத்திரபந்தரே?''

''பாண்டியன் மகளைப் பற்றி மக்கள் அறியாதவரை மாறவர்மருக்கு ஆபத் தொன்றுமில்லை.''

சிந்தனையில் ஆழ்ந்து விட்ட வீரபாகு சற்று நேரம் கழித்து நிமிர்ந்து கேட்ட கேள்வி சமுத்திரபந்தனைத் தூக்கி வாரிப் போட்டது.

''இந்த அரையன் மதுராந்தகன் என்பவன் யார்?''

சற்று விழித்த சமுத்திரபந்தன், ''எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்றான்.

''அவன்தான் பாண்டியர் படையெடுப்பை முறியடிக்கத் திட்டம் வகுத்ததாகவும், சொற்பப் படை கொண்டு மேலை மங்கலத்தை மீட்டதாகவும் அறிந்தேன். அவன் பெயரைக் கேட்டாலே மாறவர்மன் மிரள்கிறான். அத்தகைய வீரன் நிலையான அரசையும் அமைக்க வல்லவன். உங்களுக்கு அவனைத் தெரியுமா?''

''தெரியும்'' - ரத்தினச் சுருக்கமாக வந்தது சமுத்திரபந்தன் பதில்.

''அவன் இப்போது எங்கிருக்கிறான்?''

சற்று சிந்தித்த சமுத்திரபந்தன் கூறினான் : ''அவன் வடக்கே சோழ மன்னருக்கு உதவச் சென்று விட்டதாகக் கேள்வி.''

அரையன் மதுராந்தகனின் பெயரைக் கேட்டதும் சமுத்திரபந்தனது முகத்தில் கண நேரம் ஏற்பட்ட மாறுதலை அவனையே கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்த இளவரசியின் கண்கள் கவனிக்கத் தவறவில்லை. மெல்லிய முறுவலொன்று அவள் இதழ்களில் தவழ்ந்தது.

அதைக் கவனித்தாலும் காணாதது போல் தொடர்ந்த சமுத்திரபந்தன், ''தண்ட நாயகரே, மாறவர்மர் மதுரை அரியணையில் அமர சேரர் படைத்தலைவர் ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்'' என்றான்.

வீரபாகுவின் விழிகளில் ஆவல் தெரிந்தது.

''என்ன திட்டம் அது?''

''சோழ, பாண்டிய அரசியலில் போர் ஏற்படும் வரை நேரிடையாகச் சேரர் தலையிடுவதை அவர் விரும்பவில்லை. பாண்டியருக்கு அத்தனை திறமில்லையென்றும் கருதுகிறார். உங்கள் உதவிதான் தற்போது தேவைப்படுகிறது.''

''என்ன உதவி வேண்டும், கூறுங்கள்?''

''பாண்டியன் மகளைப் பற்றி மக்கள் அறியும் முன் அவளை அப்புறப்படுத்தி விட வேண்டும். விளக்கமாக ஓலையொன்றும் தங்களுக்குக் கொடுத்திருக்கிறார் படைத் தலைவர்'' என்ற சமுத்திரபந்தன், கச்சையிலிருந்து கங்காதரன் எழுதிய ஓலையைத் தண்டநாயகனிடம் நீட்டினான்.

ஓலையைப் பெற்றுப் படித்த தண்டநாயகன், ''சரி நான் இதைப் படைத் தலைவருக்காக ஏற்றுக் கொள்ளுகிறேன். இதற்கான ஏற்பாட்டையும் இன்றே கவனிக்கிறேன்'' என்றபடி எழுந்தான்.

''உங்கள் ஏற்பாட்டைப் பற்றி என்னிடமும் கூறுங்கள். படைத் தலைவருக்குச் செய்தி தெரிவிக்க ஏதுவாக இருக்கும்.''

''அவசியம் உங்களிடம் தெரிவிக்கிறேன்'' என்ற தண்டநாயகன் விடை பெற்றுக் கொண்டான்.

செல்வதற்கு முன் ஈழத்து இளவரசி உலகையே மயக்கவல்ல புன்னகையொன்றை சமுத்திரபந்தன் மீது வீசி விட்டுச் சென்றாள்.


அவர்கள் சென்ற பின்னரும் நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் சமுத்திரபந்தன்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. வெகு நேரம் கழித்து வாசலில் வந்து நின்ற வீரனொருவன் கொடுத்த குரல் சமுத்திரபந்தனைச் சிந்தனையிலிருந்து திசை திருப்பியது.

அந்த வீரனது கரத்தில் நறுக்கோலையொன்றிருந்தது. ''இதைத் தங்களிடம் கொடுக்கும்படி எனக்கு உத்தரவு'' என்றவன் ஓலையைச் சமுத்திரபந்தன் பெற்றுக் கொண்டதும் வணங்கி விறுவிறுவென்று நடந்து மறைந்தான்.

நறுக்கோலையில் இரண்டே வரிகள் இருந்தன :

''உங்களிடம் தனிமையில் சில விஷயங்களைப் பேச வேண்டும். இன்று மாலை அஷ்டமுடி ஏரியின் கரையில் உங்களை எதிர்பார்க்கிறேன் - ஈழத்து அஞ்சனா தேவி.''



ஏறக்குறைய உத்தரவிடுவதைப் போலி ருந்த அந்த ஓலையை ஏற்பதா வேண்டாமா என்று சிந்தனையில் ஆழ்ந்தான் சமுத்திர பந்தன்.

அஞ்சனாதேவி விடைபெற்றுச் செல்லு முன் தன்னைப் பார்த்த பார்வை அவன் நினைவில் நிழலாடியது.

ஓலையில் எந்தவித முத்திரையும் இல் லாமலிருப்பது சற்று சந்தேகத்தையும் ஏற் படுத்தியது.

இறுதியில் மாலையில் சென்று பார்ப் பது என்று தீர்மானித்தான் சமுத்திரபந்தன்.

அஷ்டமுடி ஏரியின் நீர்ப்பரப்பு மாலை வெயிலில் தங்கத்தை உருக்கி வார்த் தது போல் மின்னிக் கொண்டிருந்தது. நீர்ப் பரப்பு அதிகமாக இருந்ததால் அலைகளும் சற்று பெரிதாகவே எழுந்து கரையில் மோதிக் கொண்டிருந்தன. சற்று நேரத்தில் மாலை நன்றாக முற்றி, இருள் கவியத் தொடங்கியதில் நீர்ப் பறவைகளின் கூச்ச லும் மெல்ல அடங்க ஆரம்பித்தது. மனித நடமாட்டமும் முற்றிலும் அற்றுப் போய், வீசிய காற்றைத் தவிர வேறு எந்த அரவமும் இல்லாது அமைதி நிலவத் தொடங்கியது. எதிர்க் கரையில் நீண்ட தந்தங்களுடன் நீரில் இறங்கிய சில காட்டு யானைகள் நீரைத் துதிக்கைகளில் உறிஞ்சி, வாணம் போல் பீய்ச்சியடித்துத் தங்கள் முதுகுகளை நனைத் துக் கொண்டன. மரமொன்றின் மீது சாய்ந்து அந்த அழகிய காட்சியை ரசித்துக் கொண் டிருந்த சமுத்திரபந்தன் இருள் நன்கு கவியத் தொடங்கி யானைகளின் உருவங்கள் கூடத் தெளிவாகப் புலப்படாததால் இனி காத்தி ருப்பதில் பயனில்லை என்று தீர்மானித்து அரண்மனையை நோக்கிச் செல்லும் பாதை யில் திரும்ப யத்தனித்தான்.

திரும்பியவன் சட்டென்று நின்றான். எதிரில் நான்கு வீரர்கள் உருவிய வாட்க ளுடன் நின்றிருந்தனர்.

அவர்களில் ஒருவன் கேட்டான் :

''சமுத்திரபந்தன் என்பது நீங்கள் தானே?''

''ஆம்.''

''தாங்கள் எங்களுடன் வரவேண்டும்.''

''எங்கு?''

''சொல்ல உத்தரவில்லை.''

''யார் உத்தரவு?''

''அதையும் சொல்வதற்கில்லை.''

''வர மறுத்தால்?''

''வலுக்கட்டாயமாக அழைத்துச் செல் லப்படுவீர்கள்.''

கடகடவென்று நகைத்தான் சமுத்திர பந்தன். நகைப்பினூடே ''முடிந்தால் முயன்று பாருங்கள்'' என்றும் கூறினான்.

அதைக் கேட்டு சினமுற்ற வீரர்களில் இருவர் உருவிய வாட்களுடன் ஓரடி முன் வைத்தார்கள். கண்ணிமைக்கும் நேரத்தில் சமுத்திரபந்தனது வலது கால் உயர்ந்து, தன்னை வாளால் மறித்தவனது கையைப் பலமாகத் தாக்கியது. இடது கரம் சுழன்று மற்றொருவன் தோளில் இடிபோல இறங்கி யது.

தாக்கப்பட்ட கரத்திலிருந்து மேலே பறந்த வாளை வெகு லாவகமாய் பற்றிய சமுத்திரபந்தனது வலது கரம் அதை மின்னல் வேகத்தில் சுழற்றத் தொடங்கியது.

அதுவரை அத்தகைய தாக்குத லையோ, வாள் வீச்சையோ கண்டிராத நான்கு வீரர்களும் திகைத்தனர்.

நிராயுதபாணியாக நின்று, நான்கு வீரர் களால் மடக்கப்படுபவன், கணநேரத்தில் ஒருவன் வாளைப் பறித்துச் சுழற்ற முடியும் என்றோ, இன்னொருவனை ஒரே அடியில் செயலிழக்கச் செய்ய இயலும் என்றோ எதிர்பாராத அவர்கள் தாம் அழைத்துச் செல்ல நினைத்தவன், சாமானிய வீரனல்ல என்பதைப் புரிந்து கொண்டனர்.

அந்தி இருளில் கரகரவெனச் சுழன்ற அந்த வாளின் வேகம் அசாத்தியமாக இருப் பதையும் தங்கள் முகத்தின் முன்பாகக் கண்க ளைத் துருவி விடுவதைப் போல் அடிக்கடி தோன்றுவதையும் கண்ட வீரர்கள், மெல் லப் பின்வாங்க ஆரம்பித்தனர்.

தாங்கள் தாக்க நினைத்தது போக, சமுத்திரபந்தனது வாளின் தாக்குதலைத் தடுப்பதே சிரமமாகி விட்ட நிலையில் தவித்த அந்த வீரர்களை இருளிலிருந்து அவசரமாக ஒலித்த குரலொன்று காப் பாற்றியது.

''நிறுத்துங்கள், நிறுத்துங்கள்'' என்று பலமாக ஒலித்த குரலைக் கேட்ட சமுத்திர பந்தன் முகத்தில் வியப்பு படர்ந்தது.

செடி கொடிகளை விலக்கியபடி வேக மாக ஏரிக்கரையில் வந்து கொண்டிருந்தான் மார்த்தாண்டவர்மன்.

(தொடரும்)



- எஸ். முகம்மது யூசுப்



மகராசன்

அண்ணாத்த கமலுக்கு, வணக்கம் நைனா. நேத்து நைட்டு மௌண்ட் ரோடுக்கா வந்துகினு இர்ந்தனா, தேட்ராண்ட நம்ம பாசை கேட்டுது. இன்னாங்கடா, மெட்ராஸ் டமிலு இம்மாண்டக்கரா இந்த எடத்துல யார் பேசறாங்கண்ணிட்டு நைஸா உள்ள பூந்து பாத்தா... அட, நம்ம மாஜு கமலு! சர்தாண்ட்டு குந்திக்கினேன். (நல்ல வேளை, டிகிட்டிகாரன் எவனும் நம்மாண்ட ரப்சர் பண்ல.) சும்மா சைதாப்பேட்டை ஜக்கு கணக்கா உனுக்கு டக்கரா வர்து வாத்யாரே, நம்ம லாங்வேஜு™.

அட, நீ பெரிய இஸ்டாரு, என்னா ரோலுன்னாலும் பூந்து கடாசிடுவ. அந்தப் பொண்ணு பானுப்பிரியா, இன்னா சோக்கா பேசுது வாத்யாரே! ஆனா பாரு, அத்தால 'மெயின்டென்' பண்ண முடியல.

பிரதர், ஒரு விசயம் புருவு பண்ணிட்ட கண்ணா நீ! இன்னா நூளா டமாஸ™ பண்றே! படம் முழுக்க சும்மா ஒரே வெடிதான்!

இன்னொரு மேட்ரு. கதை இல்லாம, இதான் மொத வாட்டி நீ ஆகிட் பண்றேன்னு நெனிகிறேன். ரைட்டா? சர்தான், டமாஸ™ படத்துக்கு இன்னாத்துக்கு கதன்றியா? அதுவும் கரீட்டுதான்.

ஜீடிக்கறை ஜஸ்வநாத்

சேரள இறக்குமதி. எனவே, மம்முட்டி, திலகன் தவிர மற்ற முகங்கள் எதுவும் பரிச்சயமாக இல்லை.

ஊர் மக்களின் அநாத ரட்சகன். சாராயம் காய்ச்சுகிறார். கடத்தல் கைங்கர்யங்கள் பண்ணுகிறார். விடுதலைப் புலி கூடாரம் மாதிரி - எலக்டிரானிக் தொலைத் தொடர்புகளுடன் ஒரு குடிசையில் இருந்து கொண்டு டமால் டமாலென்று வெடி வைக்கிறார். ஆனாலும் ரொம்ப நல்லவர்.

எப்படி?

நாயகன் பாணிக் கதை. நாயகனாக மம்முட்டி. ஷேக் மாதிரி தலைக் கட்டும், பிரஷ் மாதிரி தாடியும். சண்டைக் காட்சிகளில் கூட அலட்டல் இல்லாத நடிப்பு. அசத்தலில் ஒரு அநிதவின வகை.

அக்மார்க் வில்லனாகத் திலகன். ஆனா, ஊன்னா நெஞ்சு வலி என்று மார்பைப் பிடித்துக் கொண்டு துடிப்பதென்ன, குருவாயூரப்பா, குருவாயூரப்பா என்று பழைய சோற்றில் வைத்த வெண்ணெயாக உருகுவதென்ன... இத்தனை வயசிலும் இளமைத் துடிப்பு!

போவட்டும். உன்ன இன்னாத்துக்கு 'நட்புக்கு' அது இதுன்னு டைட்டில்ல போட்டாங்க? ஹீரோ கணக்கா நீதான் படம். ஃபுல்லா வர. பாவம் அந்தப் புள்ள ரமேசு. அதான் ஹீரோன்னாங்க. செம டகின் பாஜி. ஹீரோவா அது? ஜீரோ வாத்யாரே!

முடிய சொல்ல, பைட்டு கூட நீதான் போடற. இன்னா. ஒரு பாட்டு பாடுது இல்ல, அந்த புள்ள? பாட்டு பாட்னா ஹீரோவா? அப்பிடி பாத்தா கௌண்டமணி கூடத்தான் ஹீரோ!

ஆங்... பாட்டுன்னதும் ஒண்ணு கேக்க ணும்ட்டு. மெய்யா சொல்லு! உனுக்கும், இளையராஜாவுக்கும் இன்னா கணக்கு? உம் படம்னா மட்டும் சும்மா ஜில்ஜில்லுனு உட்றாரே மீஜிக்கு? சும்மா சொல்லக் கூடாது. அத்தினி பாட்டும் சொக்குது வாத் யாரே.

டைலாக்கு யாரோ பேரு போட்டாங்க. கோபு-பாவுவாம்ல! பக்கத்துல குந்திக்கினு கிச்சுகிச்சு மூட்றாப்ல ஒரே டமாஸ்தான் போ.

எல்லாம் நல்லா கீது நைனா. ஆனா என்னாமோ ஒண்ணு ஒதிக்கிது. அதுதான் இன்னாண்ட்டு ரோசனை பண்ணிப் பண்ணி பாக்கறேன்...

ஆங்...

மாட்டிக்கிச்சி.

ஜனகராஜி, கௌண்டமணி, செந்திலு, மண்ணாங்கட்டி... இவுங்க பண்ண வேண் டிய ரோலு.

இதுக்கு நீ வேணுமா வாத்யாரே?



ஹீரோயின் யாரோ நீடாபூரியாம். ஆறின பூரி. இன்டர்வெலுக்குப் பிறகு கலெக்டராக வருகி றாள். அசப்பில் கலெக்டர் ஆபீஸ் கிளார்க் கெட் அப். கலெக்டர் ஆபீஸ் டேபிள் வெயிட் மாதிரி நடிப்பு. இடைச்செருகலாக இரண்டு, மூன்று பாடல்கள். ஒன்று தேவலை.

அரதப் பழசு கதை. குழப்பம் தரும் திரைக்கதை. தடுக்கி விழுந்தால் ஃபிளாஷ்பேக்.

இப்படி ஒரு படத்தில் நடித்த பின்னும் மம்முட்டி எப்படி 'மெகா ஸ்டரா'கத் தொடர்ந்து இருக்கிறார் என்ற சந்தேகம் எழுவது தவிர்க்கும்படி இல்லை.



– ஆர்.பி.ஆர்.

கரைந்த நெஞ்சம்

பூரணிக்குத் திகைப்பாக இருந்தது. அவளால் நம்பவே முடியவில்லை. இப்படிக் கூட முடிவு வந்து விடுமா?

அரைமணி நேரத்திற்கு முன்னால்தான் லட்சுமியம்மாள் அவளுக்குக் கட்டளை விட்டு விட்டுச் சென்றாள் - என்ன சமையல் செய்ய வேண்டுமென்று. அந்த வீட்டைப் பொறுத்தவரை எல்லாமே லட்சுமிதான். இந்தப் பூரணியும் இந்த வீட்டுக்கு மருமகளாக வந்து பத்து வருடங்களுக்கு மேலாகியும் கூட நேற்று வந்த புதுப் பெண்ணைப் போல ஒவ்வொரு காரியத்திற்கும் மாமியாரின் உத்தரவு வாங்கித்தான் செய்வாள். அது அப்படித்தான் பழக்கம். ஏன்? இவள் புருஷன் கூட கடைக்குப் போகும் போது அம்மாவிடம் சொல்லிக் கொண்டு தான் போவானே தவிர இவளைத் தேடியதில்லை.

புருஷனுக்குக் காலையில் சாப்பாடு எடுத்து வைத்த கையோடு பூரணி தன் வேலைகளில் ஆழ்ந்து போய் விடுவாள். இவன் கடைக்குப் போன பிறகுதான் அங்கேயிருந்து மாமனார் வீட்டிற்கு வருவார். அதற்குப் பின்பே அவருக்குக் குளியல், பூஜை, சாப்பாடு இத்யாதி...

அதனால்தானோ என்னவோ, சாப்பிட்டுவிட்டு சற்று நேரம் ஆனாலும் கூட லட்சுமிக்குப் பொறுக்காது.

''டேய், ராமனாதா என்னத்தைப் பேசிட்டு இருக்கே! உங்கப்பா சாப்பிட வர வேண்டாமா? போய் அவரை வரச் சொல்லு...'' என்று உடனடியாகக் கூறி விரட்டி விடுவாள்.

பூரணிக்கு இதெல்லாம் பழகிப் போய் விட்டது. ராமனாதனின் தம்பிகள் இரண்டு பேருக்குக் கல்யாணமாகி அவர்கள் மனைவியைக் கையோடு கூட்டிக் கொண்டு போன போது கூட சமையலறை வாசலிலே நின்று விடைகொடுத்தவள்தான் இவள். லட்சுமிக்கும் ஏக பெருமை - இரண்டு மகன்கள் நல்ல வேலையில் இருப்பதும் அதன் காரணமாகவே பெரிய இடத்துச் சம்பந்தங்களாகத் தேடி வந்ததும்.

ராமனாதனுக்குச் சின்ன வயதிலேயே பள்ளிக்கூடம் கசந்து போனதன் விளைவு, விவசாயம் பார்க்கவும், வியாபாரத்தில் தந்தைக்கு உதவியாகக் கடையிலேயே ஒண்டிக் கொள்ளவும்தான் முடிந்தது. இவன் இப்படியிருந்ததால்தான் சுமாரான இடமாக அவனுக்குப் பெண் அமைந்தது என்பது லட்சுமிக்கு நெஞ்சை கொள்ளாத குறை. அது அவ்வப்போது எட்டிப் பார்த்து, பூரணியைக் காயப்படுத்தும்.

இந்த விஷயங்களையெல்லாம் இந்த வீட்டின் மருமகளாக வந்த புதிதிலேயே உணர்ந்து கொண்ட பூரணி, தனக்குள் தானே கருங்கிக் கொண்டாள். புருஷனிடம் கூட ஏதும் சொல்வதில்லை. சொல்லி ஒன்றுமே ஆகப் போவதில்லை. தான் இந்த வாழ்க்கைக்குப் பழகிக் கொள்வதே நல்லது என்று எண்ணிக் கொண்டாள்.



இந்த வீட்டின் சகலமுமாக ஆட்சி செய்த லட்சுமி ஓய்ந்து விட்டாள். காலையில் கடக்கட இட்லியும் தேங்காய்ச் சட்னியும், மிளகாய்ப் பொடியுமாகச் சாப்பிட்டு விட்டு, ''மத்தியானத்திற்குக் கீரைக் கூட்டும், அவரைக்காய் பொரியலும் செய்து விடு'' என்று சொன்னவள். ...இப்போது உயிரோடு இல்லை! சமையலறையில் போட்டது போட்டபடி கிடக்கிறது.

"பூரணி, கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்ற மாமியாரின் குரலைக் கேட்ட பூரணி, சமையலறையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்குள் கண்கள் நிலைகுத்திப் போய், சுவரில் சாய்ந்து விட்டாள்.

அவள் சாய்ந்திருந்த கோலம் பூரணிக்கு விபரீதமாகப்பட்டது. என்ன செய்ய வேண்டும்? கையும் காலும் மரத்துப் போய் விட்டாற்போல் அசைய மறுத்தன. தன்னைச் சுதாரித்துக் கொண்ட பூரணி, மெதுவாக லட்சுமியின் தோளைத் தொட்டதும் முழுமையாக உடல் சரிந்தது. தலை தொங்கிப் போய் விட்டது.



மாமியாருக்கு மரணம் நேர்ந்து விட்டதா? பூரணிக்கு அவ்வப்போது மனத்துக்குள் தோன்றும் - இப்படியும் மனுஷி இருக்கிறாளே என்று. தன்னை ஒரு மருமகளாக நினைத்து அன்பு காட்டா விட்டால் போகிறது. குறைந்தபட்சம் ஒரு மனிதப் பிறவியாக நினைத்தால் போதுமென்று மருகியிருக்கிறாள். குழந்தைகளிடம் கூட கறாராக இருப்பாள். அதிலும் பேத்திகளுக்குக் கூடுதலாக இரண்டு குட்டு விழும். பொம்பளைப் புள்ளையா லட்சணமாயில்லாம என்ன ஆட்டம் வேண்டியிருக்கு?

மகனோ, மருமகளோ, பேரக் குழந்தைகளோ ஓர் எல்லைக்கு மேல் அவளிடம் நெருங்க முடியாது. ஆனால் இதே மாமியார், எப்போதாவது வெளியூரிலிருந்து வந்து போகும் மகன்களிடமும் மருமகள்களிடமும் நடந்து கொள்வதைப் பார்க்கும் போது பூரணிக்கு அவள் ஒரு புது மனுஷியாகத் தெரிவாள். தன்னுடைய ஏழ்மையும், தாய் தந்தையை அண்டிப் பிழைக்கும் தன் கணவனின் நிலையும் இவ்வாறு தன்னை நடத்துவதற்குக் காரணமாயிருக்கலாம் என்று மனம் சொல்லும்.

ஒருநாளாவது சாவைப் பற்றிப் பேசியிருப்பாளா? பூரணமான வாழ்க்கை நடத்தும் ஒரு பெண்ணுக்குரிய பெருமிதமும், பூரிப்பும் அவள் முகத்தில் தாண்டவமாடும். தன் புருஷனிடம் காட்டும் அன்னியோன்யமும், ஒரு சிறிய கருத்து வேறுபாடு கூட இல்லாத அவர்கள் வாழ்க்கையும் பூரணிக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கின்றன. ஆனால், இதே மாமியார் தன்னிடம் காட்டும் முகம் மட்டும் வேறாயிருப்பதை நினைத்துப் புழுங்கி... அந்தப் புழுக்கத்திலிருந்து விடுபடுவதற்கு ஒரு வழியே போல் தன்னை வேலைகளிலேயே ஆழ்த்தி அமிழ்ந்து கொள்வதே பூரணிக்கு நிம்மதியைத் தரக்கூடியதாக இருந்தது.

அக்கம் பக்கத்திலிருந்து ஒவ்வொருவராக வந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"கடைக்கு ஆள் போயாச்சா?"

யாரோ கேட்டதற்குப் பூரணி மௌனமாகத் தலையை ஆட்டினாள். லட்சுமிக்கு நேர்ந்த சாவைப் பற்றி வந்தவர்கள் அவர்களாகவே பேசிக் கொண்டும், ஆச்சரியப் பட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

ஏதோ தன் வரையில் கேள்வி கேட்காத வரை சரி என்று பூரணிக்குத் தோன்றியது. வெறும் கட்டையாக லட்சுமி சாய்ந்து கிடக்கின்ற இந்த நேரத்தில் அவளுக்கு மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்த ஒவ்வொரு நினைவும் மேலெழும்பி வதைத்தது. அவளுக்குத் தரப்பட்ட குறைந்த சீர்வரிசை பற்றியும் அதன் தரத்தைப் பற்றியும் லட்சுமி கூறியது. சமயம் கிடைக்கும் போதெல்லாம் இந்த வீட்டில் பூரணி வாழ்க்கைப்பட நேர்ந்ததே பெரிய விஷயம் என்று காட்டிக் கொள்வதற்கு லட்சுமி தவறியதேயில்லை. போதாதற்கு அடுத்தடுத்து மூன்றும் பெண்ணாகப் பிறந்ததும் இவளைப் பலவீனப் படுத்தியது. ஆனால் கடைசியாகப்

பேரன் பிறந்த போது கூட அவள் மகிழ்ச்சியடையவில்லை. ''ஆமா... இந்த மூணுக்கும் சொஞ்சே இடுப்பொடிய வேண்டியதுதான்'' என்று நொடித்துக் கொண்டாள். காதிருந்தும் செவிடாக, வாயிருந்தும் ஊமையாக, கூடியவரையிலும் லட்சுமியிடமிருந்து விலகி நிற்கப் பழகிக் கொண்டாள் பூரணி.

அதனால்தானோ என்னவோ, இறுகிப் போயிருந்த மனத்தில் இப்போது நெகிழ்ச்சி தோன்றவில்லை. முழுமையாக வறட்சி அடைந்ததைப் போல கண்களில் இருந்து ஒரு சொட்டு நீர் வரவில்லை. மற்றவர்கள்தான் ஏதோ பேசிக் கொண்டும், இன்னும் கடையிலிருந்து வரவில்லையா? என்று கேட்டுக் கொண்டுமிருந்தார்கள். திடீரென்று கூட்டம் அமைதியானது. 'வந்துட்டாங்க' - ஏதோ குரல் கேட்டது.

மாமனார் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். ராமனாதன் தந்தையை ஒட்டினாற்போல் சற்று பின்னே நடந்து வந்தான். மாமனாரின் முகத்தைப் பார்த்த பூரணிக்குச் சுரீரென்றது. ஐயோ, இதுவரை இவளின் சொந்த உணர்ச்சிகளும், இவளின் பாதிப்புகளும் அல்லவா மேலோங்கி நின்று குறைந்தபட்ச மனிதாபிமானத்தைக் கூட பின்தள்ளியது! பரஸ்பரம் ஒருவரை ஒருவர் முழுதாகச் சார்ந்து நின்று வாழ்ந்த இவர்களுக்கு...? தம் மனைவியின் பிரிவை எதிர்நோக்க வேண்டிய துரதிர்ஷ்டம் வாய்த்ததே என்று அந்த மனம் எப்படி கதறும்? காலையில் பலகாரம் எடுத்து வைத்த மனைவி, ஒரு மணி நேரத்தில் கண்காணாமல் போய் விட்ட துயரம்! அதைப் பற்றி ஏன் நமக்கு ஒரு நினைப்பு கூட வரவில்லை...?

உலகத்துத் துயரமெல்லாம் தன் தலையில் விடிந்தது போல ஒரே நாளில் முதுமையின் எல்லையைத் தொட்டு விட்டாற் போல, தயங்கி, தளர்ந்து படியேறிய மாமனாரைப் பார்த்த பூரணிக்கு நெஞ்சு பிளந்தது.

''மாமா!'' - விம்மல் வெடித்துச் சிதறியது அவளிடமிருந்து.

அருள்வாக்கு

'நாம் இதைச் சாதித்தோம். அதைச் சாதித்தோம்' என்று அகம்பாவப்படக் கொஞ்சம் கூட நியாயம் இல்லை. நாம் எதையும் சாதிப்பதற்கான புத்தியோ, தேக பலமோ எங்கிருந்து வந்தது? இந்தப் பிரபஞ்ச காரியங்கள் அனைத்தையும் செய்கிற ஒரு மகா சக்தியிடமிருந்தே நம்முடைய சக்தியெல்லாம் வந்திருக்கிறது. அது இல்லாவிட்டால் நம்மால் ஒரு சுவாசம் கூட விட முடியுமா? ஒருநாள், இத்தனை சாதித்ததாக எண்ணிக் கர்வப்படுகிற நம்மை விட்டுச் சுவாசம் போய் விடுகிறது. அதைப் பிடித்து வைத்துக் கொள்கிற சாமர்த்தியம் நமக்குக் கொஞ்சம் கூட இல்லை. அப்போது நம் சக்தி எல்லாமும் சொப்பனம் மாதிரிப் போய்விடுகிறது. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் கூட, சக்தி சமுத்திரமாக இருக்கப்பட்ட அம்பாளின் ஒரு துளி அனுக்கிரகத்திலேயே நடக்கிற காரியங்களை நம்முடையதாக நினைத்து அகம்பாவப்படுவது அசட்டுத்தனம்தான் என்று தெரியும். எத்தனைக்கெத்தனை இதை அனுபவத்தில் தெரிந்து கொண்டு அம்பாளுக்கு முன் ஒரு துரும்பு மாதிரி அடங்கிக் கிடக்கிறோமோ, அத்தனைக்கத்தனை அவள் அனுக்கிரகமும் கிடைக்கும்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வடக்கு வாசல் :



● தேகப் பயிற்சி கற்றுத் தருகிறார் தெரசா. பயிற்சி பெறுபவர் அலிஸ்டர் காம்ப்பெல்.

அசடுவழிந்த அமைச்சர்!

அயலுறவுத் துறை இணை அமைச்சர் சல்மான் குர்ஷித், தம்மைக் காண வந்த வெளிநாட்டுக் குழுவிடம் நமது நாட்டின் பொருளாதார சீர்திருத்தங்களைப் பற்றி விவரமாக விளக்கினார்! இடையே சமோசாக்கள், காப்பி, டீ பரிமாறப்பட்டன. ''பிரேஸில் நாட்டின் இன்றைய பொருளாதார நிலை எப்படி? சீர்திருத்தங்கள் என்னென்ன'' என மந்திரி கேட்ட போது குழுவின் தலைவர் ஆச்சரியப்பட்டார்! ''பிரேஸிலைப் பற்றி எங்களுக்குத் தெரியாதே! நாங்கள் பிரான்ஸிலிருந்து உங்களிடம் அணு ஆயுதக் கொள்கையைப் பற்றிப் பேச வந்த குழு அல்லவா?'' என்றார் அவர்! பிரேஸில் குழுவுக்காகக் காத்திருந்த அமைச்சர் 'ரிசப்ஷனில் செய்த கோளாறு' போலும் என்று அசடு வழிந்து சமாளித்தார்!

ஏழைகளுக்கு உணவு வங்கி

பல நாட்கள் அமெரிக்காவில் வசித்து விட்டு இந்தியா திரும்பியவர் வரீந்தர் பல்லா. ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் விருந்துகளுக்குப் பின்னர் பல பேருக்கான உணவு வீணாவதைக் கண்டார் இவர்! ஹோட்டல்களை அணுகி, மிகவும் பிரயத்தனப்பட்டு அவர்களைச் சம்மதிக்க வைத்து, உடன் உழைக்கும் சில நல்லுள்ளம் கொண்டோரின் உதவியுடன் அந்த உணவுப் பொருள்களைத் தமது வான்களில் எடுத்து வந்து ஒவ்வொரு 'ஏழைகள் இல்லமாகக் கொண்டு சென்று பகிர்ந்தளிக்கிறார். இவரது 'உணவு பாங்க்'குக்குத் தனி குளிர்சாதனப் பெட்டிகள், எலக்ட்ரிகல் ஸ்டவ்கள் எல்லாம் உண்டு. இன்று இவரது 'AWB Food Bank' மூலம் தினம் உணவுப் பண்டங்கள் பெறுபவர்கள் ஆயிரம் பேர் - குறிப்பாகக் குழந்தைகள். இவரது நிறுவனத்தில் இன்று மாதச் சம்பளத்திற்கு வேலை செய்யும் நிரந்தர தொழிலாளிகளும் உண்டு. பம்பாய், சென்னை, கல்கத்தா, பெங்களூர் இங்கெல்லாம் தமது உணவு பாங்கின் கிளைகளைத் திறக்கவிருக்கிறார் பல்லா!

தில்லியிலும் ஒரு அப்போலா

தில்லி - மதுரா ரோடில் 'இந்திரப் பிரஸ்தா அப்போலா ஆஸ்பிடல்' அமைக்கப்படவிருக்கிறது! 600 நோயாளிகள்



அது சுதந்திரப் போராட்ட காலம். இராஜேந்திர பிரசாத் ஒரு முறை, பாட்னாவிலிருந்து தம் சொந்த ஊருக்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு எதிர்ப்புறம் ஓர் இளைஞன் ஓயாமல் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். அவன் வெளியிட்ட புகை ராஜன் பாபுவின் முகத்தை நோக்கியே வந்து பெருத்த சங்கடம் அளித்தது. ராஜன்பாபு இளைஞனை நோக்கி, "தம்பி, நீ புகைக்கும் சிகரெட் உனக்குச் சொந்தமானதுதானே?" என்று கேட்டார்.

"பின்னே, நான் புகைக்கும் சிகரெட் என்னுடையதாக அல்லாமல் உங்களுடையதாகவா இருக்க முடியும்?" என்று இளைஞன் கர்வமாகத் திருப்பிக் கேட்டான்.


உடனே ராஜன்பாபு, "சிகரெட் உனக்குச் சொந்தமாக இருக்கும் போது, அதன் புகையும் உனக்குத்தானே சொந்தமாக வேண்டும்? அதை மட்டும் ஏன் என் மீது ஊதித் தள்ளுகிறாய்?" என்று இனிய குரலில் வினவினார்.

அதன் பிறகு இராஜேந்திர பிரசாத் ரயிலை விட்டு இறங்கும்வரை அந்த இளைஞன் புகை பிடிக்கவேயில்லை!

"மேதைகளின் நகைச்சுவை" என்ற நூலிலிருந்து

- நல்லாலம் கதிரேசன்

* * *



- எஸ். ப்ரியா

'அட்மிட்' செய்யப்பட்டு சிகிச்சைகள் பெற நவீன வசதிகள் அனைத்தும் கொண்டு, மொத்தம் ரூ 97 கோடி செலவில் கட்டப்படவுள்ளது. இதன் செலவுகளில் டில்லி கார்ப்பரேஷனும் பங்குகொள்ளும். இந்த மருத்துவமனையில் 200 கட்டில்கள் ஏழைகளுக்காக ஒதுக்கப்படும். அவர்களிடமிருந்து ஃபீஸ் எதுவும் வசூல் செய்யப்படாது. வரும் நோயாளிகளில் 40 சதவீதத்தினருக்கு இலவச மருத்துவ வசதி அளிக்கப்படும்.

உலகப் பரிசு!

இந்திய டூரிஸம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் வெளியிட்ட 1993 ஆம் ஆண்டிற்கான டயரி, 'உலக அச்சிடுவோர் காங்கிரஸ்' ஒவ்வொரு ஆண்டும் அளிக்கும் 'உன்னத அச்சுக் கோப்பு'க்கான பரிசைப் பெற்றிருக்கிறது! ஆண்டாண்டு ஒரு தலைப்பை மையமாகக் கொண்டு அதையொட்டியே டயரிகள் வெளியிடும் இந்த கார்ப்பரேஷன் இந்த ஆண்டு 'சுற்றுலாத் துறையும் ஒரு தொழில்தான்' என்ற தலைப்பின் அடிப்படையில் தனது அழகிய டயரியை வெளியிட்டது. உலக காங்கிரஸின் அதிகாரிகளால் இப் பரிசு டில்லியில் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்டது!

ஜிம்பாப்வே அணியில் ஒரு பெண்

26 வயதே ஆன மிஸ் தெரசா பேஃபோர்ட் இந்தியா வந்துள்ள ஜிம்பாப்வே கிரிக்கெட் அணியின் பிஸியோதெரபிஸ்ட். பல விண்ணப்பங்களிடையே தன் திறமையினால் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தெரசா, ஆண்கள் டிரஸ்ஸிங் அறையில் வளைய வரும் ஒரே பெண்! "வேறெந்த விளையாட்டிலும் இல்லாதபடி இது ஐந்து நாட்கள் ஆட்டம்; ஒவ்வொருவரும் உடல்நிலையை நல்ல ஆரோக்கியத்தோடு வைத்திருப்பது அவசியம்" என்கிறார் இவர். 'ஒரு பெண் உங்களோடு எப்போதும் இருப்பதால் பிரச்னைகள் இல்லையா' என்ற போது, "என்ன, நம்ம பசங்க தங்களுக்குள் பேசிக் கொள்ளும் போது கொஞ்சம் கட்டுப்பாட்டோடு பேச வேண்டியிருக்கிறது" என்கிறார் இவர்களது கோச் ஜான் ஹாம்ப்ஷைர்!

- ராஜீவி நரசிம்மன்

வி. ராஜாராம்

பிரிவாடை

வாசலில் ஸ்கூட்டர் உறுமிற்று. பாபு ஸ்கூட்டரை ஆரோகணித்துக் கொண்டு எனக்காகக் காத்திருந்தான்.

''போயிட்டு வரேம்மா.''

மறுபடி ஒருமுறை கடைசியாய் அம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டேன். பிறகு மனம் போல் கனத்த சூட்கேஸோடு படியிறங்கினேன்.

வீட்டு வாசலில் நான்கு தலைமுறைகள் 'போய் வா' என்று என்னைப் பார்த்துச் சோகமாய்ச் சிரித்தன. அம்மா, பாட்டி, அக்கா, அக்காவின் பெண். மனத்திற்குள் அதை ஃபோட்டோ பிடித்துக் கொண்டேன். இனி அடுத்த ஆறு மாதத்திற்கு இதுதான். இந்தப் புகைப்படம்தான்.

போய் ரயிலில் ஏறினால் குறைந்தது ஆறு மாதங்களுக்குக் கோயமுத்தூர் கனவிலும், நினைவிலும் மட்டும்தான். டெல்லியில் போய்க் குப்பை கொட்ட வேண்டியதுதான். லெட்டர் வந்ததா, வந்ததா என்று மதியமானால் ரூமுக்கு ஓடி வர வேண்டியதுதான்.

லெட்டர் வந்தாலும் துக்கம். வராவிட்டாலும் துக்கம். வராவிட்டால் 'ஏன் வரவில்லை?' என்று துக்கம். வந்தால், 'எதற்கு இப்படிப் பிரிந்து வாழ வேண்டும்?' என்று துக்கம்.

ஸ்கூட்டர் இடதுபுறம் திரும்பி மேற்கு நோக்கிச் சீராக, திருச்சி ரோட்டில் ஓட ஆரம்பித்தது. நண்பர்களோடு நான் அரட்டை அடிக்கும் ரோட்டோரப் பாலம், முதன் முதலாய் வாழ்வில் முங்கி எழுந்த குளம், அப்பா வேலை செய்யும் மில், நான் படித்த பள்ளி என எல்லாம் எதிர்த் திசையில் ஓடி மறைந்தன.

இது என்னுடைய ஊர். இது என்னருமை கோயமுத்தூர். இங்கே எவ்வளவு விளையாடி இருக்கிறேன். எவ்வளவு தப்பு செய்திருக்கிறேன். எத்தனைசந்தோஷமாய் இருந்திருக்கிறேன். இதைத்தான் எவ்வளவு நேசிக்கிறேன்! அது ஏன் இவ்வளவு வேகமாய் என்னை விட்டு ஓடுகிறது.

''பாபு, ஸ்லோவா போடா!''

''ஏண்டா, பயமா இருக்கா? சூட்கேஸ் கனமா இருக்கா?''

''ஒண்ணுமில்லை. ட்ரெயினுக்குத்தான் டயம் இருக்கே. மெதுவாப் போனாப் போதும்.''

ஸ்கூட்டர் மெதுவானது. எனக்குக் கோயமுத்தூரைப் பார்க்க வேண்டும். இதைச் சொன்னால் பாபு சிரிப்பான். இந்த ஊரின் ஒவ்வொரு மூலையும் எனக்குத் தரும் சந்தோஷத்தைச் சொன்னால் அவனுக்குப் புரியாது.

இருபது வருஷமாய் அதற்குள் வளைய வளைய வந்திருக்கிறேன். ஆனால் இந்த நான்கு வருடங்களில் ஊர் என்னை மறந்து விட்டது.

இல்லையில்லை. ஊர் மறக்கவில்லை; மாறி விட்டது. மனிதர்கள் மாறி விட்டார்கள். எல்லோரும் புதிது புதிதாய்த் தெரிகிறார்கள்.

டிராயர் போட்டுக் கொண்டு கோலி குண்டு ஆடிய பையன்கள் இப்போது மீசை வைத்துக் கொண்டு லவ் லெட்டர் எழுத ஆரம்பித்து விட்டார்கள்.

''என்னடா, மதன் சுந்தர், இவ்வளவு உயரமாயிட்ட?''

''அது மதன் சுந்தர் இல்லடா. இவன் அவனோட தம்பி.''

தம்பி அண்ணனை விட உயரமாகியிருந்தான்!

ஆனால், எது மாறினாலும் ஊரின் அடிப்படை மாறவில்லை. அதன் சோம்பேறித்தனம், மடமை, வெகுளித்தனம் எதுவும் போகவில்லை. திண்ணையில் சீட்டாட்டம் போய் கேரம் போர்டு வந்திருக்கிறது. பம்பரம் போய் வாலிபால் வந்திருக்கிறது. அவ்வளவுதான். இப்போதும் ஊருக்கு அதே விளையாட்டு புத்திதான்.

நான் ஏன் இந்த ஊரை விட்டுப் போனேன் என்று எரிச்சலாய் வந்தது. ஏன் பக்கத்திலேயே ஏதாவது வேலை பார்க்காமல் டெல்லி வரை போனேன் எனப் புரிய வில்லை. வேறு வேலை கிடைக்காது என்று பயந்து விட்டேனா? இல்லை, காசு பண்ண வேண்டும் என்று ஓடினேனா?

காசா வாழ்க்கை. என் நண்பன் கோபி இங்கேதான் இருக்கிறான். என்னை விடக் கொஞ்சம் குறைந்த சம்பளம்தான். ஆனால் சந்தோஷமாக இல்லையா?

எப்படியிருந்தாலும் வேளா வேளைக்கு வயிறாரச் சாப்பிட ஏதாவது அவனுக்குக் கிடைத்து விடுகிறது. ஆனால் எனக்கு வாயில் நுழையக் கூடியதாய் எதுவும் கிடைப்ப

இல்லையே. சாப்பாடு சரியில்லாத பட்சத்தில் எவ்வளவு சம்பாதித்து என்ன பிரயோஜனம். சட்டைப் பையில் நூறு ரூபாய் நோட்டுக்கள் கிடக்க வயிற்றில் உணவின்றி எவ்வளவு இரவுகள் தூங்கியிருக்கிறேன்?

''கல்யாணம் பண்ணிண்டா சரியாப் போயிடும்டா!'' என்கிறாள் அம்மா.

''போடி! அவனுக்கு அவன் பாண்ட், ஷர்ட்டை ஒழுங்கா வச்சுக்கக் கூடத் துப் பில்லை. இவனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சா, அந்தப் பொண்ணும் சேர்ந்து கஷ்டப் படும்'' என்கிறார் அப்பா.

அம்மா சொல்வதும் சரி. அப்பா சொல் வதும் சரி.

இரண்டில் எது அவசியமான சரி என்று யோசிக்க ஆரம்பிக்கையில் ஸ்டேஷன் வந்து விட்டது.

முதல் பிளாட்பாரத்தை அடைந்து வழக்கம் போல ஹிக்கின்பாதம்ஸ் புத்தகக் கடைக்குப் பக்கத்தில் போய் நின்று கொண் டோம். அப்பா காத்திருந்தார். பாபுவிடம் வழியில் படிக்க ஏதாவது புத்தகம் வேண்டு மென்று சொல்ல, அவன் புத்தகக் கடை நோக்கி நகர்ந்தான்.

''இனி எப்ப வருவே?'' என்றார் அப்பா.

''ப்ச். இன்னும் ஆறு மாசத்துக்கு லீவே கிடைக்காது. அதுக்கப்புறம்தான்.''

பாபு வந்து புத்தகங்களைக் கொடுத்தான்.

நான் பாபுவைப் பார்த்தேன். இவன் என்னை ஏற்றி விட்டு விட்டு வீட்டில் போய்த் தூங்குவான். பிறகு நாளை ஆபீஸுக்குப் போவான். மாலையில் திரும்பி வந்து வாலி பால் விளையாடுவான். பிறகு, வீட்டில் போய்த் தூங்குவான். மறுபடி அடுத்த நாள் காலையில் எழுந்து ஆபீஸ் போவான். மத்தி யானம் லஞ்ச் சாப்பிட்டு விட்டு அரட்டை அடிப்பான். என்னை நினைத் துக் கூடப் பார்க்க மாட்டான்.

ரயிலில் அம்மா கட்டிக் கொடுத்த உணவைச் சாப்பிட எடுத்தாலே எனக்கு வீட்டு நினைவு வந்து விடும். கையில் எடுக்கும் இட்லியின் ஒவ்வொரு விள்ளலும், 'நான் இட்லி இல்லடா. உன் அம்மாவின் அன்பு' என்று சொல்லி அழ வைக்கும்.

சட்டென்று எரிச்சலாய் வந்தது. எதற்கு இந்த வேலை என்று எறிந்து விட்டு வந்து விடலாம் போலிருந்தது. அம்மா தினமும் சமைப்பதில் ஒரு பிடி அரிசி சேர்த்துப் போட்டால் எனக்கு ஆயிற்று. எனக்குத் தண்டச் சோறு போட முடியாத நிலையில் ஒன்றும் அப்பா இல்லையே. தவிர, எனக்கு இங்கேயே வேலை கிடைக்காதா, என்ன?

சம்பளம் டெல்லியில் கொஞ்சம் அதிகம் கிடைக் கிறது என்பதற்காக இத்தனை உறவுகளையும் விட்டு விட் டுப் போக வேண்டுமா? அப்பாவிடம் இல்லாத காசா. இனியும் எதற்குக் காசு? போதும்! வேலையை விட்டு விடலாம். இங்கே வந்து, இருப்பதை வைத்துக் கொண்டு சந்தோஷமாய் இருக்கலாம். ஆரவாரமின்றி வாழ்ந்து விட்டுச் சாகலாம்.



"எங்களைப் பத்தியெல்லாம் கவலைப்படாத. நீ பாட்டுக்கு உன் வேலைல நன்னா கான்ஸன்ட்ரேட் பண்ணி முன்னுக்கு வரப் பாரு. பணத்தைச் சேர்த்து வை. காக ரொம்ப முக்கியம் வாழ்க்கைக்கு. காசில் லேன்னா கட்டின பொண்டாட்டி கூட மதிக்க மாட்டா."

- நான் வேலையை விட்டு விடலாமா என்று யோசிக்கையில் அப்பா தலைகீழாய் அறிவுரை செய்தார். நிகழ்காலம் முக்கியமா, எதிர்காலம் முக்கியமா என்கிற கேள்வி மூளையை அரித்தது. எது இப்போது அவசியம் என்று புரியவில்லை.

தலை வலித்தது. தூரத்தில் நண்பன் கோபி வருவது தெரிந்தது. சிரித்தேன். 'ஹாய்' என்று கைகாட்டினான். வந்தவன் என்னோடு இரண்டு நிமிடம் பேசினான். அப்பாவோடு இரண்டு நிமிடம் பேசினான். பாபுவோடு இரண்டு நிமிடம் பேசினான். சந்தோஷமாய் அலைபாய்ந்தான். கண்கள் பக்கத்திலிருந்த பெண்களை மேய்ந்தன.

கோபியைப் பார்க்கையில் பொறாமையாக இருந்தது. கோபி தன் சட்டை அழுக்கானதும் அதை பாத்ரூமில் விட்டெறிவான். மறுநாள் அது பளபளவென்று துவைக்கப்பட்டு பீரோவில் காத்திருக்கும். அது எப்படி நடந்தது என்று கோபிக்குத் தெரியாது. அவன் அது பற்றி அக்கறையும் எடுத்துக் கொள்வதில்லை.

அவன் அவிழ்த்துப் போட்ட ஜட்டியைக் கூட மடித்து வைக்க மாட்டான். எல்லாம் அவன் அம்மாதான் செய்கிறாள்.

இப்போதைக்கு அவன் அம்மா. கல்யாணமானதும் மனைவி. சாப்பாடு பற்றியோ, துவைப்பது பற்றியோ கோபிக்குக் கவலையே இருக்காது. அவன் கவலையெல்லாம் இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் மாட்ச் பற்றித்தான். நான்தான் சாப்பாட்டிற்காகவும், துணி தோய்ப்பதற்காகவும் நாய் மாதிரி அலைய வேண்டும்.

தலை வலித்தது. அதிகம் யோசிக்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டேன். ஆனாலும் முடியாது. இன்னும் இரண்டு நாட்கள் ரயிலில் ஒரே யோசனைதான். யோசித்து, யோசித்து, யோசித்துத் தலைவலி உயிர் போகும். இந்த ரயில் பிரயாணத்தில் வழித்துணை கிடைக்கவே கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் இருப் பதாய்ப் பட்டது.

"டேய் கோபி, ஒரு காப்பி அடிக்கலாமா?" என்றேன்.

"ப்ளெஷர் இஸ் மைன்" - சிரித்தான் கோபி.

அப்பாவும் பாபுவும் அங்கேயே இருக்க நாங்கள் நகர்ந்தோம். காப்பி குடிக்கும் போது 'அடுத்த சில நிமிடங்களில் கேரளா எக்ஸ்பிரஸ் வருவதாக' அறிவிக்கப்பட்டது.

"வண்டி போத்தனூர்லேந்து கிளம்பியிருக்கும்" என்றான் கோபி.

"ம்ம். இன்னும் பத்து நிமிஷத்துக்குத்தான் கோயமுத்தூர் எனக்கு" என்றேன்.

மௌனமாய் காப்பி குடித்து விட்டு, திரும்பி நடக்க ஆரம்பித்தோம்.

"டேய், உன்னைப் பார்த்தா பொறாமையா இருக்குடா" என்றான் கோபி.

சட்டென்று புரியவில்லை.

"பொறாமையா? ஏன்?" ஆச்சரியம் குரலை உயர்த்திக் காட்டியது.


"உனக்கென்னடா, ட்ரெயின் ஏறினா ஜாலிதான். கேள்வி கேட்க ஆளில்லை. என்னையும் பாரு. எப்பவாவது கொஞ்சம் ஃப்ரீயா இருக்கலாம்னா முடியாது. ஆபீஸ்லேந்து லேட்டாப் போனா ஏன், ஏன்னு வீடு பூராக் கேள்வி கேக்கும். ஒரு நா செகண்ட் ஷோ போலாம்னா நைட்ல காலிங்பெல் அடிச்சா கதவை யார் தொறப்பாங்கன்னு சண்டை. எல்லாத்துக்கும் மேலே ப்ரைவஸியே கிடையாது!"

"ஆனா கோயமுத்தூர்ல இருக்கறது ஜாலிதானேடா?" என்றேன்.

"போடா! பம்பாயின் பரபரப்பு வருமா? கம்மா விளையாட்டுத்தனமாவே இருந்தாப் போதுமா. வாழ்க்கைல முன்னேற முடியாதுடா. நானும் பாரு கொஞ்ச நாள்ல பாம்பே போயிடப் போறேன்" என்றான்.

நான் ஒன்றும் பேசாமல் நடந்தேன். வாழ்க்கையில் எல்லா விஷயங்களையும் புரிந்து கொள்ள முடியாது என்பது புரிந்தது. வாழ்வின் அழகே இந்தப் புரியாமைதான் என்று தோன்றியது.

அப்பாவும், பாபுவும் நின்று கொண்டிருந்த இடத்தை அடைகையில் கேரளா எக்ஸ்பிரஸ் முதல் பிளாட்பாரத்தில் பிரவேசித்தது.



கருத்து : ஆர். பி. சாரதி

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி ஏப்ரல் 1, 1943

48, பஸ்லுல்லா ரோடு

"அமெரிக்காவில் இந்தியக் காங்கிரஸுக்கு ஒரு பிரசார ஸ்தாபனம் இருக்கிறது" என்று ஸர் ஸாபருல்லாகான் சொல்லுகிறார். இது உண்மையானால் அந்தப் பிரசார ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் தற்சமயம் தியாகராஜ நகர் பஸ்லுல்லா ரோட் 48-ம் நம்பர் வீட்டில்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறோம்! இந்தக் காரியாலயத்தைத் தன்னந் தனியாக நடத்திக் கொண்டிருப்பவர் ராஜாஜிதான். அமெரிக்கப் பத்திரிகைப் பிரதிநிதிகள் சுமார் நூறு பேர் இன்று இந்தியாவில் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் இந்தியக் கோரிக்கையின் நியாயத்தைத் தெளிவாக விளங்கச் செய்பவை மேற்படி 48-ம் நம்பர் வீட்டிலிருந்து இடைவிடாமல் வெளியாகும் ராஜாஜியின் அறிக்கைகளாகும். அவர்களில் பலர் ராஜாஜியை நேரில் பார்த்தும் விஷயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்கிறார்கள். சென்ற வாரத்தில் மேற்படி 48-ம் நம்பர் வீட்டுக்கு அமெரிக்கப் பிரஸிடெண்டின் பிரதிநிதி மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் விஜயம் செய்தார்.




போட்டோ : ஆர். நாகராஜ ராவ்.

- அட்டைப்பட விளக்கம்

வீர சொர்க்கம்

ஸ்ரீ சத்தியமூர்த்தி அருமை தாய்நாட்டுக்குச் சுயராஜ்யம் வந்து பார்க்காமலும், செல்வப் புதல்விக்குக் கலியாணம் பண்ணிப் பார்க்காமலும் கண்ணை மூடி விட்டார். பாரதத் தாய் ஒரு சிறந்த புதல்வரை இழந்தாள். தமிழ்நாடு, ஒரு அரிய தலைவரைப் பறி கொடுத்தது. காங்கிரஸ் மகா சபை தன்னுடைய மகத்தான வீரர்களில் ஒருவரை இழந்தது. அதிகார வர்க்கத்துக்கு ஒரு பெரிய கிலி நீங்கிற்று. நீட்டிய ஈட்டியைக் காட்டிலும் கூரிய அவருடைய நாவன்மை மறைந்து விட்டது. சங்கீதத்தைக் காட்டிலும் இனிய அவருடைய



ஏப்ரல் 1 - சர்வ முட்டாள்தினம்!



- சாம்மன்



பிரசங்கங்களை இனி நாம் கேட்கப் போவ தில்லை. போர்க் களத்தில் மடிவோர் வீர சொர்க்கம் புகுவார்கள் என்ற நம்பிக்கை நமது நாட்டில் வெகு காலமாக உண்டு. ஸ்ரீ சத்தியமூர்த்தி போர்க்களத்தில் படுகாயப் பட்டு வெளியேறி மடிந்த வீர புருஷர் என்பதில் ஐயமில்லை. இக உலகில் அவர் அடையாத இன்ப சுகங்களையெல்லாம் வீர சொர்க்கத்தில் அடைந்து ஆத்ம சாந்தி பெற வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

- என்ன சேதி

நெருக்கடியான கட்டம்

ஆசாமி நிற்கிற நிலை, பார்க்கிற பார்வை - எல்லாவற்றையும் கவனிக்கும் போது இது நெருக்கடியான கட்டமாகத் தான் இருக்க வேண்டுமென்று ஊகிக்கி றோம். காரைக்கால் அம்மையார் படத்தில் இந்த மாதிரி ஒரு நெருக்கடியான கட்டம் வர வேண்டுமென்றே சதி செய்தது போல், முன்னொரு காலத்தில் காரைக்காலில் வாழ்ந்து வந்த புனிதவதி என்ற அம் மையார் ஒரு வகையான காரியம் செய் கிறார். அதாவது புருஷனுக்காக இருந்த மாம்பழம் ஒன்றை ஒரு சிவனடியாருக்கு எடுத்துப் போட்டு விடுகிறார். புருஷன் அதை அறிந்து கோபாக்கிராந்தனாகி, மனைவியின் நடத்தையைப் பற்றியே சந் தேகிக்க ஆரம்பிக்கிறான். அதுவும் சாரங்க பாணி நடித்துப் பெயர் வாங்க வேண்டு மென்றே அந்தப் புருஷ சிகாமணி அசட்டுப் பிசட்டென்று காரியங்கள் செய்திருப் பதைப் படிக்கும் போது, முன்னோர் களுக்கு ரொம்பவும் தீர்க்க திருஷ்டி இருந்திருக்க வேண்டுமென்றே தெரிகிறது!

- நட்சத்திர மண்டலம்

படம் : 'என்மனைவி'யில் சாரங்கபாணி



எம்.ஆர். ராதா: என்னை நடுங்கச் செய்த நல்லவர்!

சௌகார் ஜானகி

நவரஸ நினைவுகள் - 11

பால்ய விவாகம் செய்து கொண்ட கணவனும் மனைவியும் படகில் செல்லும் போது விபத்து ஏற்படுகிறது. கணவன் இறந்து விட்டதாக எண்ணி மனைவி விதவைக் கோலம் பூணுகிறாள். மனைவி இறந்து விட்டதாக எண்ணி, கணவன் மறுமணம் செய்து கொண்டு வேறு ஊரில் வசிக்கிறான்.

முதல் மனைவி அத்தை வீட்டில் கொடுமை தாங்காமல் ஊரை விட்டே சென்று தனது கணவன் வீட்டிலேயே வேலைக்காரியாகப் பணிக்குச் சேர்கிறாள். கணவனுக்கு அவளை அடையாளம் தெரியவேயில்லை!

இரண்டாவது மனைவி ஊரில் இல்லாத போது 'வேலைக்காரி'யிடம் நெருங்கிப் பழகும் கணவன் அவளைத் தாய்மை அடையச் செய்து விடுகிறான்.

ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து ஆளாக்கி, தன் கணவன் கையிலேயே ஒப்படைத்து விட்டு இறந்து போகிறாள் வேலைக்காரியான முதல் மனைவி.

- இந்தக் கதையை சினிமா எடுத்தார்கள் என்று சொன்னால் நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் நடந்தது! 'பாக்யலட்சுமி' என்ற அப்படத்தில் நான் கதாநாயகியாக நடித்தேன். கதையின் ஆழமான சோகம், முன்னெப்போதையும் விடப் பலமான 'சோக நடிகை' முத்திரையை என் மீது குத்தியது!

நான் ஒப்பந்தமாகும் படங்களில் யார் ஹீரோ என்பது குறித்து நான் பொதுவாக அக்கறை காட்டியதில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட நடிகருக்கு ஜோடியாய் நடிக்க வேண்டும் என்றவுடன் நான் மிகவும் நடுங்கிப் போனேன். காரணம், வில்லத்தனமான பாத்திரங்களிலேயே அவரைப் பார்த்துப் பழகி விட்டதால் நேரில் பழகவும் அப்படித்தான் இருப்பார் என்று என் மனத்தில் தீர்மானமான எண்ணம்!

அந்தப் படம் ஏ. பி. நாகராஜனின் 'நல்ல இடத்துச் சம்பந்தம்'. அதில் எம். ஆர். ராதாவுக்கு ஜோடியாக நான்...! முதல் நாள் ஷூட்டிங் வாக ஸ்டூடியோவில். மேக் அப் போட்டுக் கொண்டிருந்த போது வெளியில், ''ஏ ய்! எப்படி இருக்கே?'' என ஒரு குரல் உரக்கக் கேட்டது. அது எம். ஆர். ராதாவின் குரல் தான்! எனக்கு ஒரே நடுக்கம்.

மேக்அப் முடிந்ததும் ஏ.பி.என். எதிரில் போய் நின்றேன்.

''என்னம்மா?'' என்றார்.

''சார், எனக்கு ரொம்ப பயமாயிருக்கு...''

''எதுக்காக? உன் திறமை பற்றி எனக்கு நல்லாத் தெரியும். முதல் டேக்கிலேயே ஷாட்டெல்லாம் ஓ.கே. ஆயிடும் பாரு...''

''அது இல்லை சார்...''

''பின்னே...?''

''எம். ஆர். ராதா கூட நடிக்க ரொம்ப பயமாயிருக்கு சார்...'' - நான் நடுங்கும் குரலில் சொன்னதைக் கேட்டு பலமாய்ச் சிரித்தார் ஏ.பி.என்.

''நீ பயப்பட அவசியமே இல்லை. அவர் எவ்வளவு நல்லவர்னு நீயே கூடிய சீக்கிரம் புரிஞ்சுக்குவே'' என்றார்.

அதற்கேற்றார்போல் ஒரு சம்பவமும் நடந்தது :

'டேய்!' என்று அதட்டியபடி என்னைப் பிடித்து எம்.ஆர். ராதா கீழே தள்ளி விடுவதாக ஒரு காட்சி. ஒத்திகையின் போது எல்லாம் சரியாகத்தான் நடந்தது. ஆனால் ஷாட்டின் போது எம்.ஆர். ராதா சற்று வேகமாக என்னைத் தள்ளி விட்டு விட்டார். நான் விழ, ஷாட் ஓ.கே. ஆகி விட்டது. ஆனால் விழுந்த வேகத்தில் ஒரு இரும்புப் பெட்டியின் முனையில் என் கால் பட்டு விட முழங்காலில் வெட்டுக் காயம்.

வலி தாங்காமல் நான் துடிப்பதைப் பார்த்து அருகே வந்தார் எம். ஆர். ராதா. என் முழங்காலில் ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

சட்டென்று தம் கர்சீஃபை எடுத்துக் காயத்தின் மேல் அழுத்தி ரத்தம் வெளிப்படுவதை நிறுத்தினார். உடனடியாகப் பஞ்சு, டிஞ்சர் கொண்டு வரச் செய்து, காயத்தைத் துடைத்து, மருந்து



* தாமரைக் குளம்

இட்டுக் கட்டுப் போட்டார்.

வலி பொறுக்க முடியாமல் நான் கத்திய போது 'கம்மா இரு!' என்று தமது பயமுறுத்தும் கரகரத்த குரலால் ஓர் அதட்டுப் போட்டு என்னை அடக்கி விட்டார்!

காயம்பட்ட என் சிரமத்தைப் புரிந்து கொண்டு ஷூட்டிங்கை அன்றைக்குக் 'கேன்ஸல்' செய்யும்படிச் சொல்லி எனக்கு ஓய்வு பெற்றுத் தந்தார் அந்த 'வில்லன்'!

அவரைப் பற்றிய எனது அபிப்ராயம் அப்போதே அடியோடு மாறிப் போனதை நான் சொல்லவே வேண்டாம்!

இச் சம்பவத்துக்குப் பிறகு எத்தனையோ சந்தர்ப்பங்களில் எம்.ஆர். ராதா எனக்குத் தைரியம் சொல்லி ஊக்குவித்தார். 'தாமரைக் குளம்' என்ற படத்தில் அவருடன் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது என் தந்தை கல்கத்தாவில் இருந்தார். எங்களுடன் வந்து தங்கும்படி பலமுறை என் தங்கை கிருஷ்ணகுமாரியும் நானும் அழைக்கும் அவர் வர மறுத்து விட்டார். பெண்கள் சம்பாத்தியத்தில் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது என்ற வைராக்கியம்!

நான் விடாமல் சொல்லிச் சொல்லி அவர் வைராக்கியத்தைத் தளர்த்தியிருந்தேன். 1958 ஏப்ரல் 24 ஆம் தேதி அவர் கல்கத்தாவிலிருந்து சென்னை வர விமான டிக்கெட் வாங்கி அனுப்பி வைத்திருந்தேன்.

* எம். ஆர். ராதா



* ஏ. பி. நாகராஜன்



23-ஆம் தேதி இரவு கோல்டன் ஸ்டூடியோவில், தாமரைக் குளம் பட ஷூட்டிங்கின் இடையே, கல்கத்தாவிலிருந்து டிரங்கால் வந்ததாகவும் உடனே வீட்டுக்கு வரும்படியும் செய்தி வந்தது. அப்பா, 'நாளை வரப் போகிறார்; இன்று ஏன் போன் செய்ய வேண்டும்?' என்று குழம்பியபடி வீடு சென்றேன்.

மீண்டும் போன் வந்தது - கல்கத்தாவிலிருந்து தான். 'அப்பா காலமாகி விட்டார். மருத்துவமனையிலிருந்து அவர் உடலைச் சென்னைக்கு எடுத்து வர வேண்டும்' என்று செய்தி. நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன்.

(தொடரும்)

படங்கள் உதவி :

ஃபிலிம் நியூஸ்
ஆனந்தன்

காலம் கனிந்திருக்கிறது. இதுவே சரியான தருணம். உங்கள் வருங்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்.



மகிழ்வூட்டும் வகையில் அமைந்துள்ள பட்ஜெட் நம் அனைவருக்குமே புத்துணர்வையும் புதுத் தெம்பையும் ஊட்டுவதாக உள்ளது.

விலைவாசிகள் இறங்கப் போகின்றன. சேமிப்பதற்கு வசதியாகக் கைவசம் உபரியாகத் தொகைகள் மிஞ்சப் போகின்றன. நிறைவேறாமல் போன வாக்குறுதிகளை நிறைவேற்ற இது சரியான தருணம். தேவைகள் எதையுமே உங்களால் இப்போது பூர்த்தி செய்ய முடியும். அத்தனையும் உங்கள் சொந்த முயற்சியால். ஸ்ரீராம் சிட்ஸில் சேமியுங்கள். நிதி திரட்டும் உங்கள் திறனைப் பெருக்கிக் கொள்ளுங்கள். இன்றைய தேவை. நாளைய சேமிப்பு. இரண்டுக்கும்.

5,70,000 பேர் தங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு ஸ்ரீராம் சிட்ஸின் மூலம் பலனடைந்து வருகிறார்கள். நீங்களும் அவ்வாறே பலன் அடையலாமே!

சந்தாதாரர் பரிசுகள்

சீட்டின் மதிப்பு	ரூ.	சந்தாதாரருக்குக் கிடைக்கும் பரிசு
250 x 40 =	10,000	4 கிராம் வெள்ளிப் பதக்கம்
500 x 30 =	15,000	[illegible]
625 x 40 =	25,000	[illegible] (8 பொருள்கள்)
500 x 60 =	30,000	[illegible]
1,000 x 50 =	50,000	25 கிராம் வெள்ளிப் பதக்கம்
1,250 x 60 =	75,000	[illegible]
1,000 x 100 = 2,500 x 40 =	1,00,000 1,00,000	[illegible]
4,000 x 50 =	2,00,000	2 x 25 கிராம் வெள்ளிப் பதக்கம்
5,000 x 60 =	3,00,000	2 கிராம் தங்கக் காசு
10,000 x 50 =	5,00,000	4 கிராம் தங்கக் காசு
20,000 x 50 =	10,00,000	8 கிராம் தங்கக் காசு

* [illegible]





ஸ்ரீராம் சித்திரை சீட்டு விழா!

5 ஜனவரி 14 ஏப்ரல் '93.

ALL INDIA DEPOSIT MOBILISATION DRIVE TILL 30.4.1993.

வென்றிடுங்கள் !
ரூ.100 லட்சம் வரையிலான பரிசுகள்.

பரிசுகள் வென்றிடும் நாட்கள் மீண்டும் இதோ! ரூ. 100 லட்சம் வரையிலான பரிசுகள் சந்தாதாரருக்கும், அறிமுகப்படுத்துவோருக்கும் காத்திருக்கின்றன. உடனே செயல்படுங்கள்.

அறிமுகப்படுத்துவோர் கூப்பன் ஒவ்வொன்றிலுமே கண்ணுக்குத் தெரியாமல் காத்திருக்கும் பரிசின் பெயர் வெளித் தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கும்.. அந்தப் பரிசைப் பெற நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் இதுதான். ஒரு புதிய சந்தாதாரரை அறிமுகப்படுத்தி, பரிசுக் கூப்பனில் உள்ள வெள்ளிப்பூச்சைத் தேய்த்து அழிக்க வேண்டியதுதான். இதோ! உங்கள் பரிசின் பெயர் தெரிந்துவிட்டது!

ரூ.75,000/- வரையில் உள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத்துறை அல்லது தனியார் துறை அல்லது அரசுப் பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் 3 பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது.

வேலையிலிருக்கும் பெண்மணி ரூ.15,000/- வரையில் உள்ள சீட்டுகளை எடுக்கும்போது அவருடைய கணவரின் உத்தரவாதமே போதும்.





அறிமுகப்படுத்துவோர் பரிசு சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

மறந்து விடாதீர்கள். ஸ்ரீராம் கிளை மேலாளர் முன்னி-லையில் மட்டுமே அந்த வெள்ளிப்பூச்சை அழிக்க வேண்டும்.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி. லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்: 'சுப்பிரமணியம் பில்டிங்'
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன்: 474451/475536/470400/473932.

ஸ்ரீராம் சிட்ஸ் —
மேலும் பலருக்கும் பல வகையிலும் பலன்.

ADWAVE/SCI/4554 TAM A

அன்புள்ள அருண் கண்மணி,

நீ எழுதின பாட்டைத் திரும்பத் திரும்பப் படிச்சு சந்தோஷப்பட்டேன். உடனே ஓடி வந்து உன்னைக் கட்டிண்டு ஆசை முத்தம் குடுக்கணும் போல் இருந்தது... ஆனா அவ்வளவு சீக்கிரம் வர முடியாதே! அதனால் உனக்கு ஒரு அழகான பாட்டுப் புத்தகம் தபாலில் அனுப்பியிருக்கேன். அதிலே இருக்கிற பாட்டை எல்லாம் நீ பப்லுவுக்கும் படிச்சுக் காட்டணும்.

பாட்டுப் புஸ்தகத்தைப் பத்திரமா வைச்சுக்கோ. அப்பப்போ படிச்சுப் பார்த்தா ரொம்ப சுவாரஸ்யமாயிருக்கும். உன்னைப் போல நான் சின்னவளாயிருந்த போது படிச்ச புத்தகங்களையெல்லாம் இப்போ திரும்பவும் படிச்சுப் பார்த்தா சின்ன வயசு ஞாபகமெல்லாம் வருது. அதோட அந்தப் பாட்டுகள்ல அப்போ தெரியாத அர்த்தமும் அழகும் இப்போ கூடுதலாத் தெரியுது.

உலகத்துலேயே நமக்கு பெஸ்ட் ஃப்ரெண்டா இருக்கக் கூடியது புத்தகம்தான்னு நான் நினைக்கறேன். அதைப் படிக்கறச்சே நாம வேற ஒரு உலகத்துக்குப் போயிடறோம்; நல்ல கதைகளைத் தெரிஞ்சுக்கறோம் புரிஞ்சுக்கறோம் - அப்புறம் அதுலேர்ந்து நிறைய யோசனைகள் நமக்குத் தோணறது. அதாவது புத்தகங்கள் நம்மை யோசிக்க வைக்கிறது. அதனாலேதான் புத்தகங்கள் நிறைய படிக்கறது அவசியம். அதுவும் படம் நிறையப் போட்ட புத்தகமானால் உனக்கும் பப்லுவுக்கும் ரொம்பப் பிடிக்கும் இல்லையா...?

இப்பல்லாம் புக்ஸ் ரொம்ப விலை ஏறிப் போச்சு. அப்பா அடிக்கடி வாங்கித் தர மாட்டார். ஆனால் நீ பக்கத்து லைப்ரரில சேர்ந்துடலாம். அம்மா இல்லைன்னா அப்பாவோட ஒருநாள் போய்ப் பாரு. நம்மாலே வாங்க முடியாத புத்தகங்களையெல்லாம் அங்கே படிக்கலாம். பளபளன்னு ஜோரான படம் போட்ட பெரிய புத்தகங்கள்.

உங்களை மாதிரி குழந்தைகளுக்குள்ளே தனியா லைப்ரரி இருந்தா இன்னும் ஜோராயிருக்கும் இல்லியா...? பப்லுவும் நீயும் பெரியவங்களானதும் அப்படி ஒரு லைப்ரரி நடத்தலாமே! அப்போ நான் கூட உனக்கு ஹெல்ப் பண்றேன்...



அன்புடன்,

அன்பு அத்தை

சக்கரவர்த்தித் திருமகன்

30. முன்னாள் நிகழ்ச்சி

ராஜாஜி

கௌசல்யை, தசரதனை நிந்தித்துக் கொண்டேயிருந்தாள். அப்படிப் பேசுவதில் புத்திரனை இழந்ததன் பெருந்துக்கத்துக்கு ஒரு வித ஆறுதலைக் கண்டாள்.

தசரதன் நிலைமையோ, ஒரு சிக்கலில் அகப்பட்டுப் போய்ப் பெருங் குரூரத்தைச் செய்ய வேண்டியதாக நேரிட்டது. தான் செய்த பிழையும் அதனால் ஏற்பட்ட அக்கிரமமும் அவன் அறியாதவன் அல்ல. ஆயினும் தரும சங்கட்டத்தினின்று தப்பும் வழி அவன் காணவில்லை. தகப்பன் உத்தரவை மீறி ராஜ்யத்தை விட மாட்டேன் என்று ராமன் எதிர்த்துப் போர் செய்திருந்தால் தசரதனுக்குச் சந்தோஷமாகவே இருந்திருக்கும். தான் பிடிபட்ட வலையிலிருந்து தப்பித்துக் கொண்டிருப்பான். ஆனால் ராமனோ 'தந்தையினுடைய உத்தரவை மீற மாட்டேன், காட்டுக்குப் போவதே என் கடமை' என்று தருமப் பிடிவாதம் செய்து காட்டுக்குப் போய் விட்டான். சீதையும் லக்ஷ்மணனும் ராமனோடு காட்டுக்குப் போவதே தங்களுடைய கடமை என்று யாருடைய யோசனையையும் கேட்காமல் தீர்மானித்துக் கொண்டு வனம் சென்று விட்டார்கள்.

இவ்வாறு ஏற்பட்ட நிலைமையில் அரசன் இன்னது செய்வது என்று தெரியாமல் தத்தளித்து அறை ஜீவனாக இருக்கும் சமயத்தில் கௌசல்யை தனக்குத் தோன்றின நியாயத்தையெல்லாம் சொல்லித் தசரதனுடைய குற்றத்தை வெகு கடுமையான முறையில் குத்திக் குத்தி காட்டிப் பேசினாள்.

"**யா**ரைப் பற்றி உமக்கு என்ன கவலை? நீர் சத்தியம் தவறாமல் இருந்து விட்டால் உமக்குப் போதும். இளம் பெண்ணோடு சுகமாக இருப்பதில் உமக்குத் திருப்தி ஆகி விட்டது. எனக்கு யார் கதி? ஸ்திரீக்குப் புருஷன்தான் கதி. நான் பெற்ற புருஷனோ வேறு மனைவியுடன் சேர்ந்து கொண்டு என்னைக் கை விட்டு விட்டான். என் மகனோ காட்டுக்குப் போய் விட்டான். என் பிறந்தகத்து பந்துக்கள் தூர தேசத்திலிருக்கிறார்கள். புருஷன் உயிரோடிருக்க அங்கே போய் நான் எப்படிப் பந்துக்களை அண்டிப் பிழைக்க முடியும்? நிர்க்கதியாக நிற்கிறேன். உமக்கு இதைப் பற்றியெல்லாம் என்ன கவலை? கைகேயியும் பரதனும் சுகமாக இருந்தால் உமக்குப் போதும். நீர் ஒன்றும் யோசிக்க வேண்டாம். ராமன் காட்டில் பதினான்கு வருஷங்கள் கழித்துத் திரும்பி வந்தாலுங் கூட உம்முடைய சுகத்தை அவன் கெடுப்பான் என்று பயப்பட வேண்டாம். ராமன் திரும்பி வந்தாலும் பரதன் ஆண்ட ராஜ்யத்தை அவன் மறுபடி தீண்டமாட்டான். வேறு மிருகம் கொன்று தின்ற மாமிசத்தின் மிகுதியைக் காட்டுப் புலி தீண்டாது. மீன் தன் குஞ்சுகளைக் கொன்று தின்று விடுவது போல் பெற்ற பிள்ளையைக் கொன்றீர்."

இவ்விதமாகக் காயம் பட்ட புண்ணில் குத்திக் குத்தி வேதனை செய்யும் முறையில் புருஷனைத் தாக்கிப் பேசிக் கொண்டேயிருந்தாள் கௌசல்யை.

இந்தப் பேச்சைக் கேட்டு வேதனைப்பட்ட அரசன், "என்னுடைய கதி ஏன் இப்படியாயிற்று?" என்று பால்ய காலத்து நிகழ்ச்சிகளை மனத்துக்குக் கொண்டு வந்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

பிறகு கொஞ்ச நேரம் கழித்துப் பெரு மூச்சு விட்டுக் கண்களைத் திறந்து பார்த்தான்; பக்கத்தில் கௌசல்யை இருப்பதைக் கண்டான்.

பூர்வகாலத்து



நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வந்து தசரதனுடைய துக்கம் இருமடங்காயிற்று. இந்தப் பரிதாப நிலையில் மனைவியைப் பார்த்து இரு கைகளும் கூப்பி, ''கௌசல்யே, என்பேரில் இரக்கம் கொள்!'' என்று அழுதான்.

''அந்நியர்கள் செய்த குற்றத்தைக் கூட நீ எப்போதும் மன்னித்து விடுவாயே? ஏன் என்பால் இப்படி நடந்து கொள்கிறாய்? புருஷனானவன் கெட்டவனாயிருந்தாலும் மனைவிக்கு அவனே தெய்வம் என்றெல்லாம் பெரியோர்கள் சொல்லுகிறார்களே. பெருந்துக்கத்தை நீ அடைந்தாய் என்பது உண்மை. ஆயினும் என்னை இப்படிப் பேசி நீ இம்சிக்கலாமா?'' என்றான்.

இதைக் கேட்ட கௌசல்யை, ''படையெடுத்து வரும் சத்துருவால் ஏற்படும் துன்பங்களை விட உள்ளே வேலை செய்யும் துக்கத்தால் உண்டாகும் தாபம் பெரிது. என்னால் தடுத்துக் கொள்ள முடியவில்லை. மன்னிப்பீராக! ராமன் வனம் சென்று ஐந்து ராத்திரியாயிற்று என்று கணக்குச் சொல்லுகிறார்கள். ஐந்து வருஷங்கள் ஆனதைப் போல் அல்லவா எனக்குத் தோன்றுகிறது. அவனை நினைந்து நினைந்து எனக்கு உண்டாகும் துக்கம், நதிகளில் வெள்ளம் பொங்கிப் பெருகுவது போல் அதிகரிக்கிறது! நான் என்ன செய்வேன்? இந்தத் துயர வெள்ளத்தில் நான் என் வசமிழந்தேன். என்னை மன்னிப்பீராக'' என்றாள்.


இவ்வாறு கௌசல்யை பேசிய அன்பான மொழிகளைக் கேட்டுத் தசரதன் கொஞ்சம் ஆறுதலடைந்தான். அந்தச் சமயம் சூரியன் மறைந்து இருள் சூட ஆரம்பித்தது. வேதனையால் ஓய்ந்து போன அரசன் மெள்ளத் தூங்கிப் போனான்.

அர்த்த ராத்திரியில் மறுபடியும் தசரதன் விழித்துக் கொண்டு பக்கத்தில் கௌசல்யாதேவி இருப்பதையறிந்தான்.

''பிரியமானவளே! இருக்கிறாயா பக்கத்தில்? கர்ம பலனை மாற்ற முடியாது. நான் செய்த பாவத்தின் விளைவை இப்போது அனுபவிக்கிறேன். அற்ப சந்தோஷங்களுக்காகப் பெருந் தீமை விளைவிக்கக் கூடிய காரியம் அறியாமையால் மக்கள் செய்து விடுகிறார்கள். பிறகு பயனை அனுபவிக்கும் போது வருந்துகிறார்கள். நான்

சிறுவனாக இருந்த காலத்தில் குறியைப் பார்க்காமல் ஓசையைக் கேட்டு அம்பு எய்யும் திறமை பெற்றிருந்தேன். இந்தச் சாமர்த்தியத்தின் அற்ப சந்தோஷத்துக்காக ஒரு காலத்தில் நான் பெரும் பாவத்தைச் செய்ய நேர்ந்தது. அந்த நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன், கேள்'' என்று ஆரம்பித்தான்.

''அக்காலத்தில் நீ என்னை வந்து அடைந்திருக்கவில்லை. ஒருநாள் இரவில் தேர் ஏறிச் சரயூ நதிக்கரையில் வேட்டையாடப் போனேன். மழை பெய்து மலை தாதுக்களும் புது மண்ணும் கலந்து பலவித நிறங்களில் ஜலம் எங்கு பார்த்தாலும் ஆறுகளாக ஓடிக் கொண்டிருந்தது. பட்சிகளின் சப்தம் ஒடுங்கிப் போய் வனம் தூங்கினாற் போல் இருந்தது. இரவில் தண்ணீர் குடிக்கப் புலி, கரடி முதலிய மிருகங்கள் வரும் சப்தத்தை வைத்துக் குறி பார்த்து அம்பு எய்யும் பயிற்சி எனக்கு இருந்தபடியால் அதைப் பயன்படுத்திப் பரீட்சிக்கலாம் என்கிற ஆசை தோன்றிற்று. நல்ல இருட்டு. அந்தச் சமயம் ஒரு யானை தண்ணீர் குடிக்கும் சப்தம் போல் ''பொளு'' ''பொளு'' வென்று கேட்டது. உடனே சாமர்த்தியமாகச் சப்தத்தைக் குறியாக வைத்து அம்பை எய்தேன். என்னுடைய அம்பு விஷ சர்ப்பம் போல் பாய்ந்து சரியாகவே





"என்னங்க இது? காலையிலேர்ந்து லாரி லாரியா மணலைக் கொண்டு வந்து ஊர் முழுக்கக் கொட்டறாங்க?"

"எல்லாம் நம்ம எம்.எல்.ஏ. வேலைதான். தொகுதியை 'குவைத்'தாக மாத்தப் போறாராம்!"

- எஸ். ரமேஷ்

போய்க் குறியைத் தாக்கிற்று. 'ஐயோ! செத்தேன்!' என்று ஒரு மனிதக் குரல் கிளம்பியதைக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

"'என் பேரில் யாருக்குத் துவேஷம்? நான் யாருக்கும் ஒரு குற்றமும் செய்யவில்லையே. தண்ணீர் மொண்டு கொண்டு போக வந்த என்னை எவனோ கொன்றானே! என்ன பயனைக் கருதி என்னைக் கொன்றான்? நான் ஒரு பாவமும் செய்யவில்லையே. விரத வாழ்க்கை வாழும் தபஸ்வியான என் பேரில் யாருக்கு என்ன விரோதம்? கண்ணில்லாத என்கிழத் தாயும் தகப்பனாரும் இனி என்ன செய்வார்கள்? என்னையே நம்பியிருந்தார்களே, அவர்கள் இனி எப்படி உயிர் வாழ்வார்கள்? ஐயோ, நான் இப்படி அநியாயமாய்க் கொல்லப்பட்டேனே!' என்று பரிதாபக் குரலில் ஒருவன் அழுத வார்த்தைகளைக் கேட்டேன். பெருந் திகிலடைந்து என் வில்லும் கையிலிருந்த அம்பும் கீழே நழுவி விழுந்தன.

"அழுகுரல் வந்த இடம் நோக்கிச் சென்றேன். தலைமுடி விரிந்து சிதறி, உடல் எல்லாம் ரத்தமும் சேறுமாகத் தரையில் புரண்டு கொண்டிருந்த ஒரு தபஸ்வியைக் கண்டேன். பக்கத்தில் தண்ணீர்க் குடம் உருண்டு கிடந்தது. என்னைப் பார்த்ததும் அவர் கண்களிலிருந்து வீசிய ஒளி என்னைச் சுடும் போலிருந்தது.

"'பாவி, நீயா என்னைக் கொன்றது? தண்ணீர் மொள்ள வந்த என் பேரில் ஏன் அம்பு எய்து கொன்றாய்? கண்ணிழந்த வயோதிகப் பெற்றோர் ஆசிரமத்தில் தாகத்தோடு காத்திருக்கிறார்களே! நான் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவேன் என்று இப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அடே பாவி! ஏன் என்னைக் கொன்றாய்? ஐயோ தெய்வமே, என் தவமும் விரதமும் வேத அத்யயனமும் வியர்த்தமாய்ப் போயிற்றா? நான் இப்படி அடிபட்டுக் கிடக்கிறேன் என்பது என் வயோதிகத் தாய் தந்தையருக்குத் தெரியாதே! வருவான், வருவான் என்று எதிர்பார்த்த வண்ணமாகவே இருப்பார்கள். விஷயம் தெரிந்தாலும் நடக்க முடியாத கபோதிகள் என்ன செய்வார்கள்? நீ யார்? கோசல தேசத்து அரசன் அல்லவா? என்னை அரசனா கொன்றான்? சரி, அரசனே! நீயே போய் அவர்களுக்கு விஷயத்தைச் சொல்லி அவர்கள் காலில் விழுந்து சரணமடைவாய், இல்லாவிடில் அவர்களுடைய கோபம் உன்னை எரித்து விடும். அவர்களுடைய சாபம் உன்னைச் சாம்பலாக்கி விடும். தாமதமின்றி அவர்கள் கிடக்கும் ஆசிரமத்துக்கு நேராகப் போவாய். இங்கிருந்து அவ்விடத்திற்கு ஒற்றையடிப் பாதை போகிறது. அதன் வழியாகச் சீக்கிரம் சென்று உன்னைக் காப்பாற்றிக் கொள். ஐயோ, இந்த அம்பு என் பிராணனை வேதனை செய்கிறது. இதை இழுத்து எடுத்து விட்டுப் போ' என்றார் தபஸ்வி.

"தபஸ்வியின் உடலில் பாய்ந்திருந்த அம்பைப் பிடுங்கினால் அவருடைய வேதனை தீரும். ஆனால் என் கையால் உடனே அவர் உயிரும் போய் விடும்படியான காரியத்தைச் செய்ய மனம் வரவில்லை. இந்தத் தரும சங்கடத்தில் நான் ஒன்றும் செய்யத் தோன்றாமல் ஒரு கணம் திகைத்து நின்றேன்.

"அப்போது அந்த முனி குமாரர், 'யோசிக்க வேண்டாம். அம்பைப் பிடுங்கி விட்டு என் வேதனையைத் தீர்த்து விடு. ஸ்திர சித்தமடைந்து விட்டேன். உன் பாவத்தைப் பற்றி யோசிக்காதே. தைரியமாக அம்பைப் பிடுங்கி யெறிந்து, என் உயிர் வெளியேறச் செய்வாய்' என்று சொன்னார்.

"அம்பைப் பிடித்து மெதுவாக இழுத்து விட்டேன். உடனே தரையில் புரண்டு வேதனைப் பட்டுக் கொண்டிருந்த தபோதனர் என்னைப் பார்த்த வண்ணம் பெருமூச்சு விட்டு உயிர் நீத்தார்.

"இந்தப் பாவமல்லவா என்னை இப்போது வாட்டுகிறது. கபோதியான அந்தப் பெற்றோர்கள் பட்ட துக்கத்தை நான் இப்போது அனுபவிக்கிறேன்" என்றான்.

(தொடரும்)

நீங்கள் கேட்டவை - தராசு

● ஏ. சுகுமார், காட்டுக்காஞூர்.

? இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் பாதுகாப்பு ஏற்பாடுகளால் மட்டும் குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்களைத் தடுத்து விட முடியுமா?

! முடியாது. நமது உளவுத் துறையும் நவீன விஞ்ஞான வளர்ச்சி பெற்று சதித் திட்டங்களை முன் கூட்டியே அறியும் ஆற்றல் பெற வேண்டும். அப்போதுதான் பயங்கரவாதிகளின் செயல்களை முறியடிக்க முடியும். இரண்டாவதாக, விரோதங்களைத் தவிர்த்து நண்பர்களையே பெறும் விதமாக நமது அரசியல் தலைவர்கள் நடந்து கொள்ள வேண்டும். நெகடிவ் அணுகுமுறையில் ஜாதி, மத, இன உணர்ச்சிகளைத் தூண்டாமல் பாஸிடிவ் அணுகுமுறையில் அன்பு மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? ''பல விஷயங்களில் கருணாநிதி எவ்வளவோ தேவலை'' என்கிறாரே, ஜெயலலிதா?

! சில காலம் சென்று பி. ஜே. பி. யுடனான கூட்டணி முறியும் போது 'பல விஷயங்களில் வாழப்பாடியாரும் மூப்பனாரும் எவ்வளவோ தேவலை' என்பார்!

● ஜி. இந்திரா, திருச்சி.

? விநோத் காம்ப்ளியின் இரட்டை சதம் குறித்து?

! டெண்டுல்கர் போலல்லாமல் கொஞ்சம் லேட்-பிக்அப் என்றாலும் பொறி பறக்கும் ஸ்ட்ரோக்குகள். இடதுகை வசதி வேறு. உற்சாகம் அவர் கண்களில் தெரிகிறது. என்ன, அடிக்கடி டென்ஷன் ஆகிவிடுகிறார். மற்றபடி 'இளம்புயல்' பட்டத்துக்குச் சரியான போட்டி!



* புதிய தலைவலி?

அர்ஜுன்சிங்கால் பிரதமருக்குப் புதிய தலைவலி ஏற்படுமா?

● ம. செந்தில்நாதன், மதுரை.

? ''காந்திஜி இந்தியாவில் ராமராஜ்யம் அமைய வேண்டும் என்றார். அதற்காக அவரை மதவாதி என்கிறார்களா?'' எனக் கேட்கிறாரே கோவிந்தாச்சார்யா?

! ரொம்ப நியாயமாக வாதாடுவது போல் தோன்றச் செய்து ஏமாற்றுவது என்பது இதுதான். காந்திஜியின் ராமராஜ்யம் இவர்களது ஹிந்து ராஷ்டிரம் அல்ல. தர்மத்தின் ஆட்சி என்ற பொருளில் அவர் ராமராஜ்யம் என்ற சொற்களைப் பயன்படுத்தினார். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக எவ்வளவோ பாடுபட்டு உண்ணாவிரதமும் இருந்த காந்திஜி எங்கே; மத பேதங்களின் அடிப்படையில் உணர்ச்சிகளைத் தூண்டி விடும் பி. ஜே. பி. எங்கே!

● எஸ். ராஜசேகரன், கொளப்பாடு.

? ''மகாத்மாவே வந்தாலும் வாழப்பாடி இருக்கும்வரை தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி வராது'' என்கிறாரே, செங்கோட்டையன்?

! அப்போ, வாழப்பாடி விலகிவிட்டால் காங்கிரஸ் ஆட்சி வந்துவிடும் என்கிறாரா? ஜாக்கிரதை, அம்மா காதில் விழுந்து வைக்கப் போகிறது!

● எம். சந்திரசேகர், மேட்டு மகாதானபுரம்.

? சமீபமாக கோட்டை பக்கம் போனீர்களா?

! போயிருந்தேன். தாக சாந்தி உத்தேசத்தில் சர்பத்காரனை அணுகினால் அந்தப் பக்கமாக மும்முரமாகப் பொட்டல வியாபாரம்! கோட்டை அருகிலேயே இப்படி கோட்டை விட்டால் அப்புறம் எங்குதான் நடக்காது!

● எம். மோகன், கோவை.

? ''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' - இதற்கு ஒரு நல்ல உதாரணம்?

! அ. தி. மு. க. - காங்கிரஸ், கூட்டணி - முறிவு. இப்படி உதாரணங்கள் சில இருந்தாலும் அந்தப் பழமொழி பகுத்தறிவுக்குப் பொருந்துவதல்ல. பெண்களால் வாழ



* ''ராமராஜ்யம்''



* ''மகாத்மாவே வந்தாலும்...''

வைக்கவும் முடியும். ஆண்களாலும் ஆக்கவும் அழிக்கவும் முடியும்.

● கே. பாரதி, மணலூர்பேட்டை.

? சமீபத்திய செய்திகளில் நெஞ்சைப் பிசைந்தது?

! ஆட்டோ ஸ்ட்ரைக் தினத்தில் ஒரு ஜப்பானியப் பெண்மணி சென்ட்ரலிலிருந்து மவுண்ட் ரோடு கன்னிமரா ஹோட்டலை அடைய சைக்கிள் ரிக்‌ஷாவுக்கு ரூபாய் நாற்பது தண்டம் அழுதிருக்கிறார். இதற்கு இரு தினங்களுக்கு முன்பு ஒரு ஜெர்மானிய டாக்டர் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து ஷெனாய் நகர் செல்ல ரூ. 1500/- டாக்ஸிகாரருக்குக் கப்பம் செலுத்தியுள்ளார். இதுபோன்ற அக்கிரமங்களைத் தடுக்க இயலாத போலீஸ் துறை ஆண்மையற்றது. இதனாலெல்லாம் நமது நாட்டுக்கு ஏற்படுகிற பாதிப்பு மானம் மரியாதை கப்பலேறுவது மட்டுமல்ல; அயல்நாட்டவரின் வருகை குறைவதால் பல கோடி ரூபாய் நஷ்டமாகும்.



★ தொடர் குண்டுகள்!



★ "கருணாநிதியே தேவலை!"

● தூ. ரவீந்திரன், புதுவண்டிப்பாளையம்.

? சுப்பிரமணிய சுவாமியின் சத்தத்தையே காணோமே?

! என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்! ஒரு வாரம் பத்து நாளைக்கொரு தடவை பத்திரிகையாளரைச் சந்தித்து அவர் போடுகிற குண்டுகள் பம்பாய் தொடர் குண்டு வெடிப்பை விடச் சத்தமாகக் கேட்கிறதே! லேட்டஸ்ட்டாக பிரான்ஸ் நாட்டில் 'ஜெ'யின் பாரீஸ் பங்களா விவகாரம்!

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? அர்ஜுன் சிங்குடன் முன்னாள் மத்திய அமைச்சர் பொட்டேதரும் சேர்ந்து கொள்ள முன்வந்ததால் நரசிம்மராவுக்குப் புதிய தலை வலி ஏற்படுமா?

! கண்டனங்களை வாபஸ் பெற்றுக் கொண்டு கனிம்பு தடவியிருக்கிறார் அர்ஜுன்சிங். இப்போதைக்குப் பிரதமருக்குத் தலைவலி நீங்கியிருக்கிறது. நாளை திருகு வலியாக மாறாமலிருந்தால் சரி!

● ஏ. என். சுப்பிரமணியன், அக்ரஹாரம்.

? "அயோத்தியில் ராமர் கோவிலைக் கட்டியே தீருவோம்" என்று அத்வானி பேசியுள்ளாரே?



★ இரட்டை சதம்



★ "கட்டியே தீருவோம்"

! அதற்காகத் தமிழ்நாட்டில் மட்டும் 20 லட்சம் கையெழுத்துக்களை வாங்கியிருப்பதாகவும் கூறுகிறார்கள். அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது பற்றி யாருக்கும் ஆட்சேபணையில்லை. நான் கூட கையெழுத்துப் போடத் தயார். ஆனால் அதை ஒரு மசூதியை இடித்துவிட்டு அந்த இடத்தில் தான் கட்ட வேண்டுமா என்பதில்தான் பிரச்னை.

● ஹஜ்ப்ரியன், ரெட்ஹில்ஸ்.

? தலைநகரில் தடை செய்யப்பட்ட பி.ஜே.பி. பேரணியைத் தமிழகத்தில் மட்டும் பொதுக்கூட்டம் என்ற பெயரில் நடத்தத் தமிழக அரசு அனுமதித்தது குறித்து?

! பேரணியை வாபஸ் பெற்றுக் கொண்டு 'ஜெ'யை இவர்கள் திருப்திப் படுத்த, பேரணி என்ற பெயரில் பொதுக் கூட்டத்துக்கு 'ஜெ' அனுமதி வழங்கி இவர்களைத் திருப்திப்படுத்தி விட்டார். மியூச்சுவல் அண்டர்ஸ்டாண்டிங் தான். 'பி.ஜே.பி. தடை செய்யப்பட்ட கட்சியல்ல' என்கிறார் ஜெ. ஆனால் வி.எச்.பி., ஆர். எஸ். எஸ். போன்ற அமைப்புக்களுக்கு அதே பொதுக் கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளதே, அங்கேதான் இடிக்கிறது.

● கலை, இரணியல்.

? பம்பாய், கல்கத்தா குண்டு வெடிப்புகள் நமக்கு உணர்த்துவது என்ன?

! மத வெறிகளைத் தூண்டிவிடும் நமது தலைவர்களின் தவறான போக்கு ஒன்று. குற்றவாளிகளைத் தப்பிக்க விட்டுவிட்டு, அவர்களைப் பிடித்து ஒப்படைக்குமாறு அயல்நாட்டு அரசைக் கேட்கக் கூடத் தவறி அசடு வழியும் நமது போலீஸின் கையாலாகாத்தனம் இரண்டு.

☐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஏ. சுகுமார்,
4/78, நடுத்தெரு,
காட்டுக்காநூர்,
- 632 312.

அதிகார வர்க்கம் நடத்திய கற்பழிப்புக் கொடுமை!

இருபது வயதான ஷரணவ்வா என்ற பெண்ணை தாசில்தார், ஜில்லா பரிஷத் உதவி என்ஜினியர், பொதுப் பணித்துறையின் ஜூனியர் என்ஜினியர், ஒரு வக்கீல் ஆகிய நான்கு பேரும் சேர்ந்து கற்பழித்து விட்டதாகவும், ஏற்கெனவே கர்ப்பமாயிருந்த அந்தப் பெண் இந்தக் கற்பழிப்புக் கொடுமையினால் ரத்தப் போக்கு அதிகமாகி அவதிப்படவே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டாள் என்றும், போகும் வழியிலேயே மரணமடைந்ததால் யாருக்கும் தெரியாமல் பிணத்தை எரித்து விட்டதாகவும் குற்றச்சாட்டு.

பெங்களூர்

ரிப்போர்ட் :



* வசிஷ்ட நாராயண சிங்

'அதெல்லாம் இல்லை. அந்தப் பெண்ணுக்குக் கான்சர் இருந்தது. ஒரு முறை ஆபரேஷன் கூட நடந்திருக்கிறது. அந்தப் பெண் இறந்தது கான்சரினால்தான்' என்று போலீஸ் தரப்பிலும் அரசாங்கத் தரப்பிலும் சொல்லப்படுகிறது.

ரெய்ச்சூர் மாவட்டம் குஷ்தகி என்ற கிராமத்தில் நடந்த இந்தச் சம்பவம் கர்நாடக அரசியலையே கலக்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஊர் மக்களும் எதிர்க்கட்சியினரும் அரசுத் தரப்பு வாதத்தை ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. ஊர்வலம், ஆர்ப்பாட்டம் கடையடைப்பு என்று ரெய்ச்சூரிலும் அதனைத் தொடர்ந்து ஹூப்ளியிலும் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், மாநிலம் முழுக்கப் பரவும் அபாயம் இருக்கிறது.

சம்பவம் நடந்த இடத்துக்கு நேரில் சென்று பொது மக்களை அமைதிப்படுத்தி விட்டு வந்திருக்கிறார் முதல்வர் மொய்லி. ''இந்த அரசு குற்றவாளிகளுக்கு உதவி செய்யாது'' என்று கூறியிருக்கிறார் அவர்.

இந்திய கணித மேதைகளில் ஒருவர் வசிஷ்ட நாராயண சிங். வயது நாற்பத்தேழு. கம்ப்யூட்டர்களைத் தோற்கடித்த மூளை. நடமாடும் ஆர்யபட்டா என்று வர்ணிக்கப்பட்டவர். அமெரிக்கக் கல்வி மேதையான டாக்டர் ஜே. எல். கெல்வி இந்தியா வந்திருந்தபோது வசிஷ்ட நாராயணனின் மேதைமையை அறிந்து அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றார். அங்கே எம். எஸ்ஸியையும் டாக்டரேட்டையும் பதினெட்டே மாதங்களில் முடித்தார் வசிஷ்ட். பேராசிரியராகச் சில காலம் பணியாற்றினார். பின்னர் இந்தியாவுக்குத் திரும்பி கௌரவமான பல பதவிகள் வகித்தார்.

ராணுவ டாக்டர் ஒருவரின் மகளைக் கைப்பிடித்த டாக்டர் வசிஷ்ட்டின் திருமண வாழ்க்கை ஏமாற்றமளித்ததாகச் சொல்லப்படுகிறது. விளைவு, சித்த சுவாதீனம் பாதிக்கப்பட்டு எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கல்லால் அடிப்பது மண்ணை வாரி இறைப்பது என்று ஆரம்பித்தார். ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும் வழியில் காணாமல் போய்விட்ட இவரைப் பற்றி எந்தவிதத் தகவல்களும் மூன்று வருடங்களாய் இல்லாமல் இருந்தது. கடைசியில் பீகாரின் சப்ரா கிராமத்தில் பிச்சைக்காரனைப் போல் திரிந்து கொண்டிருந்த இவரைக் கண்டு பிடித்தார்கள். சுவாதீனம் முற்றும் இழந்த நிலையில் தற்சமயம் பெங்களூரின் நிமான்ஸ் ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்.

ஆஸ்பத்திரிக்குச் சென்று வசிஷ்ட நாராயணனைப் பார்த்துவந்த முதல்வர் மொய்லி, 'எல்லாச் செலவுகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்' என்று அறிவித்திருக்கிறார். ''சிகிச்சை பலன்தர நீண்ட நாட்களாகும்'' - என்று அறிவித்திருக்கின்றனர் டாக்டர்கள்.

– பெர்னாண்டஸ்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, எக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

T. S. S. NIDHI LTD

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Office: 230, R. K. Mutt Road, Mylapore, Madras 600 004. Phone: 77503.

THIRUVANMIYUR BRANCH : 112, Thiruvalluvar Salai, Kamraj Nagar, Madras 600 041.

DEPOSIT SCHEMES

FIXED DEPOSIT SCHEME

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

Period (months)	Rate of interest P.A.	CASH INCENTIVE
6	15 %	not applicable
12	17 %	½ %
24	18 %	1 %
36	19 %	1½ %
60	20 %	2 %

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME
(Re-Investment Plan)

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

DEPOSIT AMOUNT RS.	PERIOD (Months)	MATURITY VALUE RS.	CASH INCENTIVE
1000	12	1180	½ %
1000	24	1425	1 %
1000	36	1760	1 %
1000	45	2025	1½ %
1000	67	3025	2 %

HIGHLIGHTS:

* Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
* **Company is in 20th year of Service.**
* Monthly interest warrants for the financial year would be despatched in advance at the beginning of the year for fixed deposits.
* No tax deduction at source if the fixed deposit holders submits 15 H in case. For any financial year interest exceeds Rs. 2500/-.
* Loan facility upto 75 % on Fixed Deposit and 85 % on Recurring Deposit paid-up amount.
* Pre-mature repayment facility as per terms and conditions
* Your Deposit amount is advanced against Gold Jewels and immovable properties of Madras city limits.
* Transaction with members only. (Rupees Two only for Membership.)

JEWEL LOAN

Jewel loans granted on Gold ornaments at Rs. 255/- per gram i.e. Rs. 2040/- per sovereign (8 gm).

Recurring Deposit not required.

SENIOR CITIZEN DEPOSIT SCHEME 19 % p.a.

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS.)

Minimum Deposit Rs. 10000/- **Period - 12 months.**

RECURRING DEPOSIT SCHEME

(Minimum of Rs. 10/- and in Multiples of Rs. 10/-)

MONTHLY DEPOSIT	100	100	100	100	100	100
PERIOD (Months)	12	24	36	48	60	72
MATURITY VALUE	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9%

	BUSINESS HOURS		WEEKLY HOLIDAY
	WEEK DAYS	SUNDAYS	
HEAD OFFICE Mylapore	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	FRIDAY
BRANCH OFFICE Thiruvanmiyur	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	TUESDAY

K. R. V. RAMANI
President

G. KUMARAVELU
Vice-President

P. S. SAMBASIVAM
Secretary

EGISTERED NO. M. 4392
egistered as Newspaper in Srilanka

